உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியமுண்டு.
27.°C 26.°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 335 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 11, திங்கள் 28.10.2013

## கூட்டமைப்பைக் கேட்டா ஆளுநரை நியமித்தீர்கள்?

### கோத்தாவுக்கு விக்கி பதிலடி



யாழ்ப்பாணம், ஒக்.28
வடமாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறியை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உத்தியோக பூர்வமாகக் கோரவில்லை என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாகவா ஆளுநரை ஜனாதிபதி நியமித்தார்? என்று கேள்வியெழுப்பியுள்ளார் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடந்த வட மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண

21

## பொலிஸ்திணைக்களம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் கீழா?

### கூட்டமைப்பு வெளியிடுகிறது சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 28
பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சிலிருந்து பிரிக்கப்பட்டு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சோடு இணைக்கப்பட்ட பின்னரும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலர் கருத்துக் கூறுவதைப் பார்க்கும் போது, பொலிஸ் திணைக்களம் மீண்டும் இரகசியமான முறையில் பாதுகாப்பு அமைச்சுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதோ என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணசபையின் கன்னியமர்வில் உரையாற்றிய முதலைமச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண மக்களைப் புரிந்துகொண்ட பொலிஸாரே இங்கு தேவை என்று குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இது தொடர்பில் பதிலளித்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய, வடக்கு மாகாணத்துக்கு தனியான பொலிஸ் துறை தேவையில்லை. ஏனைய மாகாணங்களுக்கு இல்லாத

21

# துயிலும் இல்லங்களை அமைக்க கோருபவர்கள் உடனே கைதாவர்

### எச்சரிக்கிறார் கோத்தபாய



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 28
உயிரிழந்த விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் மாவீரர் துயிலுமில்லம் அமைப்பதற்கு எவராவது கோரினால், அவர்கள் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில், சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் கரைச்சிப் பிரதேச சபை என்பன போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு மீளவும் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தன.

இந்த விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவிடம் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று கேள்வியெழுப்பியிருந்தது. அதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிருடன் உள்ள முன்னாள் போராளிகள் யாராவது, போரில் சாவடைந்த தமது சக போராளிகளுக்கு மாவீரர் துயிலும் இல்லம் அமைக்க கோரினால் கைது செய்யப்படுவார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சரி தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அவர்கள் எந்தவொரு இடத்திலும் முன்னிலைப்படுத்தப்பட முடியாதவர்கள் எனவே அவர்களுக்கு நினைவிடங்கள் அமைக்கக்

21

மீண்டும் இயற்கையின் சீற்றம் 06

ஒன்றுமே தெரியாது 07

அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரப்பந்து 22
யாழ்.செயலகமும், கரவெட்டியும் இறுதிக்கு

தென் ஆபிரிக்கா அபார வெற்றி 23

## கூட்டமைப்பினரின் முடிவால் மாநாட்டுக்குப் பாதிப்பில்லை

### அரசு அலட்டிக்கொள்ளாது என்கிறார் அமைச்சர் கெஹலிய



கொழும்பு, ஒக்.28
"பொதுநலவாய மாநாட்டைப் புறக் கணிக்கப்போவ தாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எடுத்துள்ள முடிவானது மாநாட்டில் எவ்வித தாக் கங்களையும் ஏற்படுத்தாது. அதை நாம் வெற்றிகரமாக நடத்தி முடிப்போம்."

இவ்வாறு கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு நேற்றுப் பதிலடி வழங்கியுள்ளது இலங்கை அரசு.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டைப் புறக்கணிப்பதற்கு நேற்று முன்தினம் யாழில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாக முடி வெடுத்திருந்தது. அத்துடன், தமி

21

## கடும் விளைவை சந்திக்க நேரிடும்

### இலங்கைக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.28
"ஈரானிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை இலங்கை நிறுத்தத் தவறினால் பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று இலங்கை ஜனாதிபதியிடம் அமெரிக்கா நேரில் எச்சரிக்கை விடுத்துள்ளது.


கடந்தவாரம் அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் அமெரிக்க வெளி விவகாரச் செயலகத்தின் சிறப்புச் செய்தி ஒன்றுடன் அலரிமாளிகைக்குச் சென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவைச் சந்தித்தார்.

தூதுவர் சிசன் கையளித்த சிறப்புச் செய்தியில், ஈரானிடம் எண்ணெய் வாங்குவதை இலங்கை உடனடியாக நிறுத்தத் தவறினால், பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று இராஜதந்திர மொழியில் எச்ச

21

வலி.வடக்கில்

## மக்களின் வீடுகளை நேற்றும் இடித்துத் தள்ளியது இராணுவம்



யாழ்ப்பாணம், ஒக். 28
வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் பொதுமக்களின் வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகள் நேற்றும் தொடர்ந்து படையினரால் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 382 ஏக்கர் விஸ்தீரணத்தில் உயர்பாதுகாப்பு வலயம் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. இதனுள் இரா

21

## கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை நேற்று திறப்பு

கொழும்பு, ஒக்.28
இலங்கையில் இரண்டாவது அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பட்டது.

கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரையிலான நெ்டுஞ்சாலையில் முதன்முதலாக வாகனத்தை ஜனாதிபதியே செலுத்தி னார்.

பேலியகொட புதிய பாலத்திற்கு அருகிலுள்ள நுழைவா யிலில் நேற்றுக் காலை 9.47 எனும் சுபமு கூர்த்தத்தில் இந்த அதிவேக நெடுஞ்சாலை திறந்துவைக்

21

## பொதுநலவாய மாநாட்டில் சல்மான் குர்ஷித் பங்கேற்பு

### அவரே உறுதிப்படுத்தினார்



கொழும்பு, ஒக்.28
"கொழும்பில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டில் நான் பங்கேற்பேன்" என்றுதெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் குர்ஷித் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

'ரைம்ஸ் நவ்' தொலைக்காட்சிக்கு நேற்றுமுன்தினம் அவர் அளித்த செவ் வியில், "நான் மாநாட்டின் போது அங்கே இருப்பேன் என்பதை என்னால் கூற முடியும். இலங்கையிலுள்ள தமிழர்களின் விவகாரம் இன்னமும் எமக்கு முக்கியம்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர்

21

## பிளாஸ்ரிக் பூமாலையை தவிருங்கள்

### வடக்கு விவசாய அமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.28
பொலித்தீன் பாவனைத் தடைச் சட்டம் வடக்கு மாகாணத்தில் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்த விவசாய அமைச்சர் பிளாஸ்ரிக் பூமாலைகளையும் இயன்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை நாமே ஆளவும் வாழவும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மாவை

யாழ்ப்பாணம், ஒக்.28

எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு எமது நிலத்தை நாமே ஆளவும் சுதந்திரமாக வாழவும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இதனைச் சர்வ தேசத்தில் வாதாடும் ஒருவராக வடமாகாண முதல்வர் உள்ளார். என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.



எமது மக்கள் சர்வாதிகாரத்துக்கு எதிராக வாக்களித்தனர். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழவேண்டும். சுதந்திரமாக ஆள வேண்டும் என்பதற்காகவே அவர்கள் எமக்கு வாக்களித்தனர்.

வடமாகாண சபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

2009 இற்குப் பின்னர் தமிழர் தோற்றுப் போனவர்கள் என்று கூறி எமது இன அடையாளங்களை அழித்து விடுவதற்கு மஹிந்த அரசு இராணுவ, பௌத்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தைப் பின்பற்றி நிற்கும் எமது மக்கள் சர்வாதிகாரத்துக்கு எதிராக வாக்களித்தனர். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழவும் ஆளவுமே என அவர்கள் எமக்கு வாக்களித்தனர்.

தமிழ் மக்களுக்கான உரிய உரிமையைக் கொடுக்க மாட்டோம் என்ற தீர்மானம் தான் ராஜ பக்ஷ அரசிடம் உள்ளது. ஜன நாயகம் இருந்திருந்தால் எம்மில் பலர் உயிரிழந்திருக்கத் தேவையில்லை. மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரங்களையாவது பயன்படுத்த அரசு அனுமதி தரவேண்டும். எமது மக்கள் கொடுத்துள்ள விடுதலைக்கான விலையை யாராலும் ஈடு செய்ய முடியாது. நடைபெற்ற ஜனநாயகப் போரிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி எமது மக்கள் செய்த தியாகம் அளப்பரியது. இராணுவ அடக்குமுறை ஆட்சிக்குள் மக்கள் மாகாண சபை நிர்வாகத்தை தமக்கான தலைவர்களிடம் தந்துள்ளனர். மாகாண சபைக்கிருக்கும் அற்ப சொற்ப சட்டங்களையும் பிரித்தெடுக்க முற்பட்ட திவிநெகும பின்னர் நாட்டின் பிரதம நீதியரசரையும் பதவி நீக்கயது. 'திவிநெகும' தவறு என்று தீர்ப்பளித்ததற்காக அவரது பதவியைப் பறித்தனர்.

போரினாலும் பேரழிவாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கண்ணீரைத் துடைக்கவென்றாலும் மாகாண சபை பயன்பட வேண்டும் - என்றார். (ஐ-4)

# அரசியல் பேச முடியாமல் என்னை ஆக்கிவிட்டனர்

## ஆதங்கப்படுகிறார் சி.வி.கே.

யாழ்ப்பாணம், ஒக்.28

வடக்கு மாகாண சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டமையால் தான் அரசியல் பேச முடியாது உள்ளதாக கவலை தெரிவித்தார் சி.வி.கே.சிவஞானம்.

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

அவைத் தலைவர் அரசியல் பேச முடியாது. மாகாண சபை அமர்வுகளில் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் கூறுவதனை எதிர்த் தரப்பினருக்கும் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் கூறுவதனை ஆளுந் தரப்பினருக்கும் எடுத்துச் சொல்வதே எனது வேலையாகிவிட்டது.



அந்தப் பதவிக்கு நியமித்து என்னை அரசியல் பேச விடாது செய்துவிட்டனர்.

அவைத் தலைவராக இருந்து கொண்டு வெளியே பொது இடங்களில் அவ்வாறு அரசியல் பேசுவதை நான் விரும்பவில்லை. தேவைப்படும் பட்சத்தில் சில விடயங்களை மாத்திரம் கூற முடியும்.

எமது உறுப்பினர்கள் பலருக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு இருக்கிறது. ஆனால் அவர்கள் தெரியாத விடயங்களைத் தேடி அறிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-4)

# மாநாட்டில் இந்தியா பங்கேற்காதென பிரதமர் உடன் அறிவிக்க வேண்டும்

## குர்ஷித்தின் அறிவிப்பு அதிர்ச்சி தருகிறது என்கிறார் கருணாநிதி

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்காது என்று பிரதமர் மன்மோகன்சிங் உடனடியாக அறிவிக்க வேண்டும்" என்று தமிழக முன்னாள் முதல்வரும் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் தலைவருமாறு கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கப்போவதாக இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அறிவித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காவிட்டால் இந்தியா உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் காரியவசம் கூறியிருப்பது கடும் கண்டனத்திற்குரியதாகும். உணர்வு பூர்வமான முக்கிய பிரச்சினையில் இந்தியாவை மிரட்டும் வகையில் அவர் கருத்து தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. ஒரு நாட்டின் தூதுவர் என்ற வரையறைக்குள் மட்டுமே அவர் கருத்துக் கூறவேண்டும்.

பொதுநலவாய மாநாட்டைப் புறக் கணிக்கப் போவதாக வடமாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் மிகப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவோடு ஆட்சி அமைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுசெய்துள்ள நிலையில், இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கப்போவதாக அறிவித்திருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது" என்று அதில் உள்ளது.





இலங்கையின் இரண்டாவது அதிவேகப் பாதையான கொழும்பு - கட்டுநாயக்க வீதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து புதிய அதிவேக வீதியில் தமது காரைச் செலுத்தியதன் மூலம் வாகனப் போக்குவரத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

போலிய கொடையிலிருந்து சீதுவை வரை தமது காரில் முதன் முதலில் அதிவேகப் பாதையில் பிரயாணம் செய்த ஜனாதிபதி அதற்கான கட்டணத்தையும் செலுத்தினார். 26 கிலோ மீற்றர் நீளமுடைய இவ்வீதி சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 350 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் செயற்றிட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார். (10)

# இந்திய அழுத்தத்தை அடுத்து இலங்கை மாவட்ட அமைச்சு திட்டத்தை நிறுத்தியது?

யாழ்ப்பாணம், ஒக். 28

மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் திட்டத்தை அரசு கைவிட்டிருப்பதாக தெரியவருகிறது. இந்தியா கொடுத்த அழுத்தம் காரணமாகவே ஒத்திவைத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

வடமாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதற்கு அரசு உத்திதேசித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதை உடனடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்டது.

இதேவேளை அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் அரச தலைவர்களுடனான சந்திப்புக்களின் போது மாவட்ட அபிவிருத்தி அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான இலங்கை அரசின் யோசனைக்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். குறிப்பாக இந்தத் திட்டம் தொடர்பில் மன்மோகன்சிங்கின் அறிவுறுத்தலின் பேரில் இந்திய அரசின் விசனத்தை குர்ஷித் வெளியிட்டதாக புதுடில்லி வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் திட்டம் தொடர்பிலான இந்திய அரசின் கடும் ஆட்சேபனையை அடுத்தே அந்தத் திட்டத்தை இலங்கை அரசு கைவிட்டதாக அல்லது தற்போதைக்கு ஒத்திவைத்திருப்பதாகவும் அறிய வருகிறது. (ஐ)

# கட்டணம் நிலுவையில் விநியோகம் நிறுத்தம்

கொழும்பு.ஒக்.28

நிலுவையில் உள்ள கட்டணச் சிட்டைகளுக்கான பணம் செலுத்தப்படாததால் பல சிறைச்சாலைகளுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச, தனியார் நிறுவனங்கள் தமது விநியோகங்களை இடைநிறுத்தியுள்ளன. அதனால் சிறைச்சாலைகள் பெரும் சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. நிலுவையில் உள்ள சிட்டைகளுக்கான பணத் தொகைகள் செலுத்தப்படாததால் கண்டி, போகம்பரை சிறைச்சாலையின் மின் விநியோகம் கடந்த 22 ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய அத்தியாவசிய சேவைகளையும் வழங்க முடியாது என்று அந்தச் சேவைகளுடன் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22)

## நினைவுப் பேருரை

யாழ்.மத்திய கல்லூரியின் கணபதி இராசதுரை நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் கணபதி இராசதுரையின் 8 ஆம் ஆண்டு நினைவுப் பேருரையும் ஞாபகார்த்த பட்டிமன்ற சமரும் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-14)

# இலங்கை வரும் இளவரசர் சார்ள்ஸுடன் 50 பேர் கொண்ட விசேட பரிவாரம்

கொழும்பு, ஒக்.28

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் 50 பேர் கொண்ட ராஜதந்திரிகள் குழுவுடன் இலங்கை வரவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் சார்ள்ஸின் மனைவியும் இதன் போது இலங்கை வருவார் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமாகச் செல்லும் இளவரசர் சார்ள்ஸ் அந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கை வரவுள்ளார். இவருடன் 12 பாதுகாப்பு அதிகாரிகள், குடும்ப வைத்தியர், சமையற்காரர், ஊடகக் குழுவினர், பணியாளர்கள் மற்றும் அழகுக் கலை நிபுணர்கள் என 50 வரையானோர் அடங்குகின்றனர்.


பிரிட்டன் மகாராணியின் உத்தியோகபூர்வ "ரோயல்" விமானம் இப் பயணத்தில் பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் பிரிட்டன் விமான சேவைக்குச் சொந்தமான வாடகை விமானமொன்றின் மூலமே அவர் இலங்கைக்கு வருவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நவம்பர் 13ஆம் திகதி கட்டுநாயக்காவுக்கு வரும் இளவரசர் சார்ள்ஸ், நவம்பர் 14இல் தமது 65 ஆவது பிறந்த தினத்தை கொழும்பில் கொண்டாடவுள்ளார்.

இளவரசர் சார்ள்ஸின் 5 நாள் பயணத்தின் போது பொதுநல வாய மாநாட்டை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் தலதா மாளிகை, பேராதனை தாவரவியல் பூங்கா, நுவரெலியா தேயிலைத் தோட்டங்கள் என்பவற்றைப் பார்வையிடவுள்ளார். (ஐ-22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வடக்கு முதலமைச்சர், உறுப்பினர்களுக்கு நல்லூர் பிரதேச சபையில் மகத்தான வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக்.28
வடமாகாண முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.
மங்கல விளக்கேற்றல், தமிழ்த் தாய் வாழ்த்து, மாவீரர்களுக்கான அஞ்சலியுடன் நிகழ்வு ஆரம்பமானது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.
வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் மாகாண அவைத் தலைவர், அவையின் பிரதித் தலைவர், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வை நல்லூர் பிரதேச சபை ஏற்பாடு செய்திருந்தது.
நிகழ்வில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சபை உத்தியோகத்தர்கள், பிரதேச, நகர சபைகளின் தலைவர்கள், சபைகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர், மாகாண சபை அவைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.
உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆ.வரதீஸ்வரன், உள்ளூராட்சி பற்றிய நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.
பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் வரவேற்புரையையும் சபையின் உப தவிசாளர் கோமதி ரவிதாஸ் நன்றியுரையையும் வழங்கினர். (ஒ-47-41)

## சுகாதார மேம்பாட்டு கண்காட்சி இன்று

முல்லைத்தீவு, ஒக்.28
முல்லைத்தீவில் சுகாதார மேம்பாட்டுத் திட்டக் கண்காட்சியொன்று இன்று இடம்பெறவுள்ளது.
இந்தக் கண்காட்சி இன்று காலை 9.30 மணி யளவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமாகும்.
வடமாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கமும்,
சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.திலீபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆர்.குருபரன், 59 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி வி.ஜி.வி. அகலமல்பே ஆகியோரும் கலந்துகொள்வர்.
இந்தக் கண்காட்சியில் கரைதுறைப்பற்று கல்விக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பொருள்களைக் காட்சிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## புதுக்குடியிருப்பில் சிறுவர் தின நிகழ்வு

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் புதுக்குடியிருப்பில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றன. இந்த நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்கு பற்றியிருந்தனர். நிகழ்வில் சிறுவர்களால் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். (வ-14)

# ஓய்ந்துவிட்டது அரசியல் அச்சுறுத்தல் கூட்டமைப்பின் வெற்றியை அடுத்து


*- வடமாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம்*

யாழ்ப்பாணம், ஒக்.28
வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதனால் அரசியல் அச்சுறுத்தல் இல்லாத சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் என்ற சொல் மறக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொருவரும் தம்மை சேவகர்களாகக் கருதி மக்களுக்குச் சேவை செய்ய தயாராக வேண்டும்.
இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினரும் முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளருமான அரியரத்தினம் தெரிவித்தார்.
வடமாகாண முதலமைச்சர் உறுப்பினர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு ஒன்று நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:
போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 4 வருடங்களாக பிறரின் நிர்ப்பந்தத்தின் பேரில் பலர் அரச சேவையில் பணி புரிந்தார்கள். அதனால் சுதந்திரமாகப் பணியாற்ற முடியவில்லை. தற்போது அரசியல் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.
அதிகாரிகள் என்ற சொல் எப்போதோ மறந்துவிட்டது. மக்களுக்கு சேவை செய்பவர்களான எம்மை நாம் மாற்ற வேண்டும். அதனை உணர வேண்டும். உணரத் தவறுபவர்கள் அதனை உணர்த்த வேண்டும். மக்கள் சேவையை அவர்கள் திறம்படச் செய்ய வேண்டும் - என்றார்.
நிகழ்வில் உரையாற்றிய திருமதி அனந்தி சசிதரன் வடக்கு ஆளுநரின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்த காலம் மாறிவிட்டது. ஆளுநரின் அழுத்தத்தால் உத்தியோகத்தர்கள் பலரும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில் திணறினர்.
நாங்கள், தமிழர் என்ற உணர்வுடன் எங்கள் உரிமைக்காகவும் போராட வேண்டும் - என்றார். (ஒ-4)

*ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால்*

## சிறப்பாக நடத்தப்பட்ட சிறுவர், மாற்றுவலுவுடையோர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.28
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தலைமையில் நடைபெற்றன.
"குடும்ப உறவுகளைப் பாதுகாப்போம்" என்ற பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ், ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரி வீரசிங்க, வண.பிதா பீற்றர், சிறுவர் நல அதிகாரி எஸ்.கிருபாகரன், மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் க.மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், ஆசியுரை பிரதம விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர்கள் உரை, ஆதிவாசிகள் நடனம், பட்டிமன்றம் உட்பட கலை நிகழ்வுகள், முதியோர் கௌரவிப்பு, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிறுவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.
நூறு வயதைக் கடந்த நாரந்தனையைச் சேர்ந்த முதியவரான சரவணமுத்து பேரம்பலம் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் பொன்னாடை அணிவித்து பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
சிறுவர், மாற்று வலுவுடையோருக்கான கௌரவங்களை அரச அதிபர் உட்பட ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன், வலயக் கல்விப் பணிப்பார் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் வழங்கினர். (வ-7)



# வீட்டுக் கூரையை பிரித்து திருட்டு


*மல்லாவியில் 4 பேர் கைது*

மல்லாவி, ஒக்.28
மல்லாவிப் பகுதியில் பட்டப் பகலில் கூரை பிரித்து 10 லட்சம் பெறுமதியான தங்க நகை திருடிய சம்பவத்தில் மோப்ப நாய்களின் உதவியுடன் சந்தேகத்தின் பெயரில் 4 பேரை மல்லாவிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மல்லாவி அனிஞ்சியன்குளம் பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவரது வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பட்டப் பகலில் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் வீட்டின் கூரை பிரித்து திருடப்பட்டன.
குறித்த வீட்டிலுள்ளவர்கள் அரச உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதால் பணி நிமிர்த்தம் வீட்டை வழமை போல் பூட்டிவிட்டு கடமைக்குச் சென்றுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீட்டின் மேற் கூரையைப் பிரித்து உள் நுழைந்த இனந்தெரியாத சிலர் அங்கிருந்த 10 லட்சம் பெறுமதியான தங்க நகைகளைத் திருடிக் கொண்டு வீட்டின் பின் கதவை உடைத்து தப்பிச் சென்றுள்ளனர்.
கடமை நேரம் முடிவடைந்து வீடு திரும்பிய வீட்டின் உரிமையாளர் திருட்டு இடம் பெற்றதை அறிந்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மோப்ப நாய்களுடன் அந்தப் பகுதியை சல்லடை போட்டனர் பொலிஸார். மோப்ப நாய்கள் காட்டிக் கொடுத்த 4 பேரை சந்தேகத்தின் பேரில் அவர்கள் கைது செய்துள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-14-415)

*அந்தப் பகுதியை சல்லடை போட்ட பொலிஸார் மோப்ப நாய்கள் காட்டிக் கொடுத்த 4 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக கோபுரத்தில் போராட்டம்



புதுவை, ஒக்.28
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று கோரி தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏறி இளைஞர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.
புதுவையில் உள்ள தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
"தமிழர்கள் மீது இனப்படு கொலையைக் கட்டவிழ்த்து விட்டது இலங்கை அரசு. போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. அந்த அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க வேண்டும்.
தனி ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பை நடத்த இந்தியா வலியுறுத்த வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கோஷம் எழுப்பினர்.
பொலிஸாருக்கும் போராட்டம் நடத்தியோருக்கும் இடையே நீண்ட இழுபறியின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (ற)

# மாநாட்டைப் புறக்கணிப்பதால் இந்தியாவுக்கே அதிகம் பாதிப்பு

## சுதர்சன நாச்சியப்பன் கருத்து



சென்னை, ஒக்.28
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றுக் கொள்வதால் இந்தியாவுக்கு அநேக நன்மைகள் கிடைக்கும். அதனால் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பது குறித்து முடிவெடுப்பது சிரமான ஒன்று என்று தெரிவித்துள்ளார் மத்திய வணிகத் துறை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது,
"இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றால் இந்தியாவுக்கு நன்மைகள் கிடைக்கும். பல ஐரோப்பிய நாடுகள் இந்தியாவிலோ வடக்கு மாகாணத்திலோ முதலீடு செய்ய ஆர்வம் காட்டவில்லை. அந்த முதலீடுகளை கொண்டு வருவது பிரதமரின் பொறுப்பாக உள்ளது.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் முதலீடுகளைக் கொண்டு வர முடியும். இந்த நிலையில் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று கோருவது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று கூறியுள்ளார்.
தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்று தெரிவித்து இந்திய மத்திய அரசு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் கோரி வருகின்றன. (ற)

# பொதுநலவாய மாநாட்டை முற்றாகப் புறக்கணியுங்கள்

**இந்திய மத்திய அரசிடம் கோருகின்றார் டி.ராஜா**

சென்னை, ஒக்.28
தமிழர்களின் உணர்வுகளை மதித்து பொதுநலவாய மாநாட்டில் இந்தியத் தரப்பில் இருந்து எவரும் கலந்து கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
"பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று தமிழக சட்ட சபையில் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அது அனைத்துத் தமிழர்களின் உணர்வைப் பிரதிபலிக்கும் தீர்மானமாகும். தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இந்திய அரசு சார்பாகப் பிரதமரோ அல்லது வேறு யாராவதோ இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது. இது குறித்து தனது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் விரைவில் தெளிவுபடுத்த வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

# மருதனார்மடம் சந்தையில் பழுதடைந்த மரக்கறிகள் அழிப்பு



வலி. வடக்கு. ஒக். 28
மருதனார்மடம் சந்தையில் பொது சுகாதார பாசோதகர்களும் மற்றும் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து நேற்று மேற்கொண்ட திடீர் பாசோதனையின் போது மருந்தடிக்கப்பட்டு பழுக்கவைக்கப்பட்ட பழவகைகள் உட்பட அழுகிய மரக்கறி வகைகளும் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன.
வலி. தெற்கு உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட மருதனார் மடம் சந்தையில் மருந்து அடிக்கப்பட்டு பழுக்கவைக்கப்பட்ட மாம்பழங்கள், வாழைக்குலைகள் மற்றும் அழுகிய மரக்கறி வகைகள் விற்பனை செய்யப் படுவது தொடர்பாக உடுவில் பொதுசுகாதார வைத்தியதிகாரி பணிமனைக்கும் உடுவில் பிரதேச சபைக்கும் தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.
இந்நிலையில் நேற்று உடுவில் பிரதேச சபையின் ஊழியர்களும் உடுவில் பொது சுகாதார பரிசோதகர்களும் இணைந்து திடீர் பரிசோதனையை சந்தைப் பகுதியில் மேற்கொண்டனர்.
இதன்போதே பழுதடைந்த குறித்த பொருள்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன. அவற்றை வைத்திருந்த சந்தை வியாபாரிகளும் எச்சரிக்கப்பட்டனர். (வ-86)

## தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில்

# விசேட இரு அறைகள் திறப்பு



பௌதிக சிகிச்சை அறை



புற்றுநோய் மருந்து சிகிச்சையளிக்கும் அறை

வலி.வடக்கு, ஒக்.28
தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் புற்று நோயாளர்களின் நன்மை கருதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரண்டு விசேட அறைகள் திறந்து வைக்கப்பட்டன.
மானிப்பாய் மல்லாகம் லயன்ஸ் கழகங்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பௌதிக சிகிச்சை செயற்பாட்டு அறை மற்றும் புற்றுநோய் மருந்து சிகிச்சையளிக்கும் அறைகளும் திறந்து வைக்கப்பட்டன.
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்றுநோய் பிரிவில் மருத்துவமனை பொறுப்பதிகாரி வைத்திய நிபுணர் பி.நளாயினி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கை புற்றுநோய் மருத்துவ நிபுணர் திருமதி சி.இராஜசூரியா, லயன் கே.தங்கராசா சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராசா, வடமாகாண சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் பா.கஜதீபன் உட்பட மற்றும் பலர் ஏற்றினர்.
பௌதீக சிகிச்சை அறையை லயன் எஸ்.தங்கராசா திறந்து வைத்ததுடன் உபகரணங்கள் மல்லாகம் தெல்லிப்பழை லயன் எஸ்.ஆறுமுகநாதன், லயன் எஸ்.தங்கராசா ஆகியோர் இணைந்து தெல்லிப்பழை பதில் மருத்துவ அதிகாரியிடம் கையளித்தனர்.
புற்றுநோய் மருந்து சிகிச்சையளிக்கும் அறைக்கு பெறுமதிமிக்க தளபாடங்களை யாழ்.நகர முன்னாள் முதல்வர் ஆர்.நல்லையா குடும்பத்தினரின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு அதனை ஆர்ஜன் திறந்து வைத்தார்.
நினைவுப் பெயர்ப் பலகையை சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திறந்து வைத்தார். (வ-86)

# வவுனியா வடக்கு வலயத்தில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

**உடன் நிவர்த்தி செய்யுமாறு பெற்றோர் கோரிக்கை**

வவுனியா, ஒக்.28
வவுனியா வடக்கு கல்வி வல யத்தில் உள்ள இரண்டு கோட்டப் பாடசாலைகள் பெரும்பாலானவற்றில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவு கின்றது. இதனால் தமது பிள்ளைகளின் கல் வித் தரம் வீழ்ச்சியடைவதாகவும், எதிர்காலத்தில் வலயத்தின் கல்வி நிலை விழ்ச்சி அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.
இந்தக் கல்வி வலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் குறைந்து செல்வதாகவும், இதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையே காரணம் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.
சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருப்பதாகவும், சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கின்றனர்.
குறிப்பாக விஞ்ஞானகுளம் நவரட்ணம் வித்தியாலயத்தில் 24 பிள்ளைகள் கற்கும் நிலையில் அங்கு இரண்டு ஆசிரியர்கள் மட்டும் உள்ளனர். இதேவேளை சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் 21 பிள்ளைகளுக்கு 4 ஆசிரியர்கள் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
அத்துடன் கோவில் குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலைக்கு 5 மாதங் களாக அதிபர் இல்லாது இயங்குவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். இவ்வாறு எழுந்துள்ள குற்றச் சாட்டுக் குறித்து வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,
ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது உண்மை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு பொதுவாக நெருக்கடியுள்ளது. உயர்தர கலைப் பிரிவில் தமிழ், புவியியல் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.
அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப் பட்டது. எனினும் குறித்த பாடசாலைக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி ஆறுமுகம் (இளையதம்பி)

(தர்மகர்த்தா பத்தன்மோட்டை முருகன் கோவில் கண்டாவளை, முன்னாள் இணக்கசபை தலைவர் கண்டாவளை)



தாவளை, இயற்றாலை, மந்துவில் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், பத்தன் மோட்டை கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் (இளையதம்பி) நேற்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சறோஜா தேவி, தேவராசா (தபால் உத்தியோகத்தர், தர்மபுரம்), தவராஜா (லண்டன்), தவராணி (ஆசிரியை, பரந்தன் இந்து மகாவித்தியாலயம்), துபாஸினி (சுவிஸ்), ராஜினி (லண்டன்), சுபாஸ்கரன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு), சுபா ஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாரஞ்சன், யோகநந்தினி (ஆசிரியை, பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), ரஞ்சிதமலர் (லண்டன்), சிவநேசர் (அதிபர், பரந் தன் இந்து மகாவித்தியாலயம்), சிவரூபன் (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்), கிருஜா (உள சமூக உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வவுனியா), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, வீரசிங்கம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், எழிலோன், சாம்பவி, பிரணவி, அபிசன், அன்ஸி, அஜந், சஸ்டிகன், அரவிந்தை, பிரியந், சந்யா, யாதவி, கனியவன், அட்சயா, ஆதித்யா, மாதுளா, மகீசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைக்காக நாளை (29.10.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 02.00 மணிக்கு இல.16, மதினா நகர் வீதி, மகாறம்பைக்குளம், வவுனியாவில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் பூந்தோட்டம் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, மதினா நகர் வீதி,
மகாறம்பைக்குளம், வவுனியா

C 13447.17.14


தகவல்: குடும்பத்தினர்.
077 8862546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பகுதியில் மலேரியா நோயாளி

தென்மராட்சி, ஒக்.28
தென்மராட்சி பிரதேசத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டார்.
இலங்கையில் மலேரியா காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் குறித்த நோயாளி இனங்காணப்பட்டதால் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் துரிதகதியில் செயற்பட்டு அதனை மேலும் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.
வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு காய்ச்சல் தொடர்ச்சியாகக் காணப்பட்டதால் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் இயங்கி வரும் சுய பரிசோதனைப் பிரிவில் இரத்த மாதிரியை வழங்கிவிட்டு வீடு சென்றுள்ளார். இரத்த பரிசோதனையில் இவருக்கு சாதாரண மலேரியா ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகத்தினர் நோயாளியை வைத்தியசாலைக்கு வரவழைத்து உரிய சிகிச்சைகள் வழங்கியதுடன் அவரது குடும்பத்தினர், அயலவர்கள் ஆகியோரையும் பரிசோதனைக்கு உட்படுத்தினர். அத்துடன் நோயாளியின் வசிப்பிடம் உட்பட அயல் பகுதிகளிலும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
குறித்த நோயாளி வைத்திய சாலையில் இயங்கும் காய்ச்சல் சுய பரிசோதனை பிரிவுக்கு தானாகவே வந்து பரிசோதனைகளை மேற்கொண்டதால் மலேரியா ஏனையோருக்கும் பரவாமல் தடுக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
இதேவேளை- காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனையை இலவசமாகப் பெற்றுக் கொள்ள அறிவுரை வழங்குமாறு ஆயுள் வேத வைத்தியசாலைக்கான தனியார் வைத்தியசாலைகள், தனியார் மருந்தகங்களை வைத்தியசாலைகள் நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (வ-9)

# உள்ளூராட்சி வார நிகழ்வுகளை பார்வையிட்டு வரும் அதிகாரிகள்



தென்மராட்சி, ஒக்.28
வடமாகாண உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளூராட்சி வார நிகழ்வுகளை உள்ளூராட்சித் திணைக்கள உயர் மட்ட அதிகாரிகள் பார்வையிட்டு வருகின்றனர்.
இதில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.ஏ.அப்துல் மஜீத், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.
சாவகச்சேரி நகர சபைக்கு வியாழக்கிழமை பயணம் செய்த குழுவினர் நகர சபையின் உள்ளூராட்சி வார செயற்பாடுகளை அவதானித்து அன்றைய தினம் மரம் நடுகை தினமாதலால் நகர மண்டப முன்றலில் மரக் கன்றுகளையும் நட்டு வைத்தனர். (9)

# குடாநாட்டை முற்றுகையிடும் தெற்கு வியாபாரிகள்

யாழ்ப்பாணம், ஒக்.28
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தென்பகுதியிலிருந்து நடைபாதை வியாபாரிகள் குடாநாட்டை முற்றுகையிட்டு வருகின்றனர்.
தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் ஒரு வார காலமே உள்ளது. இந்த நிலையில், பண்டிகை வியாபாரத்தைக் குறிவைத்து தென்பகுதிநடைபாதை வியாபாரிகள் குடாநாட்டுக்கு அதிகளவில் வருகின்றனர். முற்றவெளி பிரதேசத்தில் இதற்கென அவர்கள் தனியாக கொட்டகை போட்டு வியாபாரப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
வீரசிங்கம் மண் டபத்துக்கு முன்பாகவுள்ள பகுதி மற்றும் முனீஸ்வரன் வீதி, புல்லுக்குளம் வீதி போன்றவை தீபாவளி பண்டிகைக்காக நடைபாதை வியாபாரத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.
இதனைவிட நடைபாதை வியாபாரிகள் குடாநாட்டில் கிராமப் புறங்களுக்குச் சென்று அங்கும் உடுபுடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
நடைபாதை வியாபாரிகளின் இத்தகைய வியாபார நடவடிக்கையால் நகர்ப்புற புடைவை வர்த்தக நிலையங்களின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக புடைவை உரிமையாளர்கள் விசனம் தெரிவித்தனர். (வ-17)

# வாழைத் தோட்டங்களில் திருட்டு; இரவுநேரக் காவலில் விவசாயிகள்




யாழ்ப்பாணம், ஒக்.28
வலி.கிழக்கு பிரதேசத்தில் வாழைத் தோட்டங்களிலும் திருடர்களின் கைவரிசை அதிகரித்ததை அடுத்து விவசாயிகள் தமது வாழைத் தோட்டங்களில் இரவில் காவற் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
கடந்த வாரம் புன்னாலைக் கட்டுவன், ஈவினை பகுதியில் வாழைத் தோட்டங்களில் வாழைக் குலைகளை திருடர்கள் வெட்டி களவாட முற்பட்ட வேளை பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர்.
அதனையடுத்தே வாழைச் செய்கையாளர்கள் தமது வாழைத் தோட்டங்களில் இரவு வேளையில் காவற் கடமைகளில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிந்தது.
கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, ஈவினை, புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய், ஊரெழு போன்ற பகுதிகளில் விவசாயிகள் சிலர் இவ்வாறு வாழைத் தோட்டங்களில் இரவில் காவற் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

# நல்லின புல் வளர்ப்பை ஊக்குவிக்க மானிய நிதியுதவி

## வாழ்வெழுச்சித் திட்டத்தின்மூலம்

அச்சுவேலி, ஒக்.28
யாழ்.மாவட்டத்தில் கால் நடைகளுக்கான போஷாக்கு உணவான நல்லினப் புல் வளர்ப்புக்காக வாழ்வெழுச்சித்திட்டத்தின் (திவி நெகும) கீழ் கால் ஏக்கருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம் ஏக்கர் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா ஊக்குவிப்பு உதவு தொகை மானியமாக வழங்கப்படு'கின்றது.
50 வீத நிவாரண அடிப்படையிலான இந்தப் புல் வளர்ப்பு முன்னோடி திட்டத்தில் இணைந்து நல்லினப் புல்களை வளர்க்க விரும்புவோர் பிரதேச கால் நடை வைத்திய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளலாம் என யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கால்நடை வளர்ப்பை ஊக்குவித்தல், பசுப்பாலில் தன்னிறைவு பெறல் என்ற நோக்கில் நல்லினப் புல் வகைகளை வளர்ப்பதற்கு ஏற்படும் செலவீனத்தில் 50 வீதத்தை மானிய உதவியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வாழ் வெழுச்சித் திட்டத்தின் (திவி நெகும) கீழ் வழங்கவுள்ளது.
புல் வளர்க்கப்படும் செலவில் 50 வீதம் மானிய உதவியாக வழங்கப்படவுள்ளது.
புல் வளர்ப்பதற்கு ஏற்படும் செலவில் ஆகக்கூடியது கால் ஏக்கருக்கு 1¼ லட்சம் ரூபா அல்லது செலவில் 50 வீதம் வழங்கப்படும். மானிய ஊக்குவிப்பு உதவு தொகைக்கு நீர் இறைக்கும் இயந்திரம், தூவல் நீர்ப்பாசனக் கருவி சாதனங்கள், புல் நடுகை பகுதியில் பாது காப்பு வேலிக்கான முட் கம்பி, சிமெந்து தூண் என்பன வழங்கப்படும். இதில் 50 வீத தொகையை பயனாளி செலவு செய்ய வேண்டும்.
குறித்த வேலைத்திட்டத்தில் பங்குகொள்ள யாழ்.மாவட்டத்தில் பயனாளிகள் ஆர்வம் கொண்டுள்ளனர்.
நல்லின புல் உற்பத்தி மூலம் கால் நடைகளுக்கு போஷாக்கு உணவு கிடைப்பதோடு பயனாளிகள் தேவைக்கு எஞ்சியதை விற்பனை செய்யவும் முடியும்-என்றார். (வ-11)


# இந்து மயானம் துப்புரவு

வடமராட்சி, ஒக்.28
மந்திகை கருகம்பன் இந்து மயானத்தில் உள்ள பற்றைகள், சிறிய மரங்கள் என்பன "பைக்கோ" இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு, துப்புரவு செய்யப்பட்டுள்ளது.
உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை பிரதேசசபையினர், புலோலி உப அலுவலகம் பொதுமக்களின் பங்களிப்புடன் இந்தத் துப்புரவுப் பணியை மேற்கொண்டனர். (வ-8)

# சண்டிலிப்பாயில் டெங்கு ஒழிப்பு;

## சுகாதாரச் சூழலைப் பேண நடவடிக்கை





வலி.வடக்கு, ஒக்.28
டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள வீடுகள், பொது இடங்கள், அரச திணைக் களங்கள், தனியார் நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் மழை காலம் ஆரம்பமான நிலையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழலை துப்புரவான முறையில் பேண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.
இந்த வாரத்தில் 7 ஆயிரத்து ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடு கள், 39 பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங் கள் அரச சார்பற்ற, நிறுவனங்கள் 62 இற்கும் மேற்பட்டவைகளும் பார்வையிடப்பட்டுள்ளன.
குறித்த இடங்களைப் பார்வையிட்ட வேளையில் ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட இடங்கள் டெங்கு பரவக்கூடிய அபாயமான நிலையில் காணப்பட்டன. அதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகள் உடனடியாக சுத்தம் செய்யப்பட்டதுடன் அத்தகைய நிலையில் சூழலை வைத்திருந்தவர்கள் கடுமையாக எச்சரிக் கையும் செய்யப்பட்டுள்ளனர்.
பொது சுகாதார பரிசோதகர்கள் மருத்துவ மாதுகள், கிராம அலுவலர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராமிய மட்ட சுகாதாரக் குழுக்கள், பொலிஸார், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். (வ-86)

# பாம்புக் கடிக்கு இலக்கான மூவர் மருத்துவமனையில்

அண்மையில் மழை பெய்ததையடுத்து தினமும் பாம்புகளால் கடியுண்டு மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
வெள்ளிக்கிழமை மட்டும் பாம்பால் கடியுண்ட மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பாலாவி வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு கனகசிங்கம் (வயது-56), மறவன்புலோவைச் சேர்ந்த செல்வம் விஜயராணி (வயது-35), பூநகரி, மடத்தைச் சேர்ந்த வசந்தகுமார் விேனாதர்சன் (வயது-20) ஆகியோரே பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ-9)

# யாழ். நகரில் அதிகரிப்பு பொலிஸாரின் இரவு ரோந்து

யாழ்ப்பாணம், ஒக்.28
யாழ்.நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் பொலிஸாரின் இரவு ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
தற்போது இரவு வேளையில் இடம்பெறும் திருட்டு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் அதை உடனடியாகத் தடுக்கும் நோக்கிலுமே பொலிஸாரின் ரோந்துப் பணி அதிகரிக்கப்பட்டுள்ளது.
நல்லூர், கொழும்புத்துறை, அரியாலை, இருபாலை, கோப்பாய், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிமே பொலிஸார் இரவு வேளைகளில் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மூலம் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இயற்கையின் சீற்றம்

## ஒரிசாவில் கடும் மழை; 52 பேர் சாவு



புதுடில்லி, ஒக்.28
ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒரிசாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளனர். 78 ஆயிரம் பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
ஆந்திர மாநிலம் மற்றும் ஒரிசாவில் கடந்த 4 தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. அதையடுத்துகிருஷ்ணா, கோதாவரி போன்ற ஆறுகள் பெருக்கெடுக்கத் தொடங்கியுள்ளன. அதனால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
ஆந்திரா மற்றும் ஒரிசா ஆகிய பிரதேசங்களில் இன்னும் 48 மணி நேரத்துக்கு கன மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதனால் அங்கு வெள்ளப் பாதிப்புகள் வெகுவாக அதிகரிக்கும் என்று பேரிடர் முகாமை அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.(ற)

**ஆந்திரா மற்றும் ஒரிசா மாநிலங்களை கடந்த வாரம் பைலின் புயல் கடுமையாகத் தாக்கியது. அதிலிருந்து மீள்வதற்கு முன்னர் தற்போது மீண்டும் மழை கொட்டத் தொடங்கியுள்ளது.**

## நச்சுக் கருத்தை பரப்புகிறார் மோடி

### ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக்.28
இந்தியா முழுவதும் சிறுபான்மையினருக்கு எதிராக மோடி நச்சுக் கருத்துக்களை பரப்பி வருகின்றார் என்று மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.
திருச்சியில் மத்திய அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் கூறும் போது.
"பாரதிய ஜனதா கட்சி தற்போது முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றது. அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி சிறுபான்மையினருக்கு எதிராக நச்சுக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றார். அது கண்டிக்கத்தக்கது. தற்போதைய காங்கிரஸ் அரசு மக்களின் நலனைக் கருத்தின் கொண்டே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது" என்று தெரிவித்தார். (ற)

## நளினிக்காக உண்ணாது போராடும் முருகன்

சென்னை, ஒக்.28
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினிக்கு தகுந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்து அவரின் கணவர் முருகன் சிறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தி வருகின்றார்.
குறித்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையிலும், முருகனின் மனைவி நளினி வேலூர் பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் முருகனைச் சந்தித்த நளினி தன்னை சிறையில் பார்க்க வருபவர்களை சரியாக பார்க்க அனுமதிப்பது இல்லை என்றும் மேலும் தனக்கு வழங்கப்படும் உணவு சரியில்லை என்றும் முருகனிடம் கூறியுள்ளார். அதையடுத்தே நளினிக்கு போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கோரி முருகன் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றார். அதையடுத்து போராட்டத்தை கைவிடுமாறு முருகனிடம் சிறை அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.(ற)

## ஜெகன் மீது செருப்பு வீச்சு



ஹைதராபாத், ஒக்.28
தனித் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்திவரும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி மீது செருப்பு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தனித் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் அவர் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பும்போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.
"கூட்டத்தில் கலந்துகொண்ட ஜெகன் மோகன் கூட்டடம் முடிந்து வெளியேறியபோதே அவர் மீது செருப்பு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. செருப்பை வீசியவரை கூட்டத்தில் இருந்தவர்கள் பிடித்து எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளனர் ஹைதராபாத் பொலிஸார்.
ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் இந்தச் சம்பவத்தால் பெரும் பரபரப்பு நிலவியது. (ற)

## ஒட்டுக்கேட்பு நம்மிடம் நடக்காது; பிரதமரிடம் கைபேசி இல்லையே

### மன்மோகன் சிங்கின் செயலாளர் கூறுகின்றார்

புதுடில்லி, ஒக்.28
ஒட்டுக் கேட்புகள் குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கைத் தொலைபேசி, மின்னஞ்சல் முகவரி என்பன கிடையவே கிடையாது என்று தெரிவித்துள்ளார் அவரது அலுவலகச் செய்தித் தொடர்பாளர்.
அமெரிக்க உளவு அமைப்பு 35க்கும் அதிகமான நாடுகளின் தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல் தரவுகள் என்பவற்றை இரகசியமாக உளவு பார்த்தது என்ற தகவல் அண்மையில் வெளியாகியிருந்தது. அதனால் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதுடன் அமெரிக்காவின் அந்த நடவடிக்கைக்கு பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும் இந்தியப் பிரதமர் அலுவலகம் இது குறித்து எந்தவிதக் கருத்துக்களையும் வெளியிடவில்லை.
இது குறித்து இந்தியப் பிரதமர் அலுவலகச் செய்தித் தொடர்பாளரிடம் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கைத்தொலைபேசியும் கிடையாது. மின்னஞ்சலும் கிடையாது. அவருக்கென்று தனிப்பட்ட தொலைபேசி கூட கிடையாது. எனவே ஒட்டுக் கேட்பது குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

**அமெரிக்க உளவு அமைப்பு 35க்கும் அதிகமான நாடுகளின் தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல் தரவுகள் என்பவற்றை இரசியமாக உளவு பார்த்தது என்ற தக வல் அண்மையில் வெளியாகி யிருந்தது.**



## மோடியின் கூட்டத்தில் வெடித்தன குண்டுகள்

பாட்னா, ஒக்.28
பீகார் தலைநகர் பாட்னாவில் இடம்பெற்ற 6 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். பாட்னாவில் நடைபெற்ற நரேந்திர மோடியின் பரப்புரைக் கூட்டத்திலும் சக்தி குறைந்த குண்டுகள் வெடித்ததால் பெரும் பரபரப்பு நிலவியது.
நேற்றுக்காலை பாட்னா ரயில் நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று திடீரென வெடித்துச் சிதறியது. அதையடுத்து தேடுதல் மேற்கொண்ட வெடிகுண்டு நிபுணர்கள் இரு குண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்க வைத்தனர்.
அதேவேளை, பாட்னாவில் நரேந்திர மோடி பங்கேற்ற கூட்டத்திலும் சக்தி குறைந்த குண்டுகள் வெடித்தன. மேடைக்கு மோடி வருவதற்கு முன்னதாக இந்த குண்டுகள் வெடித்ததால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.
குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து விசாரிக்க தேசிய புலனாய்வு படை அதிகாரிகள், பாட்னாவிரைந்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து அறிக்கை அளிக்குமாறு பீகார் அரசை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து பீகார் தலைநகர் பாட்னா உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## நீயில்லாமல் நானில்லை

### 'பேஸ்புக்' கிற்காக உயிரை விட்ட மாணவி மஹாராஷ்டிராவில் பரிதாபம்

பர்பானி, ஒக்.28
மகாராஷ்டிரா மாநிலத்தில் கல்லூரி மாணவி ஒருவரை அவரது பெற்றோர் கைபேசி மற்றும் பேஸ்புக் பயன்படுத்திய மைக்காகக் கண்டித்ததால் அவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




மகாராஷ்டிராவில்உள்ள பர்பானியை சேர்ந்தவர் 17 வயதாகும் ஐஸ்வர்யா. அவர் அதிக நேரம் கைபேசி மற்றும் பேஸ்புக் பயன்படுத்துவதைக் கண்டுகவலைஅடைந்த அவரது பெற்றோர் அத்த கைய வலைத்தளங்களையும், கைபேசியையும் வைத்துக்கொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் பழக்கத்தை நிறுத்தும்படி கண்டித்தனர்.
சில தினங்களுக்கு முன்னரும் இரவு நேரம் ஐஸ்வர்யா பேஸ்புக்கில் நீண்ட நேரம் செலவழிப்பதைக் கண்ட பெற்றோர் அவரை கண்டபடி திட்டினர் அதனால் மனமுடைந்த ஐஸ்வர்யா "என்னைப் பெற்றோர் கட்டுப் படுத்துகின்றனர். இத்தனை கட்டுப்பாடுகளுடன் என்னால் இருக்க முடியாது. பேஸ்புக் இல்லாமல் என்னால் வாழவே முடியாது" என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு தூக்லிட்டு தற்கொலை செய்துகொண் டார். பொலிஸார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.இந்தச் சம்பவத்தால்அந்தப்பகுதியே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.(ற)

## கைத்தொலைபேசியை போட்டுடைத்தார் மாமியார் அம்மியைப் போட்டு மாமியை முடித்தார் மருமகள்

மணலி, ஒக்.28
கையடக்கத் தொலைபேசியை தூக்கிப் போட்டு உடைத்த மாமியார் தலையில், அவரது மருமகள் அம்மிக்கல்லை போட்டுக் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் தமிழகத்தின் மணலி பகுதியில் நடந்துள்ளது.
மணலியைச் சேர்ந்தவர் 30 வயதுடைய சுந்தரம். இவரது மனைவி குளோரி. இவர்களுக்கு ராமகிருஷ்ணன், கீர்த்தி என்ற இரண்டு குழந்தைகள் உள்ளன. சுந்தரம் தற்போது டுபாயில் பணிபுரிந்து வருகின்றார். அவர் வெளிநாடு சென்று 4 மாதங்கள் ஆகும் நிலையில் சுந்தரத்தின் தாயார் செல்வி (வயது-54) மருமகள், பேரக்குழந்தைகளுடன் ஒரே வீட்டில் வசித்து வருகின்றார்.
குளோரி நீண்ட நேரம் கைத்தொலைபேசியில் பேசுகின்றார் என்று மாமியார் செல்வி அடிக்கடி கண்டித்திருக்கின்றார். அதனால் மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுவது சகஜம். இந்த நிலையில் நேற்று முன்தினமும் இவ்வாறு ஆரம்பித்த சண்டை வழமையை விடவும் கொஞ்சம் பெரிதாகி விட்டது போலும். இருவரும் ஒருவருக்கொருவர் மோசமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டனர். மோதலின் உக்கிரத்தில் குளோரியின் கைத் தொலைபேசியை உடைத்து விட்டார் மாமியார்.
குளோரிக்கு வந்ததே ஆவேசம். தூக்கினார் அம்மிக் கல்லை. போட்டார் மாமியார் தலையில். மாமியார் அந்த இடத்திலேயே மேலுலகம் சென்றார்.
நேற்றுக்காலை வீட்டின் அருகில் இருந்த பொலிஸ் நிலையத்தில் குளோரி சரணடைந்து மாமியைக் கொன்றுவிட்டேன் என்று வாக்குமூலம் அளித்துள்ளார். தற்போது கைது செய்யப்பட்டுள்ள குளோரி விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். இந்தச் சம்பவம் மணலி பகுதியில் உள்ள மாமியார்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளதாம்.(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடிக்கப்படுகிறது சண்டி ஹூக் பாடசாலை




நியூடவுன். ஒக்.28
20 குழந்தைகள் உட்பட 28 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சாண்டிஹூக் ஆரம்பப் பாடசாலை முற்றாக இடிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தில் உள்ள நியூடவுனில் அமைந்துள்ள அந்த ஆரம்பப் பள்ளியில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 20 குழந்தைகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவைப் பதற வைத்த அந்தச் சம்பவம் நிகழ்ந்து சில மாதங்களுக்கு பின்னர் அமெரிக்காவின் துப்பாக்கி உரிமம் தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட்டன.

இந்தநிலையில் வரலாற்றின் மாறாத தழும்பாக நிற்கும் அந்தப் பாடசாலையை முற்றிலுமாக இடித்துவிட்டு 2016 ஆம் ஆண்டுக்குள் புதிய பாடசாலையைக் கட்டுவதற்கு கனெக்டிகட் உள்ளாட்சி நிர்வாகம் முடிவு செய்தது. தற்போது சாண்டி ஹூக் பாடசாலையை இடிக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இன்னும் 4 அல்லது 5 வாரங்களில் பழைய கட்டடம் முற்றிலும் தரைமட்டம் ஆக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (ற)




பொதுமக்களின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்க அரசு ஒட்டுக் கேட்கின்றது என்று வெளியாகிய தகவல்களை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி வாசஸ்தலமான வெள்ளை மாளிகை முன்பு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க அரசின் உளவு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோஷங்களை எழுப்பியதுடன், அது குறித்த விவரங்களைப் பகிரங்கப்படுத்திய அமெரிக்க தேசிய உளவு அமைப்பின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடனுக்கு நன்றி தெரிவித்து அவரது உருவப்படங்களை ஏந்தியிருந்தனர்.

## முடங்கியது என்.எஸ்.ஏ. இணையத்தளம்

நியூயோர்க். ஒக்.28
அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்பின் இணையதளத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை பல மணி நேரம் அந்த இணையதளம் முடங்கியது.

எனினும் அன்றிரவே இணையத்தளம் தொழிற்பட ஆரம்பித்தது. (ற)

## நைஜீரிய இராணுவம் தாக்கி 95 தீவிரவாதிகள் சாவு

மைடுகுரி. ஒக்.28
நைஜீரியாவின் வடகிழக்கு பகுதிகளில் அந்நாட்டு இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் 95 தீவிரவாதிகள் உயிரிந்துள்ளனர்.

இந்தத் தகவலை அந்நாட்டு இராணுவப் பேச்சாளர் முகமது டோல் தெரிவித்துள்ளார். "போர்னோ மாகாணத்தில் உள்ள தீவிரவாதிகளின் முகாம் ஒன்று முற்றிலும் அழிக்கப்பட்டது. அதில் 95 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஒன்றுமே தெரியாது

## ஆளில்லா விமானத் தாக்குதல் குறித்து அடித்துக் கூறுகின்றது பாகிஸ்தான்

"_"

ஆளில்லா விமானத் தாக்குதல்கள் குறித்து உடனுக்குடன் பாகிஸ்தான் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. இதுவரை நடைபெற்ற தாக்குதல்கள் குறித்த ஆவணங்களும் வழங்கப்படுகின்றன. இதுவரை சுமார் 65 ஆவணங்கள் இவ்வாறு பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

— 'த வொஷிங்டன் போஸ்ட்'

இஸ்லாமாபாத். ஒக்.28
ஆளில்லா விமானத் தாக்குதல்கள் தொடர்பில் எமக்கு எதுவுமே தெரியாது. அது தொடர்பில் அமெரிக்காவால் எந்தத் தகவல்களும் எமக்கு வழங்கப்படுவதில்லை- என்று அடித்துக் கூறுகின்றது பாகிஸ்தான்.

கடந்தவாரம் அமெரிக்கப் பத்திரிகையான 'த வொஷிங்டன் போஸ்ட்' வெளியிட்டுள்ள தகவலில், பாகிஸ்தானில் நடத்தப்படும் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்கள் அந்த நாட்டின் ஒப்புதல்களோடே நடத்தப்படுகின்றன என்று கூறியிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாகிஸ்தான் இவ்வாறு தெரிவித்துள்ளது. இது குறித்து விளக்கமளித்து ஐ.நாவுக்கான பாகிஸ்தான் தூதர் மசூத்கான் கூறுகையில்.

"பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் பயங்கரவாத இலக்குகள் என்று கருதப்படும் இடங்களில் அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்துகின்றது. அதற்கு பாகிஸ்தான் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என்று வெளியாகும் தகவல்களை முற்றாக மறுக்கின்றோம். பாகிஸ்தான் அரசு தரப்பிலோ, இராணுவம் மற்றும் உளவுப் பிரிவு தரப்பிலோ அதற்கான ஒப்புதல் ஏதும் கொடுக்கப்படவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பாகிஸ்தானின் இறைமையை மீறும் செயல் என்பதை அவர்களுக்கு நாம் பல்வேறு தடவைகள் இடித்துரைத்துள்ளோம். குறித்த தாக்குதல்களுக்கு ஒருபோதும் பாகிஸ்தான் ஆதரவு வழங்காது" என்று தெரிவித்துள்ளார். (ற)

"_"

அமெரிக்கா நடத்தும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் பாகிஸ்தானின் இறைமையை மீறும் செயல். அவ்வாறான நடவடிக்கைக்கு ஒருபோதும் பாகிஸ்தான் இடமளிக்காது. அமெரிக்கா நடத்தும் தாக்குதல்கள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

— பாகிஸ்தான்.

## ஜப்பானில் நிலநடுக்கம்

### ஆர்ப்பரித்தன சுனாமி அலைகள்

டோக்கியோ. ஒக்.28
ஜப்பானில் நேற்றுமுன்தினம் இரவு கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதையடுத்து டோக்கியோ மற்றும் மியாமி கடற்கரையோரங்களில் வழமைக்கு மாறாக கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டன.



ஜப்பானின் கிழக்கு கடற்கரை நகரமான ஹோன்சு அருகே இரவு 10.40 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர்அளவுகோலில் 7.3 ஆகப் பதிவாகிய நிலநடுக்கத்தை அடுத்து புகுஷிமா பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. உடனடியாக புகுஷிமா அணு உலையில் பணியாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். எனினும் சுனாமி அலைகள் பெரியளவில் ஏற்படாததை அடுத்து புகுஷிமா அணு உலைக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் ஏற்பட்டமை தொடர்பில் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானில் 9 ரிச்டர் அலகுகளாகப் பதிவாகிய நிலநடுக்கத்தால் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இதன்போது புகுஷிமா நகரில் உள்ள அணு உலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் கதிர்வீச்சுக் கசிவும் ஏற்பட்டிருந்தது. (ற)


## தீபாவளி கொண்டாடும் அமெரிக்கா

வொஷிங்டன். ஒக்.28
முதன்முறையாக அமெரிக்காவில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நடைபெற உள்ள இந்தத் தீபாவளி கொண்டாட்ட நிகழ்ச்சியில் கட்சிப் பாகுபாடின்றி, நாடாளுமன்றத்தின் இருசபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கூறிய இந்திய -அமெரிக்கர்கள் கூட்டமைப்பின் துணைத் தலைவரும், சபை உறுப்பினருமான ஜோ க்ரோலி,

'இலட்சக்கணக்கான இந்திய மற்றும் அமெரிக்க இந்தியர்களின் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாக தீபாவளி திகழ்கிறது. அந்தப் பண்டிகையை முதன்முறையாக அமெரிக்க நாடாளுமன்றம் கொண்டாட சம்மதம் தெரிவித்துள்ளமை மகிழ்ச்சி தருகின்றது.'-என்றார். (ற)

## 21 ஆண்டுகளின் பின் குமுறுகின்றது 'எட்னா'



ரோம், ஒக்.28
ஐரோப்பாவின் உயரமான மலை என்றழைக்கப்படும் இத்தாலியின் எட்னா எரிமலை தீக்குழம்பைக் கக்கத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் ஏற்பட்ட மிதமான நிலநடுக்கமே உறங்கிக் கொண்டிருந்த எட்னா எரிமலையை உசுப்பி விட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

எரிமலையில் இருந்து வெளியேறும் பெரும் புகை மண்டலம் தெற்கு இத்தாலியில் உள்ள சிசிலி தீவுப் பகுதிகளை சூழ்ந்துள்ளது. அதனால் சிசிலி வான்வழிப் பாதையில் விமானங்கள் பறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எட்னா எரிமலை 1992ஆம் ஆண்டு தீக்குழம்பை கக்கியது. (ற)



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பல்வேறு பகுதிகளில் கார் வெடிகுண்டுகள் வெடித்ததில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதிகளை குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடைபெற்றன என்று கூறப்படுகிறது. ஷாப் பகுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 6 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர். குறித்த தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமைகோரவில்லை. (ற)

## பத்து ஆண்டுகளாக ஒட்டுக்கேட்கும் அமெ.

பெர்லின், ஒக்.28
ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலோ மெர்க்கலின் கையடக்கத் தொலைபேசி கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்காவால் ஒட்டுக் கேட்கப்பட்டு வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தத் தகவலை அடுத்து ஒட்டுக் கேட்கும் விவகாரம் மேலும் சிக்கல் நிலையை அடைந்துள்ளது. அமெரிக்காவின் புலனாய்வு இரகசியங்களை வெளியிட்டு பெரும் [illegible] [illegible] எட்வேர்ட் ஸ்நோடனால் இந்த விவரங்கள் அம்பலத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, மெர்க்கலின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவுக்கும் தெரியும் என்றும் கூறப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு இது குறித்து தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் கெய்த் அலெக்சாண்டர் ஒபாமாவிடம் தெரிவித்தார் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து இருநாடுகளுக்கும் இடையே [illegible] முறுகல் நிலை தோன்றியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில்
2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
170 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து
பாடசாலைக்கும், சமூகத்துக்கும் பெருமை சேர்த்த
வளர்மதிசாலை, கைதடி மத்தியைச் சேர்ந்த
தயாளன்–பிரேமலா தம்பதியரின்
கனிஷ்ட புதல்வி **மிதுர்ணா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இனிவரும்
காலத்திலும் கல்வியில் உயர்ந்த நிலையில்
பெறுபேறுகள் பெறவும் வாழ்த்துகின்றோம்.
மேலும் இந்த உயர்புள்ளிகளைப் பெற
உறுதுணையாக இருந்த அதிபர்,
பாடசாலை ஆசிரியர்கள், கல்விக் கழக
ஆசிரியர்கள் ஆகியோர்களையும்
மனதாரப் பாராட்டுகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா,
அப்பப்பா, மாமாமார், அத்தைமார்,
சித்தப்பாமார், சித்திமார்,
உடன் பிறவாச் சகோதரர்கள்
மச்சாள்மார், மச்சான்
மற்றும் உறவினர்கள்.

திரவன் தயாபரன்
(சுவிஸ்லாந்து)
திரவன் பிரதீபன்
(லண்டன்)

Best Wishes!

(33333)(7.6.3)


## மானிய உரம் பெற தவறியோர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்

வரணி, ஒக்.28
வரணி வடக்கு விவசாய சம்மேளனப் பிரிவில் இதுவரை மானிய உரம் பெற விண்ணப்பிக்கத் தவறியவர்கள் மீண்டும் அவற்றுக்கு விண்ணப்பிக்கலாம் எனக் குறித்த விவசாய சம்மேளனத்தின் செயலாளர் க.தியாகராசா தெரிவித்துள்ளார்.

மானியத்துக்கு விண்ணப்பிப்போர் சென்ற ஆண்டு மானிய உரம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அதேநேரம் நெற்செய்கை சார்பான விவரங்களை சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் சமர்ப்பித்து உரிய ஏக்கர் வரியைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ந-122)

## தூக்கி வீசப்பட்டார் மோ.சைக்கிளோட்டி

தென்மராட்சி, ஒக்.28
ஒழுங்கையிலிருந்து வீதியைக் கடந்த நாயை மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப் பட்டு மோட்டார் சைக்கிளோட்டி காயங்களுக்கு உள்ளானார்.

கடந்த சனிக்கிழமை மாலை மீசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த இராமச்சந்திரன் சவீந்திரன் (வயது- 27) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஒக்.28
தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள தனி மனித ஆளுமை பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆர்வலர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்ளமுடியும். தனி மனித ஆளுமையை விருத்தி செய்யக் கூடிய கருத்துரைகள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படவுள்ளன. ஆர்வமுடையவர்கள் கோண்டாவில் பொது நூலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர் விவரங்களை பதிவு செய்யலாம். (ந-14)


**தவறிவிட்டது** NPGW-5383எனும் இலக்கத்தையுடைய மோட்டார் வாகன இலக்கத்தகடு கல்வியங்காட்டிற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 116 0593 (39524)(6.3.4)

## விற்பனைக்கு

- 10K.V. லேடன் ஜெனரேட்டர் (2சிலிண்டர்) இந்தியன்
- ஐஸ்கிறீம் கொம்பிரசர் (39527)(6.3.4)
- டாடா டிமோ படி தட்டினுடைய 3 கதவுகள் வெள்ளை நிறம்

தொடர்பு: 077 157 3997, 072 808 7125

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும் போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப் பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228 (c/12610)(4.6.3)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

## வீடு வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கும் பிளாஸ்ரிக் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியிலும் அல்லது கொடிகாமம் தொடக்கம் நாவற்குழி வரையிலான பகுதியில் A-9 வீதியுடனும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. வாகனங்கள் நிறுத்தவும் பொருள்கள் வைப்பதற்கும் இடவசதி உள்ளமை விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 227 0586, 075 242 9533 (சி/2772)(6.3.4)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன்



Congratulations

உயர்திரு.
**திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்**
(தேசிய அபிவிருத்தி வங்கி (N.D.B) வடக்கு, கிழக்கு பிராந்திய முகாமையாளர்)

இவர் சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து யாழ் வாடிக்கையாளர்களது நன்மதிப்பைக் கடலெனப் பெற்ற பெரும் மதிப்புக்குரியவர்.
தனது பதவிக் காலத்தில் ஹற்றன் நஷனல் வங்கியின் முன்னேற்றத்துடன் வாடிக்கையாளர்களின் அனைத்துத் தேவைகளையும் உரிய முறையில் நிறைவேற்றி வைத்தவர். இவர் தற்போது N.D.B வடக்கு, கிழக்கு பிராந்திய முகாமையாளர் என்ற மகுடத்துடன் மீண்டும் யாழ். நகரில் எமக்காக சேவையாற்றும் அவர்கள் சகல சௌபாக்கியங்களுடனும் நீடூழி காலம் வாழ வாழ்த்தும்.

Best Wishes!

சிவஞானம் மனோகரன்
(மனோ ரவல்ஸ், மனோ எக்ஸ்பிரஸ்)
5ஆம் வட்டாரம்,
வேலணை வடக்கு,
வேலணை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### எமது ஊட்டப் பாடசாலைகளில்

இருந்து 2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுவதுடன், பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**யா/சுப்பிரமணிய வித்தியாசாலை**



அரிகரன் தவரூபன்-164
சதாசிவம் தனுசிகா-164
கந்தவேள் தர்சிகா -162
கதிர்காமநாதன் தனுசிகா -158
யோகதாசன் அரிசா -156
நகுலேஸ்வரன் நவீனி -155

**யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை**



ஜீவா வாணி -174



விஜயகுமார் கஜந்தினி -170

**யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை**



தயாளசுந்தரம் யதுர்சன் -168



தினேஸ்குமார் எழில்வேந்தன் -168

**யா/காரைநகர் மெய்கண்டான். வித்தியாலயம்**



கோடீஸ்வரன் இனியவன் -167

**யா/ ஊரி அ.மி.த.க. பாடசாலை**



உதயகுமார் செந்தூரன் -173



நிருபானந்தராசா மதுசன் - 163



இராசலிங்கம் புவிந்தன் -163



சுதாகரன் சுகிர்தன் - 155

இம்மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும், 100 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற ஏனைய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்
யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்.
சி/13423)
(45.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி.இல் இருந்து
2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத்
தோற்றி சித்தியடைந்து பாடசாலைக்குப்
பெருமை சேர்த்த

Congratulations



Best Wishes

செல்வி L. மேரி அபிஷா 177 புள்ளிகள்
செல்வி A. மதுஷானி 174 புள்ளிகள்
செல்வி B. சோபியா விதுர்சினி 167 புள்ளிகள்
செல்வி S. யாழினி 163 புள்ளிகள்
செல்வி J. புவினா 155 புள்ளிகள்
செல்வி J. லோதினி 154 புள்ளிகள்

ஆகிய மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்திய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம் மேலும் இம்மாணவர்கள் கல்வியில் இன்று போல் என்றும் வளர்ந்து கல்விமான்களாக வளர வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திக் குழு,
பாடசாலைப் பழைய மாணவர் சங்கம்
(33260)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(வாதரவத்தை புத்தூர்)
கலாநிதி
**தனபாலசிங்கம் விநாயகதாசன்** அவர்கள்
(PhD in Public Economics, MPP, MA,BA(Hons)
(விரிவுரையாளர் - பேராதனை பல்கலைக்கழகம் பொருளியற்துறை)

Congratulations

கடந்த 17.09.2013 டோக்கியோ கொள்கை கற்கைகளுக்கான தேசிய பட்டப்படிப்பு நிறுவனத்தில் "கலாநிதி" பட்டத்தினை பெற்றதனையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

இவர் பெற்ற பட்டங்கள்:
முதுமாணி (பொதுக் கொள்கை) – டோக்கியோ 2010
முதுமாணி (பொருளியல்) பேராதனை பல்கலைக்கழகம் 2009
கலைமாணி (பொருளியல்) பேராதனை பல்கலைக்கழகம்

Best Wishes!

வாழ்த்துவோர்:
கிராம அபிவிருத்திச் சங்கம்,
வாதரவத்தை.
(39521)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பஸ்சேவையில் இனிமேல் தாமதம் இல்லை

## மன்னார் டிப்போ அதிகாரிகள் உறுதி

மன்னார், ஒக்.28
பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும் பஸ் சேவைகளில் இனிமேல் தாமதமோ தடங்கலோ ஏற்பட இடமளிக்க மாட்டோம் இவ்வாறு மன்னார் இ.போ.ச. பஸ் டிப்போ அதிகாரிகள் உறுதி வழங்கியுள்ளனர்.

மன்னார் நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இ.போ.ச. பஸ்களில் பயணிப்பதற்கான மாதாந்த பருவகாலச் சீட்டுக்களை பெற்றே தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாடசாலை சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் அவ்வப்போது தமது சேவைகளை சீராக மேற்கொள்வதில்லை என மாணவர்களும் பெற்றோரும் குற்றஞ் சாட்டியிருந்தனர்.

ஆனால் மன்னார் டிப்போ நிர்வாகத்தினர் பஸ்கள் பழுதடைவதாலேயே இவ்வாறு தாமதம் ஏற்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த 24 ஆம் திகதி காலை மன்னார் தாழ்வுபாடு வீதியில் வழமை போன்று பாடசாலை பஸ்ஸுக்காகக் காத்திருந்த மாணவர்கள் பலர் மேற்படி சேவை நடைபெறாமையால் குறித்த நேரத்தில் பாடசாலை செல்வதில் இடர்களை எதிர்கொண்டனர்.

இதனை அவதானித்த பெற்றோர் பலர் ஒன்றிணைந்து மாணவர்களுடன் இணைந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் கால்நடையாக மாவட்டச் செயலகத்தை நோக்கிச் சென்றனர்.

அங்கு மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெலிடம் இது தொடர்பில் முறையிட்டனர்.

மேலதிக அரச அதிபர் எடுத்த முயற்சியின் பலனாக அங்கு பிரசன்னமாகியிருந்த மன்னார் இ.போ.ச. பிரதிநிதிகள் நடந்த சம்பவம் தொடர்பில் தமது வருத்தத்தை தெரிவித்தனர்.

அத்துடன் இனிவரும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும் போக்குவரத்து சேவையில் தாமதமோ, தடையோ ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதாகவும் உறுதியளித்தனர். (க-ரி)

# பயன்தரு பெருமரங்கள் வன்னேரிக்குளத்தில் அழிப்பு

## சூழலியலாளர்கள் கவலை

அக்கராயன், ஒக்.28
கிளிநொச்சியிலுள்ள வன்னேரிக்குளம் கிராமத்தில் பழமை வாய்ந்த பெரிய மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன.

வன்னேரிக்குளம் கிராமம் உவராகும் ஆபத்தின் விளிம்பில் உள்ளது. இந்தக் கிராமத்தில் இவ்வாறு பெருமளவில் மரங்கள் அழிக்கப்பட்டால் மழை வீழ்ச்சி குறைவடைவதுடன் முழுமையாக உவரடையக் கூடிய ஆபத்தும் ஏற்படும் என்று சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்னேரிக் குளம் கிராமத்தை உவரடையாமல் தடுப்பதில் மரங்களே பெரியளவில் பங்கு வகிக்கின்றன.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் மதில் அமைப்புக்கென பெரிய பாலை மரம் ஒன்று தறிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பாடசாலையின் 50 ஆண்டு விழாவில் முன்னாள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய வடமாகாணக் கல்வி அமைச்சருமான த.குருகுலராஜா உரையாற்றும் போது;

இந்தப் பாடசாலையில் காணப்பட்ட பல பாலை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பாலை மரங்கள் அழிக்கப்பட்டால் 100 ஆண்டுகள் சென்றாலும் அந்த மரங்களை உருவாக்க முடியாது. எனவே மேலும்



மரங்கள் அழிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

தற்போது வன்னேரிக்குளத்தில் மீளக்குடியமர்ந்துள்ள ஒவ்வொரு குடும்பமும் மரங்களைப் பாதுகாக்காது விட்டால் வன்னேரிக்குளம் என்ற கிராமமே எதிர்காலத்தில் அழிவடைந்து விடும் அபாயம் உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)



கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் அணைக்கட்டுப் பகுதிக்கு புல் பதித்தல் மற்றும் துருசு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (க-18)

# உள்ளூராட்சி வாரத்தில் வவுனியாவில் நிகழ்வுகள்

நெளுக்குளம், ஒக்.28
உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வவுனியாவில் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

வவுனியா தெற்கு பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகள் நாளை காலை 9.30 மணியளவில் வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள முத்தையா மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் கௌரவ விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட அதிதிகளாக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.இந்திரராசா, ம.தியாகராஜா, வி.ஜெயதிலக, ஏ.வி.தர்மபாலசெனவிரத்ன ஆகியோரும் திணைக்களத் தலைவர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற போட்டியாளர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கல், நீண்ட கால நூல் நிலைய வாசகர் கௌரவிப்பு, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து சான்றிதழ் வழங்கல், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கல், வயோதிபரை கௌரவித்தல், கலைஞர் கௌரவிப்பு எனப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (க-402)

# மருத்துவப் பரிசோதனைகள்

முல்லைத்தீவு, ஒக்.28
ஒட்டுசுட்டான் இலவச ஆயுள்வேத மருத்துவமனையில் இரத்தம், சிறுநீர் மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மருத்துவர் மணிவண்ணன் தலைமையில் இந்த மருந்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

இதில் இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு, சிறுநீர்ப் பரிசோதனை, கர்ப்பத்தை உறுதிப்படுத்தும் பரிசோதனை மற்றும் இரத்தம் தொடர்பாக வேறு பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலர் வவுனியா மாவட்ட ஆயுள்வேத இணைப்பாளர், வவுனியா ஆயுள்வேத அத்தியட்சகர், ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஆகி யோர் இந்தப் பரிசோதனைகளின் போது பிரசன்னமாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-435)

# புலமைப் பரிசில் பரீட்சையில் ஏழ்மையான மாணவர் சாதிப்பு

கிளிநொச்சி, ஒக்.28
அண்மையில் வெளிவந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகளவில் சித்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் சித்தியடைந்த 159 மாணவர்களில் 129 பேர் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். மீதி 30 பேர் அரச உத்தியோகத்தரின் பிள்ளைகளாவர்.

*இந்த வருடம் சித்தியடைந்த 159 மாணவர்களில் 129 பேர் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். மீதி 30 பேர் அரச உத்தியோகத்தரின் பிள்ளைகளாவர்.*

கடந்த காலங்களில் அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளே வன்னிப் பகுதியில் அதிகளவில் சித்தியடையும் நிலை காணப்பட்டது.

தற்போது ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் அதிகளவில் சித்தியடைந் திருப்பதன் மூலமாக கல்வித்துறையில் முன்னேற்றமும். மாற்றமும் ஏற்பட்டுள்ளதாக கல்வியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கரைச்சிக் கோட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 1,237 மாணவர்களில் 979 பேரும், கண்டாவளைக் கோட்டத்தில் 439 மாணவர்களில் 312 பேரும், பூநகரிக் கோட்டத்தில் 468 மாணவர்களில் 263 பேரும், பளைக் கோட்டத்தில் 165 மாணவர்களில் 122 பேரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# முல்லைத்தீவில் சமூகச் சீர்கேடுகள்

முல்லைத்தீவு, ஒக்.28
முல்லை மாவட்டத்தில் உள்ள சில பிரதேசங்களில் சமூகச் சீர்கேடான செயல்கள் அதிகரித்து வருகின்றன. எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்பட்டு சமுதாயத்தில் ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட்டு வந்தன.

தற்போது மீண்டும் சமூகச் சீர்கேடுகள் தலைதூக்கியுள்ளன. இதனால் பெண்பிள்ளைகள் வெளியில் சென்றால் அவர்கள் வீடு வந்து சேரும் வரை அச்சத்துடனேயே இருக்க வேண்டிய அவல நிலை இங்கு காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# சிவில் குழுவின் கலந்துரையாடல்

மன்னார் பெரிய கடை கிராம அலுவலர் பிரிவின் கீழ் செயற்படும் சிவில் பாதுகாப்பு குழுவின் மாதாந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

மன்னார் பெரிய கடை கிராம அலுவலர் செல்வக்குமார் தலைமையில் அவரது அலுவலகத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

குறித்த பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இரவு நேரங்களில் வீதி விளக்குகள் ஒளிராமல் இருப்பதால் ஏற்படுகின்ற சமூகச் சீர்கேடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (க-ரி)


# முருங்கன் மருத்துவ முகாம் 1,200 நோயாளருக்கு சிகிச்சை

மன்னார், ஒக். 28
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார்க் கிளையும், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மன்னார் முருங்கன் பிரதேச மருத்துவமனையில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை அண்மையில் நடத்தின.

மன்னார் மக்களின் மருத்துவத் தேவை கருதி மருத்துவத் துறைகளில் தேர்ச்சி பெற்ற நாட்டில் பல பாகங்களிலும் பணிபுரியும் வைத்திய நிபுணர்களால் இதன் போது இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமாகாண சபையின் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில் வர்த்தகம், வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மேலதிக அரச அதிபர், கந்தானை டிலாசால் அருட்சகோதரர்கள், முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் ஓஸ்மன் குலாஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெ.கெனடி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் குழந்தைகள், முதியவர்கள் உட்பட 1,200 பேர் வரையில் சிகிச்சையினைப் பெற்றனர்.

[illegible] நீரிழிவு, ஆஸ்மா, குருதிஅமுக்கம், காயங்கள், நோவு, கட்டி, பற்சிகிச்சை, மகப்பேறு மற்றும் பெண்களுடன் தொடர்புபட்ட நோய்கள், வயது வந்தவர்களுக்கான கல்சியக் குறைப்பாடு, எலும்புடன் தொடர்புபட்ட நோய்கள், இருதய நோய் ஆகியவற்றுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன.



கண் சத்திர சிகிச்சைக்கென இந்த முகாமில் இனங்காணப்பட்ட 80 பேர் முதற்கட்டமாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் பதவிக்காக கல்முனையில் இழுபறி

## மு.கா.விடுத்த உத்தரவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்கின்றனர் மக்கள்



மட்டக்களப்பு, ஒக்.28
கிழக்கு மாகாணத்தில் கல்முனை மாநகரசபை முதல்வர் பதவிப் பிரச்சினை இன்னமும் இழுபறி நிலையிலேயே உள்ளது. இந்த நிலையில் கல்முனை மாநகர சபை முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் முதல்வர் பதவியை விட்டு விலகுமாறு சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைமைப் பீடம் விடுத் துள்ள பணிப்பை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சாய்ந்த மருது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுழற்சிமுறை இணக்கப்பாடு என்ற போர்வையில், மாநகர சபை முதல்வர் பதவியிலிருந்து விலகுமாறு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்



ஹக்கீம், முதல்வர் சிராஸுக்கு விடுத்துள்ள உத்தரவு கல்முனைப் பிராந்தியத்தில் பெரும் பரபரப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்தி உள்ளது.

சிறந்த பயன்தரும் மரமொன்று செழிப்புடன் வளரத் தொடங்கியுள்ள நிலையில், அந்த மரத்தை அடியோடு தறித்துச் சாய்க்கும் கைங்கரியத்தையே முஸ்லிம் காங்கிரஸ் செய்யத் தலைப்பட்டுள்ளதாகப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கல்முனை மாநகர சபைப் பிரிவில் தமது பேதமற்ற சேவை மூலம், தமிழ் மக்களது நல்லபிமானத்தைப் பெற்று தமிழ்- முஸ்லிம் நல்லுறவின் மேம்பாட்டுக்கு அவர் வழிவகுத்துள்ளார்.


இந்தநிலையில் முதல்வர் பதவியிலிருந்து அவர் எந்தக் காரணம் கொண் டும் விலகக் கூடாது என அழுத்தங்களும் முதல்வர் சிராஸுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அழுத்தங்களை கல்முனை மாநகர சபைப் பிரிவில் கூடிய வாக்காளர்களையும், சனத் தொகையையும் கொண்ட சாய்ந்தமருது பிரதேச முக்கியஸ்தர்களும், பொது அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்களின் முக்கியஸ்தர்களும் கொடுத்து வருகின்றனர்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸின் விடாப்பிடி தொடர்ந்தால், தனியான உள்ளூராட்சிச் சபை வேண்டுமென்ற கோரிக்கையை சாய்ந்தமருது பிரதேச மக்கள் எழுச்சி பொங்க முன்னெடுக்கத் தயாராகவேயுள்ளனர் என்று முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (ச-30)

## நிஸாம் காரியப்பருக்கு எதிராக சுவரொட்டிகள்

கல்முனை பிரதி முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்கு எதிராக சாய்ந்தமருது பிரதேசத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.




இந்த சுவ ரொட்டிகள் சாய்ந்தம ருது பிரதேச பிரதான வீதி உட்பட பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

கல்முனை முதல்வர் பதவியிலிருந்து சிராஸ் மீரா சாஹிப்பை இராஜினாமா செய்யுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப் ஹக்கீம் கடந்த செவ் வாய்க் கிழமை உத்தரவிட்டுள் ளார்.

இந்த நிலையிலேயே பிரதி முதல்வர் நிசாம் காரியப்பருக்கு எதிராக குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'தோல்வியை ஏற்றுக் கொள் ளும் மனப்பான்மை உம்மிடம் இல்லையா?, நீதித்துறையில் பணி யாற்றும் நிசாம் காரியப்பருக்கு நீதி தெரியாதா?' போன்ற பல வாசகங்கள் குறித்த சுவரொட்டிகளில் எழுதப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசியல் தலையீட்டுக்கு இனிமேல் இடமில்லை

### கிழக்கு ஆளுநர் உறுதி



மட்டக்களப்பு, ஒக்.28
கிழக்கு மாகாணத்தின் கல்விப்புலத்தில் ஏற்படுகின்ற அவசியமற்ற அரசியற் தலையீடுகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர், அவ்வாறான தலையீடுகள் இனி மேலும் இடம்பெற மாட்டாது என்று உறுதியளித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவல கத்தில் நடைபெற்ற விசேட சந்திப் பின்போது, கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ளது. தமிழர் ஆசிரியர் சங்கம் முனைப்புடன் கல்வி வளர்ச்சி தொடர்பாக முன் வைக்கும் ஆலோசனைக ளைத் தாம் ஏற்றுக்கொள் வதாக ஆளுநர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தின் கல்விப்புலத்தில் ஏற்படுகின்ற அவசியமற்ற அரசியற் தலையீடுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகளின் தகைமைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளே காரணம் என்று அவர் தெரிவித்தார்.

அவற்றை நிவர்த்தி செய்ய தமிழர் ஆசிரியர் சங்கம் தமது ஆலோசனை களை அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (ச)

## விசேட தேவையுடைய மாணவருக்கு உணவு

காத்தான், ஒக்.28
குடிகாத்தான்குடி சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தால் ஸாஹிறா விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உணவுப் பொதிகளை சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தின் தலைவர் எம்.ஐ. எம்.ஹாரிஸ், அதன் உறுப் பினர்கள் இணைந்து பாட சாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர். (ச)



## அந்தோனியார் ஆலயம் திறப்பு

மட்டக்களப்பு, ஒக்.28
மட்டக்களப்பு, கல்லடி பாலத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.,

அருட்தந்தை ஜீவராஜ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையால் அபிசேகம் செய்யப்பட்டு ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகால வரலாற்றைக் கொண்ட இந்த ஆலயம், கல்லடி பாலத்தின் புனரமைப்பு வேலைகளின் போது அகற்றப்பட்டு புதிய ஆலயமாக நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் ஊர்வ லமாக அழைத்து வரப்பட்டு ஆலயம் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ச)






அம்பாறை கரையோர மாவட்ட பிரதேச செயலகத்துக்கான சமுர்த்தி உற்பத்தி வர்த்தகக் கண்காட்சியும், விற்பனையும் வெள்ளிக்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி திறந்த வளாகத்தில் நடைபெற்றது.

## உணவகத்துக்கு சீல்

மட்டக்களப்பு, ஒக்.28
மட்டக்களப்பு, முறக் கொட்டஞ் சேனையிலுள்ள உணவகமொன்றுக்கு சுகாதார அதிகாரி களால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகத்தின் உணவு நஞ்சானமையால் 16 பேர் கடந்த திங்கட்கிழமை திடீர் சுக வீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதனையடுத்து இந்த உண வகம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது என்ற கிரான் பொதுச் சுகாதார பரிசோதாகர் எஸ்.நித்தியராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, திடீர் சுகவீன முற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் வாந்தி கொழும்பிலுள்ள மருத்துவ பகுப்பாய்வு நிலையத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப் பிட்டார். (ச)

## வர்த்தமானி பிரகடனத்தை மீறி ஆரையம்பதியில் காணி உள்ளீர்ப்பு

### கண்டிக்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு, ஒக்.28
வர்த்தமானி பிரகடனத்தை மீறி உத்தேச காத்தான்குடி மாநகரசபை எல்லை வரையறைக்குள் ஆரையம்பதி பிரதேச காணிகள் உள்ளீர்க்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

காத்தான்குடிக்கும் ஆரையம்பதிக்கும் இடையில் ஏற்பட்டுவரும் காணி மற்றும் எல்லை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் இணைந்து மண்முனைப்பற்று பிரதேச செயலர் வாமதேவன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்புப் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்கள் ஆரை யம்பதியில் [illegible] கள் எதிர்க்கவில்லை;அது தொடர்பில் விமர்சிக்கவும் இல்லை:ஆனால் பிரதேசங்களின் எல்லைகள் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறோம்.

வடக்கு எல்லைக் கிராமங்களான நொச்சிமுனையின் ஒரு பகுதி மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வர்த்தமானி பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டு கிராமங்களின் பகுதிகளும் உத்தேச காத்தான்குடி மாநகரசபை எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

இது வர்த்தமானி பிரகடனத்துக்கு முரணான செயலாகும். அதுமட்டுமல்லாமல் இந்த இரண்டு கிராமங்களின் பகுதிகளும் காத்தான்குடி பிரதேச செயலக பகுதியில் உள்ளடங்கியதாக எந்த வர்த்தமானி பிரகடனமும் இல்லை.

அவ்வாறான நிலை யில் உத்தேச காத்தான்குடி மாநகர சபை எல்லைக்குள் அந்தக் கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது. -என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத குர்ஷித்தை உடனடியாகப் பதவி நீக்குக!

## மன்மோகன் சிங்கிடம் ராமதாஸ் வலியுறுத்து

இலங்கை இனப்பிரச்சினையிலும், தமிழக மீனவர்கள் பிரச்சினையிலும் தமிழக மக்களின் உணர்வுகளைத் தொடர்ந்து அவமதித்து வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை பிரதமர் மன்மோகன் சிங் உடனடியாக உயிரிழந்தோர் பதவி நீக்க வேண்டும்.

இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடை பெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது; பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டும் என்று ஒட்டு மொத்த தமிழக மக்களும் வலியுறுத்திவரும் நிலையில், அம்மாநாட்டில் இந்தியா நிச்சயமாக பங்கேற்கும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியிருக்கிறார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளாமலும், இலங்கையுடன் உறவு வைத்துக் கொள்ளாமலும் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது? என்று சல்மான் குர்ஷித் கேட்டிருப்பது குரூரமான நகைச்சுவை ஆகும். இம்மாதத் தொடக்கத்தில் இலங்கை சென்ற குர்ஷித் தமிழக மீனவர்கள் சிங்களப் படையினரால் தாக்கப்படுவது குறித்தோ அல்லது கைதுசெய்யப்படுவது குறித்தோ எதுவும் பேசவில்லை.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து முடிவெடுக்கப்படும் என்று ஏற்கனவே பிரதமர் கூறியிருக்கிறார். இது குறித்து மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக எந்த முடிவும் எடுக்காத நிலையில், பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என்று குர்ஷித் கூறுகிறார் என்றால், அவர் பிரதமரை விட அதிக அதிகாரம் பெற்றவரா? என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் எவரும் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிப்பதுடன், அந்த அமைப்பிலிருந்து இலங்கையை நீக்கவும் பிரதமர் மன்மோகன் சிங் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் - என்றார்.

## ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தை சேர்ந்த 30 வயதான நபரே இதில் உயிரிழந்துள்ளார்.

மாத்தறையில் இருந்து மருதானை நோக்கி சென்ற ரயிலில் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார்.

கொல்லப்பட்டவரின் சடலம் அதே ரயிலில் எடுத்துச் செல்லப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## புத்தளம் விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நான்காக அதிகரிப்பு

புத்தளம், கருவரகஸ்வெவவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிமெந்து ஏற்றப்பட்டிருந்த வாகனத் தோடு இன்னொரு வாகனம் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சிக்கி மூவர் உயிரிழந்தனர். இந்த நிலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இதனால் இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

## சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய சுற்றுலா செய்தி வலையமைப்பு உதயம்



இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம் முதலாவது சுற்றுலாத்துறை செய்தி வலையமைப்பை ஆரம்பித்து வைத்துள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா கலந்து கொண்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் முன்னிலை வகிக்கும் சுற்றுலாத்துறை நாடு இலங்கை. நேரடியாகவோ மறைமுகமாகவோ சுற்றுலாத் துறையை ஊக்குவித்து வளர்ப்பதற்கான முயற்சியில் தனியார் துறையைப் பிரதிநிதிப் படுத்தும் சுற்றுலா கைத் தொழில் சம்மேளனம் சுற்றுலாத்துறை செய்தி வலையமைப்பை ஆரம்பித்து வைத்தமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

இந் நிகழ்வு 2016ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் உல்லாசப் பயணிகள் என்ற அரசின் ஆர்வமிக்க இலக்குக்கும் சமாந்தரமாக உள்ளது என நான் நம்புகிறேன். சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம் சுற்றுலாத்துறை சம்பந்தமான செய்திகளை வழங்கும் இணையத்தை திறந்து வைப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதான இடங்கள் மற்றும் இலங் கையில் சுற்றுலாத்துறை சம்பந்தமான நிகழ்வுகள் போன்றவற்றை அறியவிரும்புவோர் மற்றும் பயணிகள் நேரடியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்திற்கும் அதன் தலைவர் ஏ. எம் ஜவ்பரினதும் சிந்தனைக்கும் கிடைத்த இவ் வெற்றி இலங்கையின் கிராமப் பகுதிப் பிரதேசங்களின் சுற்றுலா தொழிற்துறை வளர்ச்சிக்கும் நாட்டின் சுற்றுலாத்துறை மற்றும் அதன் கலாசாரம் உலகெளாவிய ரீதியில் பரந்து செல்வதற்கும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சுற்றுலாத்துறைப் பயணிகள், சர்வதேச மாநாடு மற்றும் ஒன்றுகூடல் என்பவைகளுக்கு இலங்கை மிகப் பொருத்தமான நாடு என பறைசாற்றி முன்னேற்ற இது ஒரு சிறந்த மேடை என நான் நம்புகிறேன் .

இவ் வருடம் நவம்பர மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு இலங்கை தயாராகி இத் தருணத்தில் சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம் வளர்ந்து வரும் புதிய தொடர்பாடல் மற்றும் சமூக ஊடக தொழில்நுட்பத்தை ஒன்று சேர்த்து நாட்டின் சுற்றுலாத் துறையை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு சரியான நேர காலத்தில் முடிவுசெய்துள்ளது- என்றார்.

இந்த நிகழ்வில் அதிதிகளாக அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், பி. தயாரத்ன மற்றும் பிரதியமைச்சர் வைசர் முஸ்தப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் சாவு

கதிர்காமம், பெலகிரிகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டில் மின்குமிழ் பொருத்த முயற்சித்த போதே இந்த நபர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

புளத்சிங்கலபுர பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான நபரே இந்த சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

## சீதுவ கொலை: இளைஞர் கைது

சீதுவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி இரவு சீதுவ - தும்முல்லவத்தை பகுதி வீடொன்றில் வைத்து, பொல்லால் தாக்கப்பட்ட நிலையில், நீர் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

திபிரிகஸ்கெடுவ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர், பின்னர் சீதுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்கேதநபர் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் எனத் தெரிய வந்துள்ளது.

## மேல்மாகாணத்தில் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு

### விரைவில் என்கிறார் பிரபா எம்.பி.

மேல்மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம், பொருளாதார அமைச்சினூடாக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் போன்ற அரச வேலைவாய்ப்பை நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். இது வரை 691 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. டிசம்பர் மாத அளவில் மேலும் 300 ஆசிரியர் வெற்றிடமாக உள்ள பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

இதன் மூலம் மேல் மாகாணத்தில் வேலை யில்லா பட்டதாரிகள் என்று எவரும் இருக்க மாட்டார்கள்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

தன்னைச் சந்திக்க வந்த தமிழ் பட்டதாரிகள் குழுவினரிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் பெற்றுக் கொடுக்காத அரச வேலைவாய்ப்புகளை இன்று நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

கடந்த மூன்று வருட நாடாளுமன்ற காலத்தில் எனது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வேலை வாய்ப்பு பாடசாலை அபிவிருத்திகள், தோட்டத் தொழிலாளர்களுக்கான உட்கட்ட அபிவிருத்திகள் போன்றவை மூலம் மக்கள் பெரிதளவு பயன் பெற்றுள்ளனர்.

எதிர்காலத்திலும் இதனை விட அதிகமான அபிவிருத்திகளும் வேலை வாய்ப்புகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

டிசம்பர் மாதத்தில் வழங்கப்படவிருக்கும் ஆசிரியர் நியமனங்களுக்கு மேல் மாகாணத்தில் பட்டதாரிகளின் தொகை குறைவாக இருப்பதால் உங்களுக்கும் வேலை வாய்ப்பினை இம்முறைப் பெற் றுக்கொள்ள கூடியதாக இருக்கும் - என்றார்.

## மாணவனின் சடலம் மீட்பு

மாதம்பை கல்முறுவ பிரதேச வீடொன்றில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் மாணவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதே பகுதியைச் சேர்ந்த 15 வயதான மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில் தனது பாட்டியுடன் வசித்து வந்த குறித்த மாணவன், வீட்டில் யாரும் இல்லாத சமயம் தூக்கில் தொங்கியுள்ளார்.

சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக சிலாபம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாதம்பை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு இவ்வருட இறுதிக்குள் வேலைவாய்ப்பு உறுதி

### அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி, நலன்புரி விவகார அமைச்சர் டிலான் பெரேரா உறுதியளித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு கொரிய வேலைவாய்ப்புக்காக 9ஆயிரத்து 998 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் 6 ஆயிரத்து 300 பேர் ஏற்கனவே வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். எஞ்சியவர்களுக்கு இவ் வருட இறுதிக்குள் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

வருடா வருடம் கொரிய மொழிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 4 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புக்குத் தெரிவாவது வழக்கம். எனினும், 2011 இல் அத்தொகை அதிகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2011 ஆம் ஆண்டுப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் எஞ்சியிருப்பவர்களுக்கு 2013 இறுதிக்குள்ளும் 2012 பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 2014 இறுதிக்குள்ளும் வேலை வாய்ப்பு வழங்கப்படும். அதற் கமைய இவ்வருடம் நடந்த பரீட்சையில் 4 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 2015 டிசெம்பர் 31இற்கு முன்பு வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, 2011, 2012 ஆம் வருடங்களில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் எஞ்சியுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும் எனவும் அது வரை அவர்கள் பொறுமையாக இருக்கவேண்டும் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கட்டுவனில் இரவிரவாக அரங்கேறும் காட்சி நல்லிணக்கத்துக்கு கறுப்புப் புள்ளி குத்தவா?

நீங்கள் எதனைச் சொன்னாலும், நாம் முன்வைத்த காலைப் பின்வைக்கும் பிரகிருதிகள் அல்லர். கொழும்பு அரசு சொன்னதைச் செய்வோம். இதனை உங்கள் மனதில், நெஞ்சில் பதித்துக்கொள்ளுங்கள்--

வடக்கு மாகாண சபையின் ஆட்சியாளர்களுக்கு, அவர்கள் பதவியேற்ற இரண்டு நாள்களில் மேற்கண்ட தோரணையில் சவால் விட்டிருக்கிறது அரசின் பாதுகாப்புப் படை.

உயர் பாதுகாப்பு வலயம் என்று பெயரிடப்பட்ட வலி.வடக்கின் ஓர் பகுதியான, கட்டுவன் கெற்றப்போல் சந்திக்கு அண்மையில் உள்ள வீடுகள், அடையாளம் தெரியாதவாறு, இரவு பகல் பாராது இடித்து அழித்துத் துவம்சம் செய்யப்படுகின்றன.

முதலில் அந்தப் பிரதேசத்தில் மண்டியிருந்த பற்றைக்காடுகள் வெட்டி அகற்றப்பட்டன. அந்த முன்னோட்டத்தின் பின்னர் இரவிரவாக அங்கு அமைந்திருந்த வீடுகள்- எமது மக்கள் தமது கடின உழைப்பில் தேடிய பணத்தைக் கொண்டு நிர்மாணித்த வீடுகள்- தரைமட்டமாக்கப்பட்டன. அந்தப் பாதகப் பணிகள் இடைவெளி இன்றித் தொடர்ந்தன; தொடர்ந்து கொண்டே இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனரக வாகனங்களின் உதவியுடன், வீடுகள் அமைந்திருந்தமைக்கான தடயம் தானும் தெரியாதவாறு வெற்றுக்காணிகள் கம்பி வேலிகளுக்குள் "அமுக்கப்படுகின்றன". இந்த வகையில் சுமார் இருநூறு வீடுகளையும் மற்றும் கட்டடங்களையும் தரைமட்டமாக்கும் வள்ளீசான திட்டம், இன்னும் சில தினங்களில் வேகவேகமாகச் செய்து முடிக்கப்பட்டுவிடும், பாதிப்புறும் நமது மக்களோ இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைதடி, நாவற்குழியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், புதிதாக இராணுவ முகாம்களை அமைக்கும் பணிகள் மேன்மேலும் தீவிரம் அடையும் என்பதற்குக் கட்டியம் கூறும் செயற்பாடாக இருக்குமோ என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மனங்களில் இயல்பாகவே எழுந்திருந்தது.

அதனைச் சரி என்றாக்கும் வகையில், வலி.வடக்குப் பகுதியில் உள்ள வீடுகளை அழித்து, அவை அமைக்கப் பட்டிருந்த காணிகளை பலாலி விமான நிலையத்தோடு சேர்க்கும் திட்டம் ஒன்று அரசினால் வகுக்கப்பட்டிருந்தமை நினைவில் கொள்ளத் தக்கது. அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், சுமார் 23 வருடங்களாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள், தெரிந்தவர்களின் ஒட்டுக்குந்துகளிலும், நாள்களை உச்ச விரக்தியுடன் கழித்து வருகிறார்கள்.

வடக்கு மாகாண சபை செயற்படத் தொடங்கினால் படையினரின் (அரசின்) காணி பறிப்பும், மற்றும் படை விலக்கலால் (அல்லது குறைப்பு) போன்ற தமது பிரச்சினைகளுக்கு சுமுக மான தீர்வுகள் ஓரளவிலேனும் கிடைக்கும் என்று எங்கள் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவை குறித்து ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம் வேண்டுமானால் மேலும் தீவிரமாக்கு வோம் அதனையும் அதிவேகத்தில் விரைந்து செய்து காட்டுவோம் என்று-

வடக்கு மாகாண சபைக்கு, மக்களால் அமோக நிலையில் பெரும் எழுச்சியுடன் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குச் சவால் விடும் வகையில், வலி.வடக்கில்- கட்டுவன்- பிரதேசத் தில் எச்சரிக்கைச் சமிக்ஞை, சிவப்பு விளக்குத் தூண்டப் பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கான இட வசதிகளையும் வாழ்வாதார வசதிகளையும் அரசு பெற்றுத் தந்தால், வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவோம்- என்று அதன் பேச்சாளர் பிரிகேடியர் ரூவன் வணிக சூரியா கடந்த வாரம் தெரிவித்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

ஒட்டு மொத்தத்தில் மக்கள் அரசு ஒன்று வடக்கில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், அதன் சொல் (கொழும்பு அரசின்) சபை ஏறாது என்பதனையே இராணுவப் பேச்சாளர் பூடகமாகக் கூறினார் என்று கொள்ளலாம். மூன்று நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நடைபெற்ற போது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெற்கு அரசுக்கும் மக்களுக்கும் நேசக்கரம் நீட்டியிருந்தார்.

தமிழ் மக்களின் அவலங்களைப் போக்க மத்திய அரசுக்கு ஒத்துழைப்புக் கரத்தை, நேசக்கரத்தை நீட்ட நாம் தயாராகவே இருக்கிறோம்--

அரசுக்கும், வடக்கு மாகாண சபைக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஜனநாயகத்தை எமது வடக்கு மண்ணில் நிலைபெறச் செய்யலாம்--

மக்களின் அவலங்களைப் போக்குவதற்கு இணைந்து குழுமித்துச் செயலாற்றலாம்-

தனது உயரிய இராஜதந்திரத்தைக் காட்டுவதற்கு அரசுக்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது--

தமக்குரிய- தமக்கே உரித்தான- உரிமைகளை அனுபவித்து இடைஞ்சல்கள்- இடையூறுகள் இன்றி தமது மக்கள்- தமிழ் மக்கள்- வாழ வேண்டும் என்ற தூரநோக்குடன் முதலமைச்சர் தெரிவித்த ஆக்கபூர்வமான கருத்துக்களை, உள்வாங்க விருப்பமின்றியே கட்டுவன் "களபுளா" தொடங்கப்பட்டிருக்கிறது என்று கருதுவது தப்பன்று.....

# இடியப்பச் சிக்கலான சூதாட்டச் சட்ட வரைவு

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
-கோகுலன்

*ஜாதிக ஹெலஉறுமய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய சுதந்திரமுன்னணி ஆகியவை கசினோ சூதாட்ட சட்ட முன் வரைவுக்கு அரசுக் குள்ளிருந்தபடியே கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில் ஐ.தே.கவும் சட்டத்தை எதிர்த்து பரப்புரை செய்ய முடிவு செய்துள்ளது.*

இலங்கையர் பலபேருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசின் உயர் மட்டத்தில் இடம்பெற்று வரும் அதிகார விளையாட்டுப் போக்குகள் தெரிந்திருப்பதில்லை. சில சமயம் பத்திரிகை மற்றும் ஊடகங்களில் வரும் செய்திகளைப் பார்த்து விட்டு மேலும் விவரம் அறிய முயல்வதுண்டு. மற்றப்படி அவர்கள் எப்போதும் இருளுக்குள்ளேயே இருந்து வருகிறார்கள். அப்படியானதொரு விடயம் கடந்த வாரம் வெளியில் வந்திருந்தது. பிரபலமான ஆஸ்திரேலிய சூதாட்ட தொழில் அதிபர் இலங்கையில் 350 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யப் போகிறார் என்பது அதில் ஒன்று. கலப்பு அபிவிருத்தித் திட்டம் என்று அதிகார பூர்வமாக வர்ணிக்கப்பட்டுள்ள இந்த முதலீட்டில் கொழும்பு விஜேவர்தன மாவத்தையில் இந்தத் திட்டம் செயற்படப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது கொழும்பைச் சேர்ந்த பணக்கார மற்றும் செல்வாக்குள்ள வர்த்தகருடன் இணைந்து ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இன்னொன்று 'இன்ரக்கிரேட்டட் றிசோர்ட்' (ஒருங்கிணைந்த வாசஸ்தலம்) என்ற பெயரின் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவாக அமையப் போகும் வோட்டர் புரன்ட் புறொப்பர்ட்டீஸ் (தனியார்) நிறுவனத்தின் முதலீடாகும். இது ஸ்லேவ் ஐலன்டில் நீதியரசர் அக்பர் மாவத்தையில் அமையப் போகின்றது.

இந்த ஆஸ்திரேலிய முதலீட்டுடன் ஸ்டேட் ஒப்.த.ஆர்ட் கசினோ அமைப்பும் சேர்ந்து இயங்கப் போவதாக வந்த செய்தியானது கொழும்பு வர்த்தக வட்டாரங்களில் கடந்த காலத்தில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இருந்த போதிலும் அரசு சார்ந்த அரசியல்வாதிகள் கசினோ என்ற சொல்லை மிகக் கவனமாகப் பயன்படுத்தாமல் இருந்துவந்தார்கள். இந்தச் சொல்லானது அரசியல் மற்றும் கலாசார மட்டத்தில் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியது என்று கருதப்படுவதாகும். இருந்தாலும் இவர்களில் பலர் அந்த வர்த்தக உடன்பாட்டை பலகாரணங்களின் நிமித்தம் இரகசியமாக வரவேற்றனர். ஆதரிக்கவும் செய்தனர். கடந்த சனிக்கிழமை முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா வெளியிட்ட ஓர் அறிக்கையில் வெளிநாட்டவர்களுக்கு கசினோக்களை நடத்த அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என்றார். அவர் மேலும் கூறுகையில் 1988 ஆம் ஆண்டு விளையாட்டுக்கள் மற்றும் சூதாட்டம் தொடர்பான சட்டத்தின் கீழ் கொழும்பில் 4 நிலையங்கள் விளையாட்டுக்கள் நடத்துபவையாக இருந்து வருகின்றன. அவைகள் பாடசாலைகள் மற்றும் வணக்கத் தலங்களுக்கு அருகில் அமைந்துள்ளன. இவைகளை ஒரே இடத்தில் இயங்க செய்வதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது. எனவே இவ்வாறான விளையாட்டு இடங்களுக்கு உரிமம் எதனையும் அரசு வழங்கமாட்டாது. அவைகள் அனைத்தையும் ஒரே இடத்துக்கு கொண்டுவரவே அரசு விரும்புகின்றது. ஹோட்டல்கள் வர்த்தக நிலையங்கள் போன்ற கலப்பு வளர்ச்சி திட்டங்களில் ஜோன்கீல்ஸ் மற்றும் ஜேம்ஸ் பாக்கர் நிறுவனங்கள் முறையே 650 அமெரிக்க டொலரும் 350 அமெரிக்க டொலரும் முதலீடு செய்ய முன்வந்துள்ளன என்றார் அமைச்சர்.

### அமைச்சின் மழுப்பல்

இது "கொயதயன்னே மல்லே பொல்" (எங்கே போகிறாய் பையில் தேங்காய்) என்ற சிங்களப் பழமொழியை நினைவூட்டுவதாகவே இருந்தது. (இதன் தமிழ் நேரடிப் பழமொழி "வட்டுக் கோட்டைக்கு வழியெது, கொட்டைப் பாக்கு துட்டுக்குரெண்டு" என்பதாகும்.) கசினோக்கள் பற்றி விமர்சகர்கள் குற்றம் சாட்டுவதை மௌனிக்கச் செய்வதற்காக அமைச்சர் விளையாட்டு அமைப்புகளை ஒரே இடத்தில் நிலைப்படுத்துவது பற்றியும் சூதாட்ட நிறுவனங்களுக்கு வெளிநாட்டவர்களுக்கு கூட உரிமங்கள் வழங்கப்படவில்லையென்று அவர் அடித்துக் கூறினார். அந்தப் பழ மொழியைப் போன்று அமைச்சர் பிரச்சினைக்கு நேரடியாகப் பதில் தரவில்லை. அதனைக் கெட்டித்தனமாக தவிர்த்துக் கொண்டு விட்டார். மேலும் அமைச்சர் கூறியிருப்பது போல் அவ்வாறான கசினோக்களை ஒரே இடத்தில் அமைப்பதனாலும் கூட 1988 ஆண்டு சட்டத்தின் குறித்த பிரிவுகள் வர்த்தமானியில் வெளியிடப்படாத வரை செய்ய முடியாது என்றாலும் ஊடகங்களின் ஒரு முழுப் பக்க விளம்பரம் ஒன்றை பிரசுரிப்பதற்கு இலங்கைக்கான சந்தர்ப்பம் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அரசு 480 ஹோட்டல் அறைகளும் மிக முக்கியமானவர்களுக்கான சொகுசு அறைகளும் கொண்டதாக அந்த விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு வசதிகள் அமைப்பு அமைந்திருக்கும் என்று தெரிவித்துள்ளது. இலங்கையின் சொகுசு வாழ்வு முறையை சீர் திருத்தி ஆசியாவின் அதிசயமான புதிய தோற்றமாக இலங்கையை கிறௌன் சிறிலங்கா நிறுவனம் நிலை நிறுத்த விரும்புகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பெக்கர்ஸ் கிறௌன் குரூப் மற்றும் மிகப் பெரிய சூதாட்ட நிறுவனமான 'ராங்க் ஹோல்டிங்க்' ஆகியவற்றின் கூட்டு அமைப்பே கிறௌன் சிறிலங்கா நிறுவனம். பெக்கர்ஸ் ஆஸ்திரேலியா, எக்கௌ, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் ஏற்கனவே இயங்கி வருகின்றது. ஆஸ்திரேலியாவில் அதன் பிரதான நிறுவனம் அமைந்துள்ளது. கசினோ சூதாட்டங்களில் எப்படி ஈடுபடுவது என்பதில் அவர்கள் பாடங்களையும் நடத்துகிறார்கள்.

### பங்காளி கட்சிகள் எதிர்ப்பு

அரசின் இந்த நடவடிக்கைகளில் இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் மட்டுமல்ல இந்த முறை அரசின் பங்காளிக் கட்சிகளும் குழப்பமடைந்துள்ளன. கடந்த ஓகஸ்டில் அமைச்சர் அபேவர்தன அமைச்சரவைக்கு வழங்கிய ஒரு பரிந்துரையில் ஜோன் கீல்ஸ் மற்றும் கிறௌன் லங்கா நிறுவனத்துக்கு மிக முக்கிய நிறுவனங்கள் என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். அதே சமயம் ஓகஸ்ட் 21 ஆம் திகதி அமைச்சரவைக்கு வழங்கிய குறிப்பொன்றில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். "நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக சூதாட்டங்களை முக்கியத்துவப் படுத்தலாகாது மஹிந்த சிந்தனைக்கு மாறான செயலாக இது அமைகிறது" என்றும் அவர் வாதிட்டார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்த சிந்தனை தேர்தல் அறிக்கையாக வெளியிடப்பட்டிருந்தது. கசினோக்களை ஆரம்பிப்பதை விடுத்து உல்லாசப் பயணத் துறையை அரசு வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் வற்புறுத்தியிருந்தார். சூதாட்ட நிறுவனங்களுக்கு இடம் கொடுத்தல் அதன் மூலம் விப சாரம், போதைவஸ்து கடத்தல், சிறு ஆயுதங்கள் போன்ற சமூக சீர்குலைவுகள் அதிகரிக்கவே உதவும். சமூக செலவினங்களும் அதிகரிக்கும் என்றும் அவர் வாதிட்டிருந்தார். இதற்கிடையில் அவர் சார்ந்த கட்சியின் மத்திய குழு கூடி ஆராய்ந்த பின் வெளி நாட்டு முதலீடுகள் அமைச்சினால் கசினோ சூதாட்டம் தொடர்பான சட்ட முன் வரைவு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் போது அதனை ஆதரிப்ப தில்லையென்று முடிவெடுத்தது.

இந்த முடிவை அமைச்சர் சம்பிக்க அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். கசினோ சூதாட்ட நிறுவனங்களுக்கு எல்லாவித சலுகைகளும் அளிப்பதையும் அவர் எதிர்த்தார். கசினோ சூதாட்ட அமைப்புகள் கொழும்பில் இருக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். சூதாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கலாம். அது வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே என்று கட்டுப்படுத்தலாம் என்று ஜனாதிபதி விளக்கினார். இந்தக் கூட்டத்தில் முக்கியமான அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கவில்லை.

### முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

கசினோ சூதாட்ட சட்ட முன் வரைவுக்கு எதிராகவே தனது கட்சி வாக்களிக்கும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். கசினோ சூதாட்டத்தை கொள்கை ரீதியாக முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதாக அவர் சொன்னார். இந்தக் கூட்டத்தில், கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இந்த விவாதத்தை நடத்தப் போவதில்லையென்பதை ஜனாதிபதி அறிவித்தார். அடுத்துவரும் கூட்டத்தில் அமைச்சர்கள் தொடர்ந்து இந்த விடயத்தை ஆராய்வார்கள் என்றும் அறிவித்தார். அடுத்த நாள் கூட்டமும் கடும் வாக்கு வாதங்களுடனேயே முடிந்தது.

இதன் பின்னர் கசினோ தொடர்பான சட்ட வரைவு அமைச்சரவையின் உப குழுவினால் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்ற அமைச்சர்கள் முடிவு செய்தனர். சட்டமுன்வரைவில் ஜனாதிபதி தெரிவித்துள்ள பரிந்துரைகளையும் இணைப்பதற்கு அமைச்சர்கள் முடிவெடுத்தனர். வர்த்தமானி அறிவித்தலிலும் தேவையான மாற்றங்கள் செய்ய தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னரே வர்த்தமானி தொடர்பான விவாதத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. கசினோ சூதாட்டம் தொடர்பான சட்ட முன் வரைவின் மீது இரண்டு நாள்கள் விவாதம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகும் ஜாதிக ஹெலஉறுமய கசினோ சட்ட முன்வரைவை ஆதரிக்குமா என்பது தெரியவில்லை.


எதிர்க்கட்சியானது ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது விடயமாக பௌத்த சமய குருமார்களையும் சிவில் உரிமை அமைப்புக்களின் தலைவர்களையும் சந்தித்து கசினோ சூதாட்ட சட்டத்தின் வரைவு தொடர்பாக ஆலோசிப்பதற்காக 5பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார். கசினோ சூதாட்ட நிலையங்கள் அமைக்கப்படுவதையும் அவர்களுக்கு வரி சலுகைகள் வழங்கப்படுவதையும் ஐ.தே.க எதிர்க்கத் தீர்மானித்துள்ளது. அதேபோல் கசினோ சூதாட்டத்தினால் நாட்டுக்கு ஏற்படப் போகும் சீர் அழிவுகள் குறித்து நாட்டு மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு பரப்புரைகளை ஆரம்பிக்கவும் அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமுகப் பொறுப்பு எங்கே போனது?

சு.சாரங்கி

**உருவத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகிறான். உள்ளத்தில் உயராமல் குறுகி நிற்கிறான். திரையில் வந்த தீமைகளை மனதில் கலக்கிறான் திறமைகளை வளர்ப்பதற்கோ மறந்து விடுகிறான்.**



இளைஞர்களின் மகத்தான ஆற்றல் அழிவுப் பாதையில் பாய்ந்து கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டும். ஆக்கபூர்வ சிந்தனைகள் அவர்களிடம் வளரவேண்டும். அறிவை நோக்கி இளைஞர்கள் பயணிக்க அவர்களுக்கு வழிகாட்டுவது சமுதாயக் கடமை.

நமது இளைஞர்களை நாம் எப்பாடுபட்டாவது காப்பாற்றியாக வேண்டும். காப்பாற்றுவது யார், எப்படி என்றெல்லாம் கேள்விகளை எழுப்பி வீண் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல.

சமுதாயப் பொறுப்பு என்பது முன்னர் ஒவ்வொருவர் மனதிலும் தனியொரு இடத்தைப் பெற்றிருந்தது. சமுதாயப் பொறுப்பு தனிமனித மனங்களில் மேலோங்கியிருந்த நாள்களில் இளைஞர்களுக்கும், பொது இடங்களில் தகாத செயல்களைச் செய்யத் தடையாக ஒரு தார்மீக பயம் உருவாகி இருந்தது. அதனால் அவலங்கள் அரங்கேறாமல் தடுக்கப்பட்டிருந்தன.

இதுபோன்ற சமுதாயப் பொறுப்புணர்வு இன்று தனிமனிதர்களிடம் முற்றிலும் குறைந்து, 'யார் எக்கேடு கெட்டுப்போனால் நமக்கென்ன? நான் சொல்லி யார் கேட்கப்போகிறார்கள்?' என்ற விரக்தி மனோபாவம் எல்லோர் மனதிலும் அழுத்தமாக ஒட்டிக்கொண் டுள்ளது.

ஒரு கோணத்தில் பார்த்தால் இது ஒரு சமுதாய நோய். யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற சமுதாய நோய் பரவியதற்கு காரணம் திரைப் படங்கள், தொலைக் காட்சித் தொடர்கள் நவீன இலத்திரனியல் சாதனங்களின் செல்வாக்கு அதிகரித்த போதைப் பொருள் பாவனை என்பன தான். இதனால் ஏற்பட்ட வக்கிர எண்ணங்கள் கொலை, கொள்ளை, களவு பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற மனித நேயமற்ற செயல்களின் அரங்கேற்றத்துக்குக் காரணம் தட்டிக் கேட்க யாரும் இல்லாமையே. போர் நடைபெற்ற வேளையில் கூட இளைஞர்கள் தீய பழக்கங்களுக்குப் அடி பணியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் இன்று நிலலைமை அப்படியல்ல.

### இளையவர்கள் திருந்தி நடக்க வேண்டும்

இன்றைய இளைஞர்களுக்கு பாரம்பரிய வேர்களின் மூலம் நல்லதை உறிஞ்சி எடுத்து ஊக்கம் பெற உள்ளார்ந்த ஈடுபாடு இல்லை. அந்த ஈடுபாட்டை உருவாக்க சான்றோரும் அருகில் இல்லை.

ஆனால் காலத்தால் அழிக்கமுடியாத சில உன்னதத் தலைவர்கள் மறைந்த பின்பு கூட மாபெரும் சக்தியாக மாறி மக்களுக்கு ஊக்கம் தந்து கொண்டிருக்கிறார்கள். நாம் சரியான நேரத்தில், சிறந்த தலைவர்களை இளைஞர்களுக்கு அடையாளம் காட்டி இதயத்தில் பதிய வைக்காமல் போய் விட்டோம். அதன் விளைவு, இன்றைய இளைஞன் தனது தலைவனை சினிமாத் திரையில் தேர்ந்தெடுக்கிறான். தேர்ந்தெடுத்த தலைவனை மனக்கோயிலில் சிம்மாசனம் தந்து அமர வைக்கிறான். அந்த நிழல் தலைவனின் நிலையில்லாப் புகழை நித்தமும் பாடி சங்கீத ஆலாபனை செய்கிறான்.

உருவத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகிறான். உள்ளத்தில் உயராமல் குறுகி நிற்கிறான். திரையில் வந்த தீமைகளை மனதில் கலக்கிறான். திறமைகளை வளர்ப்பதற்கோ மறந்து விடுகிறான்.

எதற்கும் அஞ்சாமல் எதிர்த்துப் போராடும் குணம் இளமையில்தான் இருக்கும். அந்த குணத்தை நல்ல விடயங்களுக்காக போராடும் வகையில் திருப்பிவிடவேண்டியது சான்றோர்களின் சமுதாயப் பொறுப்பு.

இளமைப்பருவம்தான் சிறந்த எதிர்காலத்துக்கான நல்ல அடித் தளத்தை உருவாக்குவதற்கான உன்னத பருவம். இந்தக் காலக்கட்டத்தில் மனத்தை நன்கு உழுது நல்ல பண்பு விதைகளை விதைப்பதற்குச் செய்ய வேண்டிய பணிகளை உடனே செய்தாக வேண்டும். இளம் மனம் என்ற நிலத்தை உழாமல் விட்டுவிட்டால், எண்ணற்ற களைகள் மண்டி, பாழ் பட்டுப் போய்விடும்.

### விழிப்பாக இருக்கும் காலம் இது


பயன்படுத்தப்படாத பாழ்நிலம் என்று தெரிந்தவுடன் பல கயவர்கள் வந்து இளம் மனதை ஆக்கிரமிப்புச் செய்து சிறு சிறு குடிசைகள் போட்டு சொந்தம் கொண்டாட ஆரம்பித்துவிடுவார்கள். ஒவ்வொரு குடிசைக்குள்ளும் சூதாட்டம், களியாட்டம் போன்றவை நடக்க ஆரம்பித்துவிடுகின்றன.

எவருடைய வாழ்க்கையை நன்றாக அறிந்தால் இளைஞர்களுடைய வாழ்வு முன்னேற்றம் அடையுமோ, அதுபோன்ற முன்மாதிரித் தலைவர்கள் பற்றி வெளிப்படையாகப் பேச முடியாத நிலமை உள்ளது . நேர்மை, தியாகம், விவேகம், சமுதாய நலன் ஆகியவற்றைத் தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்ட மாமனிதர்களும், மகான்களும் மறக்கப்படுகிறார்கள், மறக்கடிக்கப்படுகிறார்கள். கவர்ச்சிகளும், கண்ணியமற்ற பேச்சுகளும், தரம் தாழ்ந்த செயல்களும் இன்று இளைஞர்களை இறுக்கமாக கட்டிப்போட்டு வைத்துள்ளன. இவற்றில் இருந்து இளைஞர்கள் விடுபட்டு வெளியில் வரவேண்டும்.

---

# சிறந்த நூல்கள் நல்ல நண்பர்கள்





**'வாசிப்பதால் மனிதன் பூரணமடை கின்றான்', 'பாடை யேறினும் ஏடது கைவிடேல்' போன்ற பழமொழிகள் வாசித்தலின் அவசியத்தை எடுத்தி யம்புகின்றன. நாம் நல்ல நூல்களைக் கற்பதனால் எமது அறிவுத்திறன் விருத்தியடைகின்றது. எமக்குக் கிடைக்கும் நேரங்களைப் பயனுள்ள வகையில் செலவு செய்ய வாசிப்பு துணை புரிகின்றது.**

திருமதி ஜெ.நந்தினி.
கிளி/முருகானந்தாக் கல்லூரி.

'ஒக்ரோபர் மாதம்' வாசிப்பு மாதமாகக் கொள்ளப்படுகின்றது. இன்றைய உலகில் அருகி வரும் வாசிப்பு நாட்டத்தை இனங்கண்டு வாசித்தலைத் தூண்டும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் இந்த மாதத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பாலான பாடசாலைகளிலும், நூலகங்களிலும் வாசிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு போட்டிகளும், நிகழ்வுகளும் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இன்றைய உலகில் அருகிவரும் நூலகப் பாவனையை ஊக்குவிக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. இந்தச் செயற்பாட்டினூடாக கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தும் கைத்தொலைபேசி , இணையப் பாவனை போன்றவற்றின் தாக்கத்திலிருந்தும் எமது இளைய தலைமுறையை விடுவிக்க முடியும்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை , கற்க வேண்டிய நூல்கள் ஏராளமுள்ளன. தொல்காப்பியம் , நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் தொடங்கி எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்கள், இரட்டைக் காப்பியங்கள், திருக்குறள், நாலடியார் உட்பட சங்கமருவிய கால அற இலக்கியங்கள், பக்திச்சுவை சொட்டும் பல்லவர் காலப் பாடல்கள் , கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்கள் இவ்றறுடன் தற்கால உரைநடை இலக்கியங்களான நாவல், சிறுகதை, கவிதை, ஆய்வுக் கட்டுரைகள் எனச் சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றை விட பிறமொழி இலக்கியங்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் போன்றனவும் பயனுடையனவாகத் திகழ்கின்றன. சிறந்த நூல்களைத் தேர்ந்து கற்றல் பற்றி 'கல்வி கரையில..' என்ற நாலடியார் பாடல் விளக்குகின்றது. நாம் கற்கவேண்டிய பகுதிகள் கரையற்றன; கற்கும் காலமோ மிகவும் குறைவானது. இவ்வாறான சூழ்நிலையில் தான் பாலையும் நீரையும் இணைத்து வைக்கும் போது நீரை விலக்கி பாலை உண்ணும் அன்னப் பறவைபோல் நாமும் நல்லவற்றைத் தேர்ந்து கற்கவேண்டும்.

எமது ஓய்வு நேரங்களை வாசித்தலில் செலவிடும் போது தேவையற்ற சச்சரவுகள், வீண் பேச்சுக்கள் கூட எம்மை விட்டு நீங்கிவிடும். நாம் எமது அறிவைப் பெருக்கிக் கொள்வதுடன் நற் பண்புகளையும் வளர்த்துக் கொள்ள முடியும். 'கண்டதும் கற்கப் பண்டிதனாவான்' என்பதற்கு இணங்க நாம் எமது படைப்பாற்றல் திறனையும் விருத்தி செய்யலாம். கவிதை, சிறுகதை, நாவல் , கட்டுரை போன்ற பல்வேறு ஆக்கங்களைப் படைக்கும் ஆற்றல் பெருகும்.

'கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க நாம் சந்தேகமற கற்று அதன்படி ஒழுகும் போதுதான் சிறந்த பயனைப் பெறலாம்.

எனவே நல்ல நண்பர்களாக விளங்கும் சிறந்த நூல்களைக் கற்று வாழ்வில் அறிவொளியைப் பெற்றுப் பிறரின் வாழ்வு ஒளிரவும் துணை புரிந்து , என்றும் அழியாத கல்விப் புகழ் பெற்று நாமும் சிறந்து பிறரையும் வாழ்விப்போம்.

**"எமது ஓய்வு நேரங்களை வாசித்தலில் செலவிடும் போது தேவையற்ற சச்சரவுகள், வீண் பேச்சுக்கள் கூட எம்மை விட்டு நீங்கிவிடும். நாம் எமது அறிவைப் பெருக்கிக் கொள்வதுடன் நற் பண்புகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்தில் சிக்கிய 490 பேருக்கு சிகிச்சை

தென்மராட்சி,ஒக்.28
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த ஒன்பது மாதங்களில் வீதி விபத்துக் களில் சிக்கிக் காயமடைந்த 490 பேர் சேர்க்கப்பட்டுள்ள ளனர் என்று வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

அவர்களில் 126 பேர் மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும், அவசர பிரிவில் இரு வர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வரு டங்களுடன் ஒப்பி டுகையில் இந்த வருடம் வீதி விபத்துக் களில் சிக்கிக் காயமடை வோரின் எண்ணிக்கை குறைந் துள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பூநகரி ஆகிய பொலிஸ் நிலையங்களின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் கண்காணிப்பும் வீதி விபத் துக்கள் குறைவுக்கு காரணி களில் ஒன்றாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



## பிரதேச பண்பாட்டு விழா பூநகரியில் கோலாகலம்



பூநகரி,ஒக்.28
பூநகரிப் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பண்பாட்டுவிழா கடந்த வியாழக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

பிரதேச செயலரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார். விழாவில் பிரதேச கலைஞர்கள் கௌரவிப்பு, 'பூந்துணர்' பிரதேச மலர் நூல் வெளியீடு, கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக் கான பரிசில் வழங்கல், பிரதேச பண்பாட்டுக் குழுக்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (வ-9)

## இராமநாதன் கல்லூரி நூலக குழுவால் அபிவிருத்தி திட்டங்கள்

வலி. வடக்கு, ஒக்.28
நூலக வாசிப்பு மாதத்தையொட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சொல்லாக்கப் போட்டி, ஒரு சொல் இரு பொருள் போட்டி, பழைய பத்திரிகைகளில் தகவல்களைச் சேர்த்தல், கதை உருவாக்கல், பேச்சுப் போட்டி, பொது அறிவுப் போட்டி, கவிதை மற்றும் 'வாசிப் பின் இன்பம்' பேச்சுப் போட்டி சித்திரம் மற்றும் தகவல்கள் தேடுதல் ஆகியன போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (வ-86)

# இடர் பாதுகாப்புக் கல்வி புங்குடுதீவில் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.28
இடர் பாதுகாப்புக் கல்வி தொடர் பிலான பாடசாலை செயற் றிட்டக் கற்றலின் இறுதி நிகழ் வுகள் வெள்ளிக்கிழமை புங் குடுதீவு சர்வோதய மண் டபத்தில் நடைபெற்றன.

ஜி.ஐ.இசற், ஈ.எஸ்.சி.தீவக கல்வி வலயம் என்பன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் புங்குடுதீவுப் பகுதி யில் நிலவும் வறட்சியும் அத னைத் தவிர்க்கும் செயற்பாடு கள் குறித்த ஆய்வுகள் தொடர் பான கருத்துரைகள், நாட கங்கள் என்பன இடம்பெற்றன.

புங்குடுதீவு ஸ்ரீசித்திவிநாய கர் வித்தியாலய அதிபர் எஸ்.கைலைநாதன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தின



ராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின் ரஸ் கலந்து கொண்டார்.

ஜி.ஐ.இசற். மாகாண இணைப் பாளர் வீ.இராசையா, தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன், புங்குடுதீவு சர்வோதய பொறுப்பாளர் செல்வி பொ.ஜமுனாதேவி ஆகியோர் கருத்துரை வழங் கினர். இடர் பாதுகாப்பு குறித்த கண்காட்சியும் மாணவர் களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-7)

## சாவகச்சேரியில் 5 நூலகங்கள் விருதுக்கு தெரிவு



யாழ்ப்பாணம்.ஒக்.28
தேசிய ஆவணமாக்கல் சபை யால் வருடாந்தம் வழங்கப் படும் சிறந்த நூலக சேவைக் கான விருதுக்கு சாவகச்சேரி பிரதேசத்தில் 5 நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சரசாலை, கைதடி, நாவற் குழி, வரணி, மிருசுவில் ஆகிய பொது நூலகங்கள் சிறந்த நூலகங்களாகத் தெரிவு செய் யப் பட்டுள்ளன. (வ-14)

## வரணி மருத்துவமனைக்கு வைத்திய அதிகாரி நியமிப்பு

தென்மராட்சி, ஒக்.28
வரணி மருத்துவமனைக்கு நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள் ளார்.

கிராமிய மக்களின் வைத்திய சேவையை நிறைவு செய்யும் நோக்குடன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் மற்றும் அரச மருத்துவ சங்க யாழ்.கிளைத் தலைவர் ஆகியோரின் முயற்சியின் பயனாகவே இந்த வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள் ளார்.

வரணி வைத்தியசாலையில் நீண்ட காலமாக உதவி வைத்



தியர்களும், மீள் நியமன உதவி வைத்தியர்களுமே கட மையாற்றி வந்தனர் என்று குறிப்பிடத்தக்கது. (வ-9)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரி யங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோ கத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசு காரி யங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**மிதுனம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத் தில் மதிக்கப் படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்** : சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். மற்றவர்களை நம்பி குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை சுட்டிக் காட்ட வேண்டாம்.

**சிங்கம்:** உறவினர்கள், நண்பர்களுடன் வீண் விவாதம் வந்துப் போகும். உத்தி யோகத்தில் மேலதிகாரியால் சங்கடங்கள் ஏறப்டும்.

**கன்னி:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**நாளை**
ஐப்பசி-12 செவ்வாய்க்கிழமை 29.10.2013
திதி: தசமி மு.இ.07.52 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ.10.29 வரை
சுபநேரம்: 10.33 - 12.03 வரை
இராகுகாலம்: 03.03 - 04.33 வரை

**துலாம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணி களை விரைந்து முடிப்பீர்கள். மன நிறைவு கிட்டும்.

**விருச்சிகம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்த னைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப் திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப் பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டாம். முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. உத்தி யோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மகரம்:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அர சுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத் தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கும்பம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**மீனம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங் களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 3 | | | | | | 4 |
| 8 | 6 | | 5 | 4 | 3 | | | 9 |
| | | 4 | | | 6 | | | 5 |
| | | | | 1 | 5 | | | 3 |
| | 8 | | 7 | | 4 | | 9 | |
| 1 | | | 9 | 3 | | | | |
| 4 | | | 8 | | | 2 | | |
| 7 | | | 3 | 5 | 9 | | 4 | 8 |
| 6 | | | | | | 9 | 3 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 5 | 7 | 3 | 8 | 1 | 4 | 6 |
| 3 | 4 | 8 | 1 | 9 | 6 | 7 | 5 | 3 |
| 6 | 1 | 7 | 4 | 2 | 5 | 9 | 3 | 8 |
| 4 | 3 | 1 | 8 | 5 | 2 | 6 | 7 | 9 |
| 5 | 6 | 2 | 9 | 7 | 4 | 8 | 1 | 3 |
| 7 | 8 | 9 | 6 | 1 | 3 | 4 | 2 | 5 |
| 1 | 7 | 3 | 5 | 6 | 9 | 2 | 8 | 4 |
| 8 | 2 | 6 | 3 | 4 | 7 | 5 | 9 | 1 |
| 9 | 5 | 4 | 2 | 8 | 1 | 3 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பெண்கள் மீது திணிக்கப்படும் கலாசார குறியீடுகள்

அனுஜன்

**பெண்களிடம் கருத்து எதையும் கேட்காமல் அவர்கள் மீது திணிக்கிறது ஆணாதிக்க சமுதாயம். பெண்கள் கலாசாரத்தின் குறியீடுகள் என்று குறிப்பிடுகிறீர்களே! இதில் பெண்களுக்கு உடன்பாடு இருக்கிறதா, என்று யாரேனும் கேட்டிருக்கிறார்களா?**



உடை உடுத்துவதில் தொடங்கி, பொது இடத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது வரை, பெண்கள் மீது பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து, அதற்கு கலாசாரம் என்றும் பெயர் சூட்டி, பெண்களை அவர்களின் சுதந்திரத்தின்படி செயற்பட விடாமல் தடுக்கிறது இந்தச் சமூகம். அத்துடன் விட்டார்களா? பெண்கள் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன செய்யக் கூடாது என்பதை வரிசையாகப் பட்டியலிட்டு, அதன்படி வாழ முற்படும் பெண்களிடம் கருத்து எதையும் கேட்காமல் அவர்கள் மீது தங்களின் விருப்புகளைத் திணிக்கிறது ஆணா திக்க சமுதாயம். பெண்கள் கலாசாரத்தின் குறியீடுகள் என்று குறிப்பிடுகிறீர்களே! இதில் பெண்களுக்கு உடன்பாடு இருக்கிறதா, என்று யாரேனும் கேட்டிருக்கிறார்களா? அல்லது அந்த உடன்பாட்டின் ஆயுள் எவ்வளவு என்பதையாவது ஆணாதிக்க சமுதாயம் நிர்ணயித்திருக்கிறதா?

கலாசாரத்தின் நிரந்தர அடையாளங்களாக மாற்றப்பட்டதால் பெண்கள் சந்தித்த இழப்புகள் குறித்து யாரேனும் விசனப்பட்டிருப்பார்களா? இன்றுவரை பெண்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பதில் அவளின் கருத்துகளைவிட பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் உள்ளிட்ட மற்ற வர்களின் கருத்துகளுக்குத்தானே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது? உதார ணமாக மறுமணத்தை எடுத்துக்கொள்வோம். கணவன் இறந்துவிட்டார் என்றால் ஒரு விதமான பார்வை. கணவனுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அதனால் மணமுறிவு பெற்ற பெண்ணுக்கு மறுமணம் என்றால் அதற்கொரு பார்வை. ஏனிந்த முரண்பாடு?

இவ்விரண்டு விடயத்திலும் பங்கெடுத்துக்கொள்ளும் ஆண்களை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேச முடியாத ஊமையாகி விட்டார்கள் பெண்கள் மற்றும் பெண்ணியலாளர்கள். ஏனென்று ஆராய்கையில் எம்முடைய கலாசாரம் இதுதான் என்று ஆணித்தரமாக பதில் வருகிறது. எதை எதையோ மீளாய்வுக்கு உட்படுத்துகிறார்களே! அதன்படி, இதனை எப்போது மீளாய்வு செய்யப் போகிறீர்கள்?

கலாசாரத்தின் குறியீடுகளைச் சுமப்பதில் ஆண்களுக்குப் பங்கில்லையா? ஏற்க ஏன் தயங்குகிறீர்கள்? இன்றைய பொருளா தார நெருக்கடி மிக்க கால கட்டத்தில், குடும்பத்தின் நிதி நிலையை மேம்படுத்துவதற்கு பெண்களின் பங்களிப்பை எதிர்பார்க்கும் ஆண்கள்-அதற்கொரு நியாயம் கற்பிக்கும் ஆண்கள்-விரும்பியோ, விரும்பாமலோ கலாசாரத்தின் அடையாளங்களை நீண்ட காலமாகச் சுமந்துவரும் பெண்களின் சொல்லவியலாத வேதனையில் பங்கெடுத்துக் கொள்வதற்கு ஒரு நியாயத்தை எப்போது கற்பித்துக்கொள்ளப்போகிறீர்கள்? ஒரு பெண் குழந்தை பிறக்கும் தருணத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடு மரணம் வரை தொடர்கிறது. ஆனால் அந்தக் குழந்தை ஆணாக இருந்தால், எந்த விதக் கட்டுப்பாடும் கிடையாது என்ற சூழல் இனிமேலும் தொடரலாமா?

# புக்கர் பரிசுவென்ற பெண் எழுத்தாளர்



சு.சாரங்கி

மேகாலயாவின் தலைநகரான சில்லாங்கில் 24 நவம்பர் 1961-இல் கேரளத்தைச் சேர்ந்த ரோஸ்மேரிக்கும் வங்காளத்தின் தேயிலைத் தோட்ட பணியாளரான தந்தைக்கும் பிறந்தவர் அருந்ததிராய். இவருக்கு ஒரு வயது இருக்கும்போதே பெற்றோர் விவாகரத்து செய்து பிரிந்து போயினர். கலப்பு மணம் புரிந்து கணவனைப் பிரிந்து வாழ்ந்த தாய்க்கு மகளாகப் பிறந்ததனால் இவருக்கும் ஊரில், உறவில் எதிர்ப்பு அதிகமாகவே இருந்தது.

அருந்ததி ராய்க்கு சமூகம் எதிர் உலகமாகத்தான் முதலில் அறிமுகமாகியது. பின்னர் எல்லாவற்றையும் மீறி நீலகிரியில் பள்ளிப்படிப்பை முடித்து டில்லி ப் பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை படிப்பில் சேர்ந்தார். உடன் படித்த ஒருவரைக் காதலித்து மணந்ததால் படிப்பு பாதியில் நின்றது. அந்த வாழ்க்கையும் நான்கு ஆண்டுகள்தான் நிலைத்தது. அவரிடமிருந்து பிரிந்த பின்னர் பிரதீப் கிரிஷன்' என்ற திரைப்பட இயக்குநரை மணந்தார். இருவரும் சேர்ந்து திரைப் படம் எடுத்தனர். இந்த வாழ்க்கையும் இவருக்கு நிலைக்க வில்லை. இவரின் கட்டற்ற சிந்தனை அடக்குமுறைக்கு அடங்காதவராக இவரை வடிவமைத்திருந்தது.

மேலும் புரட்சிச் சிந்தனை மிக்கவராகவும் இவர் இருந்தார். இவரின் முதல் ஆசிரியரே இவரின் தாய்தான். "உன்னைப் பாதுகாக்க யாரும் இருக்க மாட்டார்கள். நீதான் மற்றவர்களைப் பாதுகாக்க வேண்டும்" என்கிற பாடம் அவருக்குச் சூழலைக் கற்றுக் கொடுத்தது. அதனால் எல்லாவற்றின்மீதும் கவனம் செலுத்த ஆரம்பித்தார். சமுதாயத்திலுள்ள பெண் அடிமைத்தனம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகள் என எல்லாவற்றையும் விமர்சனத்துக்கு உட்படுத்தி படைப்புகளின் மூலம் பலரின் கவனம் பெற ஆரம்பித்தார்.

இந்தநிலையில் தான் 1997-இல் அவர் எழுதிய 'த கோட் ஆப் ஸ்மால் திங்ஸ்' என்னும் நாவல் புக்கர் பரிசினைப் பெற்றது. புக்கர் பரிசு வென்ற முதல் இந்தியப் பெண் எழுத்தாளர் இவர்தான்.

# அறிவியலில் பெண்கள்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

கடந்தவாரம் சொல்லப்பட்டது போல் அறிவியலினைக் கொஞ்சம் ஆராய்ந்தாலே தெளிவாகத் தெரியும், இது பெண்களுக்கு இயற்கையாகவே அறிவியல் ஞானம் இல்லாததால் அல்ல என்று. ஆனாலும் 2005 ஆம் ஆண்டு பிரபல ஹவேட் பல்கலைக்கழகத்தின் அந்நாள் பேரமிரின் , Larry Summers கூட பெண்கள் பல்கலைக் கழகத்தில் குறைந்த எண்ணிக்கையில் இருப்பது சமூகத்தில் அவர்களுக்கெதிராகக் காட்டப்படும் பாகுபாடல்லாமல், இயற்கையிலேயே பெண்ணுக்கு அறிவியலில் நாட்டமோ திறனோ இல்லாமல் கூட இருக்கலாம் என்றார். அதன் பின்னே இப்பிரச்சனையைப் பற்றி ஓரளவுக்கு பலர் ஆராயத்தொடங்கினார்கள்.

கணித அறிவியல் பரீட்சைகளிலும் செய்முறைகளிலும் முன்னைய காலகட்டத்தில் இருந்த பால் வேறுபாடுகள் இப்போ மிகக் குறைந்துள்ள போதும், அறிவியல்/கணிதவியலில் அடிப்படைப் பட்டங்கள் எடுப்பதில் கூட 2000-ஆம் ஆண்டிலிருந்து ஆண்களை விடப் பெண்கள் கொஞ்சம் கூடுதலாக எண்ணிக்கையில் இருந்தும் அதன் பின் அறிவியல் துறையில் வேலை செய்யத் தியங்குவது ஏன்?

ஆண்டாண்டு காலமாக நிலைத்து நிற்கும் பாலியல் பாகுபாடுகள் எத்தனையோ பல்கூட்டமான உளவியல் மாற்றங்களையும் சிக்கலான எதிர் விளைவுகளையும் கொடுக்கக்கூடியதென்று இதுவரைக்கும் செய்யப்பட்ட எத்தனையோ ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு கணிதப் பரீட்சை அறையில் ஆண்கள் எண்ணிக்கையில் மிகக் கூடுதலாகவும் பெண்கள் மிகக் குறைந்தும் காணப்பட்டால் அந்தப் பரீட்சையில் பெண்கள் ஆண்களைவிட மிகக் குறைவாகவே மதிப்பெண் வாங்குவார்கள். அதேநேரம் இருபாலினரும் கிட்டத்தட்ட சம அளவில் இருப்பின் மதிப்பெண்களில் குறிப்பிட்டளவு வித்தியாசங்கள் இருக்காது. பரீட்சைத் தாளில் எழுதுபவர் என்ன பாலினம் என்று கேட்டிருப்பது கூட பரீட்சை செய்யும் திறனை குறிப்பிட்டளவு பாதிக்குமென ஆய்வுகள் கூறுகின்றன. இதிலிருந்து அடிமனதில் நாம் உணராமலே சமூகத்தின் கருதுகோள்கள் எம்மை எந்தளவுக்குப் பாதிக்கின்றன என அனுமானிக்கலாம். அறிவியல் துறையைப் பெண்கள் தேர்ந்தெடுப்பதில் மட்டுமல்ல பெண்களின் பதவியுயர்வுக்கு மேலதிகாரிகள் எழுதும் கடிதங்களின் மொழிகளையும் வேலைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுப்பதையும் கூட பாதிக்கின்றன. இதுமட்டுமல்ல, அப்படியே அடிபட்டு மேலே வந்து பெரிய பதவிகளில் இருக்கும் அநேகமான பெண்கள் திருமணமாகாதவர்கள் அல்லது பிள்ளைகள் இல்லாதவர்கள். எல்லாப் பெண்களும் திருமணம் செய்து பிள்ளை பெறத்தான் வேண்டுமென நிச்சயமாக நான் நினைக்கவில்லை. ஆனாலும் ஏன் திருமணமான, தாயான பெண்கள் ஒரு நிலைக்கு மேல் போக முடியாமலுள்ளது? இந்த விளைவுகள் தனியே அறிவியல் தெரிவையோ பெண்களையோ மட்டும் பாதிப்பவை அல்ல. எந்த ஒடுக்கப்படும் குழுவுக்கும் எதிர் மறையானதாகப் பொருந்தும்.



**பெண்கள் பல்கலைக் கழகத்தில் குறைந்த எண்ணிக்கையில் இருப்பது சமூகத்தில் அவர்களுக்கெதிராகக் காட்டப்படும் பாகுபாடல்லாமல், இயற்கையிலேயே பெண்ணுக்கு அறிவியலில் நாட்டமோ திறனோ இல்லாமல் கூட இருக்கலாம் என்றார்.**

செல்வி ராகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலர் குருபூசையும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக.28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருமூலர் குருபூசை விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கு.ஹேமலோஜினியும், கௌரவ விருந்தினர்களாக பிரம்மஸ்ரீ சு.குமரேசசர்மா, பிரம்மஸ்ரீ சு.நவநீத கிருஷ்ண சர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## பரிசில் நாள்

தென்மராட்சி,ஒக்.28

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய முன்னாள் அதிபர்களான சு.கனகசபாபதி, திருமதி பு.ஆறுமுகநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)




Vinotha's
Construction Materials Sales Center
Dealer in All type of Concrete Blocks
Telephone :024 2220370
Mobile :077 7571972
No 463,H.P Road,
Rambaikulam,Vavuniya.



கொம்ப்யூட்டர் மற்றும் லப்டொப்
திருத்துதல் மற்றும் பராமரித்தல் பயிற்சி
Advanced Diploma in Computer Hardware & Networking — Duration 3 Months
Certificate in Laptop Repairs & Services — 100% Practical Training
An ISO 9001: 2008 Certified Courses
60% Discount Offer
CSC-ASIAN COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
சாவகச்சேரி கட்டுக்காணி வீதி, 021 2270267
கிளிநொச்சி A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925
வவுனியா 192,குருமன்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050



### கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

**எமது சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. பதவி - எழுதுநர் (01)**

குறியீட்டு இல - 302/14
சம்பள அளவுத்திட்டம் - 9700-80x10-85x10-11350
வயதெல்லை - 18 - 45 வரை
பால் - ஆண் / பெண்

தகைமைகள்

அ. கூட்டுறவுச் சங்கம் ஊழியர் 15ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்பு பட்டதுறை பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 16ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்டதுறை பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. க.பொ.த.(சா.த) சான்றிதழ் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்-வர்த்தகஎண்கணிதம்/எண்கணிதம் மற்றும் சிங்கம் / தமிழ் மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**02. பதவி - எழுதுநர் (01)**

குறியீட்டு இல - 302/15
சம்பள அளவுத்திட்டம் - 9450-75x10-80x10-11000 (66/2006)இன்படி

தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. க.பொ.த.(சா.த) கணிதம் அல்லது எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்கள் சித்தியுடன் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி - 10.11.2013**

குறிப்பு:

கூட்டுறவுப் பணியாளர் வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் "எழுதுநர் (502/14)" அல்லது "எழுதுநர் (502/15)" பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, கொடிகாமம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

16.10.2013, 29.08.2013 நெறியாளர் ஆழுவின் ஆணைப்படி.

க.துரைசிங்கம்,
தலைவர்
28.10.2015

ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கண்டி வீதி, கொடிகாமம்.

(சி/2771) (10,3)





2011ஆம் ஆண்டு மலேசியாவில் தங்கப் பதக்கம் வென்ற
Gold Medal Winning Brand in Malaysia
Year 2011
fujipure
Breathe in life

- மலேசிய தயாரிப்பு
- இலவச இணைப்பு
- இலவச 3 பராமரிப்புகள் (3 Free Services)
- மோட்டாருக்கு 5 வருட உத்தரவாதம்(Compressor)
- குறைந்த அளவு மின்சார பாவனை
- அதி சிறந்த விற்பனைப் பிந்திய சேவை

எமது பொது முகாமையாளர்
2013 ஒக்ரோபர் 28 முதல் 30 வரை யாழ்ப்பாணத்தில்
தொடர்பு கொள்ளவும்
077 210 6030 / 077 210 6044

சி/13371) (7.3.6)

GLOBAL TECH AIR CONDITIONING & REFRIGERATION (Pvt) Ltd.

கிளை அலுவலகம்
320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 221 9870
சுதர்ஷன் - 077 2106044

தலைமை அலுவலகம்
No.32, Battaramulla,
Ethulkotte.
Tel:011 535 7773/4
Fax:011 205 3060

மின்னஞ்சல்: adm.gtssl@sltnet.lk இணையதளம்: www.globaltech-group.com



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
### University of Jaffna - Sri Lanka
### இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறி
### Diploma in Journalism - 2014/2015

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான 2014/2015 ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியும் (Yes) பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

அச்சு ஊடகம் (Print Media)
இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
இணைய ஊடகம் (New media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பயிற்சிகள்**

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு,
- றேடியோ மற்றும் ரீ.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
- ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப்படத் தயாரிப்பு
- சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான மேலதிக பயிற்சிகள்

**கற்கை நெறிக்காலம் 2 ஆண்டுகள் (முழுநேரம்)**
**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 30.11.2015**

கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப் பணம் | ரூபா | 750.00 (மீளளிக்கத்தக்கது) |
| நூலக பயன்பாடு | ரூபா | 1,000.00 |
| மொத்தம் | ரூபா | 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல 84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ 100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 9873

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/13200) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கைபேசி'ச் சாரதிகளால் கலக்கத்தில் பயணிகள்

## தனியார் பஸ்களில் இதுவே தொடர்கதை

யாழ்ப்பாணம். ஒக்.28
தனியார் பஸ்களில் சாரதிகள் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டுவாகனம்செலுத்துவதால் பயணிகள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வீதிப் போக்குவரத்து பொலிஸாரும் இதனை கவனிப்பாரற்று நிற்பதால் சாரதிகளது தொலைபேசி உரையாடல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பயணிகளுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பாதுகாப்பாக சேவையை வழங்க வேண்டிய நிலையில் சங்கத்தின் விதிமுறைகள் மற்றும் போக்குவரத்து விதிமுறைகளையும் மீறி கைத்தொலைபேசியில் உரையாடியபடி பஸ்ஸைச் செலுத்துவதால் பயணிகள் பெரும் கலக்கத்துடனேயே பய ணிக்கின்றனர்.

சேவை நேரத்தின்போது வாகனத்தைச் செலுத்திக் கொண்டு கைத்தொலைபேசி உரையாடலை மேற்கொள்ள தனியார் பஸ் சாரதிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் சாரதிகள் சிலர் அதனையும் மீறி வாகனத்தைச் செலுத்திக் கொண்டே கைத்தொலைபேசிகளில் உரையாடுகின்றனர்.

இதனால் பயணிகள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை போக்குவரத்து வீதிக் கடமைகளில் உள்ள பொலிஸாரும் அவதானிப்பதாக இல்லை.

எனவே இது சாரதிகளுக்கு வாய்ப்பாக அமைவதால் தொடர்ந்து அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

கைத்தொலைபேசிப் பாவனையால் குடாநாட்டில் ஏற்பட்ட விபத்துக்களை சாரதிகள் நினைத்துப் பார்ப்பதில்லை. அவசர அழைப்புக்கள் என்றால் வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு உரையாடலாமே என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

இது போன்ற சம்பவங்களை சங்கம் இனங்கண்டால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் .

அதனைக் கவனிக்க வேண்டியதுபொலிஸாருடையகடமை. குறித்த சாரதிகளுக்கு எதிராக அவர்களே சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை - தனியார் பஸ் சாரதிகள் மட்டுமல்ல மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் வாகனங்கள் செலுத்துவோரும் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். எனவே இது தொடர்பில் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். (வ-14)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஒக்.28
கைதடி முத்துகுமாரசாமி மகாவித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும். (வ-9)

## கொடிகாமத்தில் மேலுமொரு மக்கள் வங்கிக்கிளை

தென்மராட்சி, ஒக்.28
கொடிகாமத்தில் ரயில் நிலையத்துக்கு அருகில் மக்கள் வங்கியின் கிளை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொடிகாமத்தில் நீண்ட காலமாக சாவகச்சேரி கிளையின் சேவை நிலையமாக மக்கள் வங்கி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# படையதிகாரியின் தோள்மூட்டை பதம் பார்த்தது மோட்டார் ஷெல்

## மாதுறுஓயா சிறப்பு முகாமில் சம்பவம்

கொழும்பு, ஒக்.28
மாதுறு ஓயா படையினரின் சிறப்பு இராணுவ முகாமில் இடம்பெற்ற எதிர்பாராத விபத்தில் இராணுவ அதிகாரி ஒருவரின் தோள் மூட்டை பதம் பார்த்தது மோட்டார் ஷெல்.

இந்த முகாமில் வழக்கம் போன்று இடம்பெற்ற பயிற்சியின்போது 60 மி.மீ. மோட்டார் ஷெல் ஒன்று இலக்குத் தவறி இந்த இராணுவ அதிகாரியின் இடது தோள்மூட்டைத் தாக்கியது. ஆனால் இந்தச் ஷெல் வெடிக்காததால் நிகழவிருந்த பெரிய அனர்த்தமொன்று தவிர்க்கப்பட்டது. வெடிக்காத ஷெல்லின் ஒரு பகுதி இந்த இராணுவ அதிகாரியின் தோள் மூட்டில் உட்புகுந்திருந்தது.

இந்த இராணுவ அதிகாரி உடனடியாக பொலநறுவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு விசேட அறுவை சிகிச்சை நிபுணர் காமினி அபயசிங்க தலைமையிலான குழுவினரால் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன் அவரின் உடலினுள் புகுந்திருந்த ஷெல்லின் பகுதி அகற்றப்பட்டது. மேலும் காயத்துக்கான சிகிச்சையும் வழங்கப்பட்டது.என்.டி.சி.ஜ.உதய குமார என்பவரே காயமடைந்த இராணுவ அதிகாரி ஆவார். (க)

# யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற பொருள்களின் விற்பனை சந்தை



மறைபரப்பு ஞாயிறு தினமான கடந்த 20 ஆம் திகதி குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை வண. பிதா ந.நேசராஜா அடிகளாரின் ஏற்பாட்டில் பொருள்களின் விற்பனைச் சந்தை யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. உடுபுடைவைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் ஆகியவை இங்கு சகாய விலையில் விற்பனை செய்யப்பட்டன.

## முதுமாணி பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஒக்.28
யாழ்.பல்கலைக்கழக முதுமாணி கல்வி நெறியின் 9 ஆவது பிரிவு மாணவர்களுக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

குறித்த பெறுபேறுகளை யாழ். பல் கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீடத்தில் பார்வையிடலாம் என பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதேவேளை- 10 ஆவது பிரிவில் முதுமாணி கல்வி நெறியை கற்பதற்கு 100 மாணவர்கள் ஆள்சேர்ப்பு செய்யப் பட்டு விரிவுரைகள் இடம் பெற்று வருகின்றன.

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முழுநேர கொடுப்பனவுடன் கற்றல் விடுமுறைக்கு வடமாகாண அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (வ-50)

# எரிபொருள் நிலையத்தில் வாடிக்கையாளர் பெரும் அவதி



யாழ்ப்பாணம்,ஒக்.28
யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வருவோர் தினமும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருளை நிரப்ப வரும் வாகனங்கள் தரிப்பிடத்துக்கான வசதிகள் இல்லாத நிலையிலும் மேடு, பள்ளம் நிறைந்த இடத்திலே நின்று எரிபொருளை நிரப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அங்குள்ள தண்ணீர்க் குழாய் ஒன்றில் இருந்து வரும் தண்ணீர் பள்ளமான இடத்தில் தேங்குவதால் மழை இல்லாத காலத்திலும் அந்தச் சுற்றம் சேறும் சகதியுமாக இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- மாதத்தில் பல தினங்கள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் இந்தப் பிரதேசத்தை அண்மித்துள்ள படகு உரிமையாளர்களும் வாகனச் சாரதிகளும் வேறு இடங்கள் சென்றே டீசலைப் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

குறித்த எரிபொருள் நிலையத்திலுள்ள கட்டடம் போதிய வசதிகள் இன்றியதாகவே காணப்படுகின்றது. இதனால் எரிபொருளுக்காக அங்கு செல்வோர் மழை, வெயிலில் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் எரிபொருள் உரிமையாளர் கவனமெடுத்து அதனை நிவர்த்தி செய்ய உடனடியாக முன்வர வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-288)


# காணவில்லை



சரசாலை, கனகம்புளிசந்தியடியைச் சேர்ந்த சிவராசா சிவானுயா ஆகிய 24 வயதாகும் இந்தப் பெண்ணை (22.10. 2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியில் இருந்து இதுவரை காணவில்லை. இப்பெண்ணைக் கண்டவர்கள் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 019 9590
077 226 4030

(29684) (10)


## யாழ்.மாவட்டத்தில் மாற்றுவலுவுடையோரே சிறுகைத்தொழிலில் அதிகளவில் பங்கேற்பு

*யாழ்.அரச அதிபர் புகழாரம்*

யாழ்ப்பாணம், ஒக்.28
யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை பலதரப்பட்ட சிறுகைத்தொழில் முயற்சிகளில் அதிகமாக பங்கு வகிப்போர் மாற்றுவலுவுடையவர்களே. மிகவும் தரமான பொருள்களை அவர்கள் உற்பத்தி செய்கின்றனர் - என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாற்றுவலுவுடைய சகோதரர்கள் தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றியீட்டி வருகின்றனர். இந்தச் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டிய மனிதர்கள் அவர்களே. அவர்களை மதிக்கும் அந்த மனப்பாங்கு எம்மிடம் வளர வேண்டும் - என்றார். (வ-7)


## உருளைக்கிழங்கு விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

உருளைக்கிழங்கு மானிய முறையில் வழங்கப்பட இருப்பதால் மேற்படி சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளாத விவசாயிகளின் நன்மைகருதி 31.10.2013 வியாழக்கிழமை வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

உடுவில்,கோப்பாய், தெல்லிப்பழை பிரதேசங்களில் உள்ள உருளைக்கிழங்கு விதை உற்பத்தி கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவராக இணைவதன் மூலம் மேற்படி சலுகைகளை பெற்றுக் கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களை தத்தமது பிரதேச விவசாய சம்மேளனமூடாகப் பெறலாம்.

தொடர்பு:
077 445 5875
(C/13443) (10,6)

K.N. ஜெயகிருஸ்னன்
செயலாளர்,
யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு விதை உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02*02*1952

மறைவு
21*10*2011

திருமதி புவனேஸ்வரி வில்வரத்தினம்

திதி : 28.10.2013

கண்ணியமாக எமை வளர்த்து
கரை சேர்க்க உழைத்தாய் அம்மா
கண்ணிமைக்கும் பொழுதில் - எமை
கலங்கவிட்டு சென்றாயோ அம்மா
மண்ணில் நாம் வாழும் மட்டும் உங்கள்
மலர்ந்த முகம் மறையாது அம்மா
ஆண்டு இரண்டு சென்ற போதும் - உயர்
ஆண்டவன் பாதங்களை சரண் அடைந்தோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

10, கிருஸ்ணபிள்ளை லேன்,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி இ. கிருஸ்ணகுமார்
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## கதிர்காமர் குமாரசாமி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், அம்பலப்பெருமாள்குளம், அக்கராயனை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமர் குமாரசாமி 26.10.2013 சனிக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் கதிர்காமர்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், கோசலாதேவி, தில்லைநாதன், குணரத்தினம், மோகனராசா, சந்திரபாலன், கோகுலலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாயகம், வசந்தராணி, கனகாம்பிகை, கோசிலாதேவி, இந்திராணி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி சுதர்சன் கிரிஜா, தினேஸ், சயந்தன், கறோஜன், கணோஜன், கௌசிகா, மனோஜா, தனுசியா, ரதீஸ்வரன், கீர்த்திகா, கிருஷ்ணகோபி, கோபிதாஸ், நிவேதினி, டனோஜினி, யோகதாஸ், மிதுன கோபி, கிறோஜனா, சவுர்தா, கீர்த்திகா, சஜீபன், தக்ஷயா, பதுஷா ஆகியோரின் அருமைப் பேரனும், நிவேத்தாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது வதிவிடமான இல. 45, அம்பலப் பெருமாள்குளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டைகட்டிய குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(37568) (10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார பேரவையின் கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பேரவையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் ஆலோசனைக் குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந)

## மரண அறிவித்தல்

### செல்வி சதுஜா சுந்தரலிங்கம்



சுவிற்சர்லாந்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதுஜா சுந்தரலிங்கம் (19.10.2013) சனிக்கிழமை அதிகாலை அகால மரணமடைந்தார்.

அன்னார் சுந்தரலிங்கம்- மங்கையர்க்கரசி தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி - நேசரத்தினம் மற்றும் கந்தையா-வாமதேவி (மட்டுவில்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துரைலிங்கம், சந்திரகாந்தா, சிவலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், பிரதீபன் (சுவிஸ்), அனோஜன் (சுவிஸ்), நிவேதன்(சுவிஸ்), சுகந்தினி, ஜீவிதா, ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சுகன்யா (சுவிஸ்), பிரகலாதன் ஆகியோரின் மைத்துனியும், சாழினியின் அன்ரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட்கிழமை சுவிற்சர்லாந்தில் நடைபெறும். இன்று எமது இல்லத்தில் (மாதனை, பருத்தித்துறை) அன்னாரின் துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.துரைலிங்கம்
021 226 0122, 077 724 6693

மாதனை,
பருத்தித்துறை.
(33329)(6.3.4)

## வடமாகாணத்தில் சுன்னாகம் நூலகம் முதலிடம்


வலி.வடக்கு. ஒக்.28

இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உடுவில் ஆகிய பொது நூல கங்கள் இரண்டு சிறப்பு விருதுகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் 2013 ஆம் ஆண்டின் வடமாகாணத்துக்கான சிறந்த நூலகங்களுக்கான தெரிவில் சுன்னாகம் பொது நூலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருதுகள் நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை அறக் கட்டளை நிறுவனத்தில் கொழும்பு 7 இல் உள்ள கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க முன்னிலையில் வழங்கப்படவுள்ளது என்றும் வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித் துள்ளார். (ந-86)

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி வரதன்



நேற்றைய (27.10.2013) உதயனில் 13ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி அறிவித்தலில் பேரனின் பெயர் சுதர்சினி எனவும், மைத்துனரின் பெயர் பஞ்சலிங்கம் எனவும் தவறாகப் பிரசுரமாகியுள்ளன. பேரனின் பெயர் [illegible] எனவும், மைத்துனரின் பெயர் [illegible] எனவும் திருத்தி வாசிக்கவும். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம். (சி/13440)(7.6.3)

## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா (சின்னத்தங்கச்சி) தம்பிராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிராசா (கந்தையா) 25.10.2013 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், தம்பிராசாவின் (கந்தையா) அன்பு மனைவியும், பிருந்தாபரன் (டென்மார்க்), தயாபரன் (ஜேர்மனி), மனோகரி(பிரான்ஸ்), உமாஹரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருட்சோதி (டென்மார்க்), ரதிவதனி (ஜேர்மனி), லோகேந்திரன்(பிரான்ஸ்), சொர்ணலிங்கம், பாலகிருஷ்ணர் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனந்தினி, வர்ணன், சர்மனி (J/NCOE, 3ஆம் வருடம்), திருமதி கெங்காதரன் கஜவதனி (லண்டன்), தர்சன்(பிரான்ஸ்), நிரோஜன்(பிரான்ஸ்), உமாசங்கர் (டென்மார்க்), தாரணி(ஜேர்மனி), அபிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனோஜன்(லண்டன்), அபிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (சி/13416)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



### செல்வி சதுஜா சுந்தரலிங்கம்


ஓடி வாம்மா வளர்பிறையே! சதுவம்மா மாலைப்
பொழுது மின்னலோடு வந்ததம்மா இடியொன்று
நம்பமுடியவில்லை சதுவம்மாவின் பிரிவை
ஓடி வாம்மா வளர்பிறையே! வாடுகிறோம் உன் பிரிவால்
எங்கள் உயிர்ப் பிறையே சதுவம்மா, தேடுகிறோம்
உன் நிழலை, பெற்ற உள்ளம் பதைபதைக்குதம்மா
பாசத்தால் துடிக்குதம்மா ஒன்றே ஒன்று கண்ணே
கண்ணு என்ற அன்னை உள்ளம் உறையுதம்மா
படைத்தவனே கண்திறந்து பாரையா நீ
பறித்தெடுத்த வளர்பிறையின் முழு (தாய்) நிலவு
தேய்வதனை வளர்பிறையே ஆறுதல் சொல்லம்மா
அன்னைக்கு தாய்மொழியில்
பதினோராவது வயதில் அகாலமரணமடைந்த
சதுஜாவின் துயரத்தில் வேதனையுறும்
அப்பா – அம்மா மற்றும்
உறவுகள் அனைவருக்கும்
ஆறுதல் தாருமம்மா

சதுவம்மாவின் பிரிவால் வேதனையில் வாடும் அன்பு உறவுகள்
**சங்கானை, பண்டத்தரிப்பு**

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவசம்பு



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசம்பு நேற்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வராணியின் பாசமிகு கணவரும், சிவனேசதாசன் (அமெரிக்கா), லலிதாவதி, லீலாவதி, சிவகுமார் (தபால் ஊழியர்- காங்கேசன்துறை), விக்னேஸ்வரி (முதுநிலை விரிவுரையாளர் யாழ்.பல் கலைக்கழகம்), சிறீதரன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்- கோப்பாய் பிரதேசசெயலகம்), சுபாஸ்கரன் (Sierra Cables Distributor) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வர்களான கண்ணன், பிறேம்தாஸ் மற்றும் வசந்தா (அமெரிக்கா), தனுஷா, பவனேசன்(TA-R.D.A), சிவச்செல்வி, கிருஷாந்தி (ஆசிரியர்) ஆகி யோரின் மாமனாரும், தினேஷ் (லண்டன்), திஷாஜினி, திறோசன், துலக்ஷா, பாணுஷா, கிருத்திகாஜினி, சாம்பவி, பிரியங்கரி, விருஷன், சாணுஜா, சாருஜா, விவேக்கா, சஞ்ஜிகா, சோபிதன், சகானா, புருஷோத், விஷால், ஹன்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஷ்விகாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, நண்பகல் 12.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (39528)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்டத்தில் இயங்கும்
# அரச நிறுவனங்களை மறுசீரமைக்கத் திட்டம்

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான செயற்றிட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டம் சிரேஷ்ட அமைச் சர் டியூ. குணசேகரவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அண்மையில் விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆலோசனைகள் சீனாவிலி ருந்து வருகை தந்த நிபுணர் குழுவொன்றினால் வழங்கப்பட்டன.
பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு கடந்த வருடம் 248 அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்திருந்தது.
அந்த ஆய்வில் 55 அரச நிறுவனங்கள் மாத்திரமே லாபத்தில் இயங்கியமை தெரியவந்துள்ளது.
எஞ்சிய நிறுவனங்களின் நிலைமை திருப்திகரமாக இல்லை என்று கோப் குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 * 05 * 1952
உதிர்வு 08 * 11 * 2012



திருமதி
**திலகவதி சிவலிங்கம்**

இன்று (28.10.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் Road,
கைலாய பிள்ளை வீதி, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## 61 ஆவது பிறந்த நாளும் 16 ஆம் மாத நினைவும்

மண்ணில் மலராய் 28.10.1952
விண் மலராய் 14.06.2012



திருமதி
**சந்தனநங்கை(சந்திரா) கிருஷ்ணன்**

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தில் மிளிர்ந்தவளே!
கூரறிவு கொண்டவராய் என்றும் வளர்ந்தவளே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய்த் திகழ்ந்தவளே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோம் உம்மை

5/4, றக்கா் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.12.1941
விண்ணில் 31.10.2010

அமரர்
**பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்**
திதி: நவமி

மூன்று ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்
நீங்காமல் நிலைத்துள்ளன
தெய்வமாய் நின்று எம்மை வழி நடத்திய
எமது குடும்பத் தலைவனே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

16/11, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 . 08 . 1945
உதிர்வு 22 . 10 . 2008

அமரர் **முத்தையா பாலசுப்பிரமணியம்**
திதி:நவமி(28.10.2013)

காலம்தான் பிரிவுத்துயரை மாற்றினாலும்
-உம் நினைவு
காலமெல்லாம் எம் நெஞ்சில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற அருளுமாறு
சிவபூத நாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
குடும்பத்தினர்.


# ஹம்பாந்தோட்டைக்கு உல்லாச பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.28
ஹம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு கடந்த சில நாள்களாக உல்லாசப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.
கடந்த வாரத்தின் தொடர் விடுமுறை ஹஜ் பெருநாள் விடுமுறை ஆகியவற்றை முன்னிட்டு ஹம்பாந்தோட்டைக்கு வந்த சுற்றுலாப் பயணிகள், அங்குள்ள மத்தள ராஜபக்ஷ விமான நிலையம், துறைமுகம், ரெலி சினிமா கிராமம், மைதானம், உப்பளம் போன்றவற்றை பார்வையிட்டு சென்றனர். (ச-10)

# சிறுவர் துஷ்பிரயோகம் வட,கிழக்கில் அதிகரிப்பு
## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு



எருவில், ஒக்.28
வடக்கு,கிழக்கில் சிறுவர் துஷ்பிர யோக சம்ப வங்கள் அதிகரித்துள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.
கல்முனை பிரிட்டிஷ் கல்லூரி திறப்பு விழாவில் அவர் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கல்வியை கற்று நல்லொழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பதன் மூலமே எதிர்காலத்தில் மற்றவர்கள் எம்மை மதிக்கும் அளவுக்கு சமூகத்தில் நல்லவர்களாக வாழ முடியும்.
வெறுமனே ஒழுக்கமில்லாத கல்வியைக் கற்பதால் எவருக்கும் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. பாடசாலையில் கற்பதனாலோ, பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதனாலோ சமூகத்தில் மதிக்கத்தக்கவர்களாக வாழ முடியாது.
மாறாக நல்ல ஒழுக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமே சிறந்த பயனைப்பெற முடியும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளாந்தம் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.
இலங்கையில் வேலையற்ற பட்டதா ரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆனால் அவர்களுக்கான தொழில் களை பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமானவிடயமாகக் காணப்படுகின்றது.
கலைப்பீடங்களில் அதிகளவான மாண வர்கள் பட்டங்களை முடிப்பதால் நல்ல தொழில்வாய்ப்புக்களை பெறமுடி யாத நிலையில் உள்ளனர்.
தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றி அமைத்துக் கொண்டு தொழில் வாய்ப்புக்களை பெறும் கல்வியை கற்பதன் மூலம் தான் நாமும் எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுத்து வாழக் கூடியவர்களாக மாற முடியும்.-என்றார் (ச-31)

# நெஞ்சக் கதவை கொஞ்சம்........
செல்வ வேலாயுதம்

## வாள் ஏந்தி வலம் வரும் 'சூரர்கள்'

விஜயதசமியன்று பெரும்பாலான ஆலயங்களின் முன்றிலில் கன்னி வாழை ஒன்று நடப்பட்டு அலங்கரிக்கப் பட்டிருக்கும். பூசையில் வைக்கப்பட்ட வாள் ஒன்றைக் கொண்டுவரும் அர்ச்சகர் வாழை உருவில் உள்ள மகிஷாசுரனை சங்காரம் செய்வதாகப் பாவனை செய்து அந்த வாளினால் வாழையை வெட்டிச் சாய்ப்பார். வாழை வெட்டுக்காக பயன்படுத்திய வாள் இனி அடுத்த விஜயதசமி வரை ஆலயக் கருவறையில் அமைதியாக உறங்கும். இது வாழையை வெட்டும் வாளின் கதை.
ஆனால் ஆளை வெட்டும் வாளின் கதையோ வேறு. வாழையை வெட்டும் வாள் அக்கிரமத்தை அழிக்கிறது. ஆளை வெட்டும் வாள் அக்கிரமத்தைச் செய்கிறது. செய்யத்தூண்டுகிறது. காணித்தகராறு, கசிப்புத்தகராறு, காதலில் தகராறு, களவில் தகராறு ஏதும் வந்தால் கையில் வாள் எடுத்து 'சங்காரம்' நடக்கும். இவ்வாறான சம்பவங்கள் தற்போது தாராளம்.
அண்மையில் காவல் அதிகாரிக்கும் கையில் வாள் வெட்டு. அவர்களின் இருப்புக்கு இது பெரும் சவாலாகும். இந்தச் சம்பவம் காவல்துறையை தொடர் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கி விட்டுள்ளது. இது விமர்சனமல்ல, இதற்குமேல் இந்த விடயத்தில் மூக்கை நுழைப்பது விவேகமுமல்ல.
அதுசரி, ஆளை வெட்டும் வாள்கள் எங்கு தயாரிக்கப்படுகின்றன? உள்ளூரிலா? அல்லது வெளியூரிலா? கைது செய்யப்படும் வாள் வெட்டிகள் மூலமாக இவற்றின் நதி மூலத்தைக் கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை உரிய பகுதியினர் எடுப்பார்களாயின் இவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க முடியலாம். போகிற போக்கில் கராத்தே, குமித்தே தற்பாதுகாப்புப் பயிற்சி போன்று வாள்வெட்டுத் தற்காப்புப் பயிற்சியும் ஆரம்பிக்கப்படக்கூடும். "புகை நுழையாத இடத்திலும் பொலிஸ் நுழையும்" என்ற பழைய திரைப்பட வசனம் தான் இங்கு ஞாபகத்துக்கு வருகிறது.

# வடமேல் மாகாண சபையின் முதலாவது கூட்டத் தொடர்

குருநாகல், ஒக்.28
வடமேல் மாகாண சபையின் முதலாவது கூட்டத் தொடர் நாளை செவ்வாய்க்கிழமை குருணாகலில் அமைந்துள்ள மாகாண சபை கட்டடத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று சபைச் செயலர் பத்மினி காரியவசம் அறிவித்துள்ளார்.
அன்றைய தினம் வடமேல் மாகாண ஆளுநர் சட்டத்தரணி திஸ்ஸ ஆர்.பலல்ல மாகாண சபைக்கு வருகை தந்து கொள்கை விளக்க உரை நிகழ்த்த உள்ளார். மாகாண சபைக் கட்டடத் தொகுதியினுள், கூட்டம் முடியும் வரை அழைக்கப்பட்ட வர்கள் மாத்திரமே உட்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-200)


## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் தலைமைப்பீட
சமூக சேவை உத்தியோகத்தராகக்
கடமையாற்றும் நா.இராஜமனோகரன்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி **மகாலக்சுமி நாகராஜா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின்
ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
[illegible]
[illegible]

## மரண அறிவித்தல்

திருமதி
**அன்னம்மா (பூமணி) சின்னத்துரை**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், விநாயகர் வீதி, கண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா (பூமணி) சின்னத்துரை நேற்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையாபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சுவாசி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், வசந்தமதி, சிவகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பாணுமதி ஆகி யோரின் அன்பு மாமியும், சிவக்சன், சிபுசன், சிதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.20, விநாயகர் வீதி,
கண்டுக்குளி.
(39529)
(10.6.3)
தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சார்க் நாடுகளுக்கிடையான பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த தனியான இரு பிரிவுகள் கொழும்பு குற்றத் தடுப்பு தலைமையகத்தில் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலர் நந்தா மல்லவராச்சி, பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கோன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-10)

# நாட்டின் வறுமை 2016 இல் 6 வீதம்

## சமுர்த்தி அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.28

2016 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வறுமை நிலையை 6 வீதமாகக் குறைப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது என்று இலங்கை சமுர்த்தி அதிகார சபை தெரி வித்துள்ளது.

1994 ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப்பட்டுள்ள சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக 28.9 வீத மாகக் காணப்பட்ட நாட்டின் வறுமை நிலை, 2013 ஆம் ஆண்டாகும் போது 8 வீதமாகக் குறைக்குமள வுக்கு சமுர்த்தித் திட்டம் மக்களுக்குப் பயனளித்துள் ளது.

2013 ஆம் ஆண்டாகும் போது 8 வீத மாகக் குறைக் குமள வுக்கு சமுர்த்தித் திட்டம் மக்க ளுக்குப் பயன ளித்துள்ளது.

இந்தத் தகவலை சமுர்த்தி அதிகார சபையின் வங்கிகள் நிதிப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.எல். சந்திரதிலக்க தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கிகளின் நிதிப் பிரிவு ஊடாக 5 மில்லியன் சமுர்த்திப் பயனாளிகளுக்கு இதுவரை கடன்களாக 84 பில்லியன் ரூபா வழங்கப்பட் டுள்ளது என்று அவர் கூறி னார். (ச-22)

## பாடசாலைகளை நெறிப்படுத்த செயலகம் அமைக்க பரிந்துரை

கொழும்பு,ஒக்.28



சர்வதேசப் பாடசாலைகள் மற் றும் தனியார்துறை பாட சாலைகளை நெறிப்படுத்த செய லகம் ஒன்றை நிறுவ வேண்டு மென அது சம்பந்தமாக ஆராய் வதற்கு நியமிக்கப்பட்ட அதிகா ரிகள் குழு பரிந்துரை வழங்கி யுள்ளது.

கல்வி அமைச்சில் தற்போது நடைமுறையில் உள்ள தனி யார் துறை பாடசாலைகள் பிரி வின் செயற்பாடுகளை மீளக் கட்டமைத்து, அந்தப் பிரிவை முழுமையான அதிகாரங்க ளைக் கொண்டுள்ள செயலக மாக மாற்றுவதற்கு இந்தக் குழு பரிந்துரைத் துள்ளது.

சர்வதேசப் பாடசாலைகள் மற் றும் தனியார் துறைப் பாட சாலைகளை ஒழுங்காக கட்ட மைக்கும் அதிகாரிகள் குழு வின் பரிந்துரைகள் உள்ளடங் கிய அறிக்கை கல்வி அமைச் சர் பந்துல குணவர்த் தனவால் அமைச்சர வைக்கு சமர்ப்பிக் கப்பட் டுள்ளது. (ச-22)

## பாடசாலைகளுக்கு ஆசிய வங்கி கடனுதவி

கொழும்பு,ஒக்.28

ஜி.சீ.ஈ உயர்தரத்துக்கு புதி தாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பப் பாடத்தைப் கற்பிக்கும் 250 பாடசாலை களை அபிவிருத்தி செய்வ தற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 1000 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய் யப்படவுள்ளன.

இதன்படி பாடசாலை ஒன்றுக்கு 4 கோடி ரூபா செல விடப்பட வுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே 250 பாட சாலைகளிலும் தொழில் நுட்பப்பாடம் கற்பிக்கப்படுகிறது. அது தொடர்பாகத் தேவைப் படும் இயந்திரசாதனங் கள், உபகரணங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள இந்த நிதி பயன் படுத்தப்படும் என்று கல்வி அமைச்சு குறிப் பிட்டுள்ளது. (ச-22)

# அநீதிகளைக் கண்டறிய நடமாடும் அலுவலகங்கள்

## நிறுவுகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு,ஒக்.28

அரச நிறுவனங்கள் மற்றும் பொலிஸ் துறை மூலமாக பொதுமக்களுக்கு இழைக்கப் படும் அநீதிகள் குறித்த முறைப் பாடுகளை பெற்றுக் கொள்ள நடமாடும் மனித உரிமைகள் அலுவலகங்கள் நிறுவப்பட வுள்ளன.

இந்த நடமாடும் அலுவலகங் களை ஏழு பிரதேசங்களில் நிறுவுவதற்கு மனித உரி மைகள் ஆணைக்குழு தீர் மானித்துள்ளது.

அதன் முதலாவது அலுவல கம் புத்தளம் பிரதேச செயல கச் சுற்றாடலில் நிறுவப்பட வுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணை யாளர் பிரதீபா மஹா நாம ஹேவா தெரிவித்தார்.

ஏனைய நடமாடும் அலு வலகங்கள் மொனராகலை, இரத்தினபுரி, குருநாகல், நுவ



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரு கிளை அலுவல கங்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன.

ரெலியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிர தேசங்களில் விரைவில் நிறு வப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

ஏற்கெனவே மனித உரி மைகள் ஆணைக்குழுவின் இரு கிளை அலுவலகங்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட் டக்களப்பு பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடமாடும் மனித உரி மைகள் அலுவலகங்கள் நிறுவப்பட்டதன் பின்னர் அந்த அலுவலகங்களுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் பற்றி விரைவான விசார ணைகள் மேற்கொள்ளப்ப டும்.

அதனையடுத்து சம்பந்தப் பட்ட பிரதிவாதிகளுக்கு பரிந் துரைகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித் தார். (ச-22)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை வரதராஜேஸ்வரன்



அளவெட்டி மேற்கைப் பிறப்பிட மாகவும், நீர்வேலி தெற்கை வசிப் பிட மாகவும் கொண்ட செல்லத்துரை வரதரா ஜேஸ்வரன் நேற்று (27.10.2013) ஞாயிற் றுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல் லத்துரை மற்றும் தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன் புக் கணவரும், கம்சிகா,விஷ்ணுயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற் றும் ஈஸ்வரன், விக்னேஸ்வரி, சுந்தரேஸ்வரன் (சுவிஸ்), குகனேஸ் வரன் (லண்டன்), பாலநாகேஸ்வரன் (கனடா), லோகேஸ் வரி, சகுந்தலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சாரதா (சுவிஸ்), கௌசலா (சுவிஸ்), பவானி, சிவகுமார் (கனடா), சிவ பாலன் (கனடா), தயானந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி. C 13445.17.14 தகவல்: மனைவி.

**வீடு விற்பனை**

உரும்பிராய் சந்திக்கு அருகில் கோப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 1½ பரப்பு 4குழி விஸ்தீரணமுடைய காணி யில் 4அறைகள், 2மலசல கூடம், குளியலறை, 3ஹோல், சமையலறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0212227610, 077 4792927 (தரகர் தேவையில்லை)

**ஆடு விற்பனைக்கு**

1½ வயது நிரம்பிய ஜமுனாபாரி கிடா ஆடும் குட்டி ஈனும் நிலையில் உள்ள மறி ஆடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0777 590496

IELTS A1 B1 B2 KU Education

ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 14.08.1956

விண்ணில் 08.11.2012

அமரர் **சண்முகரட்ணம் பிறேமசுதன்**

ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளன
தெய்வமாய் நின்று எம்மை வழிநடத்திய தந்தையே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும்.

ஞானபண்டிதா வித்தியாசாலை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (39537) (10.14)

உங்கள் நினைவில்: குடும்பத்தினர்.

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

தீபாவளியை முன்னிட்டு எந்த நிறுவனத்தினாலும் வழங்க முடியாத கட்டணச்சலுகை 28.10.2013 - 02.11.2013 வரை

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு லண்டன் 740/= பிரான்ஸ் 825/= கனடா 990/=

டென்மார்க் 825/= அவுஸ்ரேலியா 825/= சுவிஸ் 875/= ஹொலண்ட் 850/= நோர்வே 950/ இத்தாலி 890/= ஜேர்மனி 750/=

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

குறிப்பு :- 5 Kg ற்கு உட்பட்ட பொதிகளுக்கும் ... உள்ளன.

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிதாகப் பிரதேச சபைகள்: அரசியல் தலையீட்டால் தாமதம்

***வடக்கு உள்ளூராட்சி அமைச்சுசெயலர் கருத்து***

யாழ்ப்பாணம், ஒக்.28
வடக்கில் நான்கு பிரதேச சபைகளைப் புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு இரண்டு வருடங்களுக்கு முன்னரே உள்ளூராட்சி அமைச்சுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண முதல்வர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னாரில் மடு, யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி, கிளிநொச்சியில் கண்டாவளை, முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் ஆகிய நான்கு இடங்களை மையமாகக் கொண்டு நான்கு பிரதேச சபைகளை புதிதாக உருவாக்குமாறு கோரிய விண்ணப்பம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டவில்லை.

அந்த நான்கு பிரதேச சபைகளை யும் உருவாக்குவதற்கு அரசியல் வாதிகள் விரும்பவில்லை. தமது செல்வாக்கு குறைந்துவிடும் என்பதற்காகவே அவர்கள் இதை விரும்பவில்லை. இதற்கு வடமாகாண முதலமைச்சரே நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கூட்டமைப்பைக்

சபை உறுப்பினர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

தீமையான ஒரு உடன்பாட்டை அல்லது சட்டத்தை நல்லவர்கள் சேர்ந்தால் அதை அவர்கள் வெற்றிகரமாக இயங்க வழி சமைப்பர். அதேபோன்று நல்லதொரு உடன்பாட்டை அல்லது சட்டத்தை தீயவர்கள் சேர்ந்தால் அதனைத் தோல்வியடையச் செய்து விடுவார்கள். எனவே எந்த ஒரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள் மனிதாபிமான சிந்தை கொண்டவர்களாக இருந்தாலேயே அந்தச் சட்டம் நன்மை பயக்கும்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி இராணுவப் பின்னணியில் இருந்து வந்தவர். அவரால் பொது மக்களின் பிரச்சினைகளை, எண்ணங் கள், சிந்தனைகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. அதனால் தான் அவரை நீக்க வேண்டும் என்றும் இராணுவம் சாரா குடிமகன் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்றும் தொடர்ச்சியாக ஆணித்தரமாகக் கூறி வருகின்றேன்.

ஆனால் எனது இந்தக் கருத்துக்கு பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ "வடக்கு முதலமைச்சர் தான் ஆளுநரை நீக்குமாறு கூறுகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறு கோரவில்லை" என்று ஊடகங்கள் மூலம் பதில் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக சந்திரசிறியை ஆளுநராக நியமித்தார்கள்? என நான் அவரைக் கேட்கிறேன்.

மக்களுடைய ஆணையைப் பெற்ற ஒருவரின் கோரிக்கைக்கு கோத்தபாயவின் பதில் இதுவாகவே உள்ளது.

சட்டவாக்கங்களின் ஊடாக அதிகாரப் பகிர்வை உரியவாறு ஏற்படுத்தி விடமுடியாது. தேவையான பொருளுதவியை வழங்குதல் சட்டப்படி விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் மற்றும் உரிய நிர்வாக அலகுகளை உண்டாக்குதல் மூலமாகவே அதிகாரப் பகிர்வை நடைமுறையில் வெற்றி கொள்ள முடியும்.

பதிமூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில விடயங்கள் சம்பந்தமாக எமக்கு சகல உரிமைகளும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஆளுநருக்கு அளித்திருக்கும் பல சலுகைகள் எமது மாகாண சபைகளைத் திறமையாக வழி நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன. ஜனாதிபதியின் தற்துணிவின் பேரில் ஆளுநர் நியமிக்கபடுவதால் ஆளுநரின் தீர்மானங்கள் அரசியல் சார்பானதாக அமைகின்றன. எனவே மாகாண சபையின் நிர்வாகத்தை ஆளுநரின் தற்துணிவு அதிகாரம் முடங்கச் செய்துவிடக் கூடும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தீர்மானங்களை ஆளுநர் உதாசீனம் செய்யக் கூடியதாக நடைமுறை அமைந்துள்ளன. மாகாண சபைகள் சட்டத்தின் மூலம் ஜனாதிபதியே பிரதான செயலாளரை ஜனாதிபதியை விமர்சிக்க அல்லது அவரின் விருப்பத்தை உதாசீனம் செய்ய எந்தப் பிரதம செயலாளருக்கும் மனம் வராது. அதனால் ஜனாதிபதியின் அரசியல் ரீதியான எதிர்பார்ப்பு எந்தத் தருணத்திலும் மறுப்புக்குட்படாத நிலையே தொடர்கிறது.

ஆளுநருக்கு மாகாண பகிரங்க சேவை அலுவலர்கள் சம்பந்தமாக அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மாகாண சபையின் அதிகாரங்களை வெகுவாகக் குறைக்கின்றன.

ஒவ்வொரு மாகாணத்தினதும் மாகாண பகிரங்க சேவையின் அலுவர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன மாகாண ஆளுநருக்கு உரித்தாக்கப்படுவதாக அது கூறுகிறது.

மாகாண ஆளுநருக்கு ஏதேனும் நியமனத்தை இடமாற்றக் கட்டளையை அல்லது பதவி நீக்கத்தை அல்லது அந்த மாகாணத்தின் பகிரங்க சேவை ஆணைக் குழுவினால் ஆக்கப்பட்ட ஓர் ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பான ஏதேனும் கட்டளையை மாற்றுவதற்கு வேறுபடுத்துவதற்கு, நீக்குவதற்கு தத்துவம் இருத்தல் வேண்டும் என்றும் 13 ஆவது திருத்தம் கூறுகிறது.

இதிலிருந்து திருத்தம் ஆளுநருக்கு கூடிய சலுகைகளையும் பொது மக்களுக்கு குறைந்த உரிமைகளையும் வழங்கியிருக்கின்றது என்பதனை உணர முடியும். ஆளுநர் ஒரு கையால் கொடுத்து மறுகையால் திரும்பப் பெறக் கூடும் என்று நடைமுறைச் சாத்தியமாகவே இருக்கிறது.

தவிர ஆளுநரால் விடுக்கப்படும் பறைசாற்றல்களை எந்த நீதிமன்றத்தாலும் கேள்விக்கிடமாக்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் தமக்கே சகல உரித்தும் உடையன என்று எந்த விடயம் சம்பந்தமாகவும் உறுதியாகக் கூறமுடியாத நிலையே காணப்படுகிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் உண்மையிலேயே மாகாண நிர்வாகத்தை நடத்துவதாக இருந்தால் பல வித திருத்தங்களைத் தன்னுள் அடக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு அதற்கு உதவ ஒரு போதும் முன்வராது.

எமக்கு வெளிநாட்டு உதவிகள் வரும் போது நன்கொடையாளர்களுடன் எம்மைப் பேச விடாது திறைசேரி அலுவலர்கள் தாமே முன்நின்று பேச்சு நடத்துவர். மாகாண சபைக்கு பணம் வந்தாலும் இதே நிலையே ஏற்படும் - என்றார். (ங-4)

### கட்டுநாயக்க

கப்பட்டது.

இந்த நெடுஞ்சாலையானது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரை மொத்தமாக 26.8 கிலோ மீற்றர் நீளமுடையது. இப்பாதையினூடாக கொழும்பிலிருந்து விமானநிலையத்திற்கு 20 நிமிடங்களில் பயணத்தை மேற் கொள்ள முடியும்.

இப்பாதையினூடாக மாபொல, நிட்டம் புவ, கண்டி, குருநாகல், கேகாலை, அவி சாவளை மற்றும் இரத்தினபுரி போன்ற பகுதிகளுக்கும் விரைவில் செல்ல முடியும். அதுமட்டுமல்லாது, பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேசத் தலைவர்களும் இப்பாதையினூடாகவே அழைத்துவரப் படவுள்ளனர். இதன் காரணமாகவே மாநாட்டுக்கு முன்னர் இப் பாதை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜயரத்ன, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, மேர்வின் சில்வா, ரோஹித அபேகுணவர்த்தன, பந்துல குணவர்த் தன, குமாரவெல்கம, நிர்மல கொத்தலாவல மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க போன்றோருடன் அரசின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

நாளொன்றுக்கு சுமார் ஒன்றரை இலட்சம் வாகனங்கள் இப்பாதையினூடாக பயணிக்க முடியும் என்றும், இதனால் கொழும்பு- கண்டி, கொழும்பு- நீர்கொழும்பு மற்றும் கொழும்பு- பேஸ்லைன் போன்ற பிரதான வீதிகளின் வாகன நெரிசல் பாரியளவில் குறைவடையும் என்றும் தெரி விக்கப்படுகிறது.

சீன நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூபா 4 ஆயிரத்து 500 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டு அறைக்குள் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மொத்தமாக 57 நவீனத்துவம் மிக்க அகன்ற திரைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில் 7 திரைகள் வீதியில் நிகழ்வதை நேரடியாகவே காண்பிக்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீதியெங்கிலும் கண்காணிப்புக் கெமராக்கள், சமிஞ்சை விளக்குகள், நெடுஞ்சாலை வரைப்படம் போன்றன காணப்படுகின்றன. குறிப்பிட்ட கட்டுப்பாட்டு அறைக்கு வந்த முதலாவது தொலைபேசி அழைப்பிற்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

அத்தோடு, இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பொலிஸ்திணைக்

பொலிஸ்துறை வடக்கிற்கு மாத்திரம் எதற்கு என்றும் கேள்வியெ முப்பியிருந்தார்.

"சட்டம், ஒழுங்கு, பொலிஸ் துறையை கையாளும் பொறுப்பு மத்திய அரசுக்கும், ஜனாதிபதிக்குமே உண்டு

சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் வடக்கு மாகாண சபை உதவலாம்.

ஆனால் வடக்குக்கு தனியான பொலிஸ்துறை தேவையில்லை. ஏனெனில் வடக்கு மாகாணம் தனியானதொரு நாடல்ல. இலங்கையின் ஒரு பகுதியே அது" எனவும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் பொலிஸ் அதிகாரம் பற்றி கருத்து வெளியிட்டமையானது பொலிஸ்திணைக்களம் தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே உள்ளது என்பதையே எடுத்துக்காட்டுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருவதற்கு இரண்டு தினங்கள் முன்பதாக, பொலிஸ் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சிலிருந்து பிரித்து சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற தனியான அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதற்குத் தனியான அமைச்சின் செயலாளரும் நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பின்னரும் பொலிஸ் அதிகாரத்தைப் பற்றி கோத்தபாய கருத்து வெளியிட்டிருப்பது சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே சட்டம் மற்றும் ஒழுங்கு திணைக்களம் உருவாக்கப் பட்டதா என்ற கேள்வியை எழுப்பி உள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (5)

### பொதுநலவாய

கொழும்பு செல்வாரா என்று எழுப்பிய கேள்விக்கு அவர், சரியான நேரத்தில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படும் என்று பதிலளித்தார். அது இருதரப்பு சந்திப்பு இல்லை என்றும் பலதரப்புக் கூட்டம் என்றும், தான் கருதுவதாக சல்மான் குர்ஷித் தெரிவித் துள்ளார்.

எனினும், பொதுநலவாய மாநாட்டில் இந்தியக் குழுவில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, துணைக் குடியரசுத் தலைவர் அன்சாரி ஆகிய மூவரில் எவரேனும் பங்கேற்பார்களா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை படைகளால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு இன்னமும் பதிலளிக்கவில்லை என்பதை காரணம் காட்டி மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்துள்ள கனடாவை, இந்தியா பின்பற்ற வாய்ப்பில்லை என்று இந்திய அரசவட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கொழும்பு வரும் இந்தியக் குழுவுக்குத் தலைமையேற்கப் போவது யார் என்ற கேள்விக்கு இன் னமும் விடை கிடைக்கவில்லை என்று 'தி இந்து' செய்தி வெளியிட்டுள்ளது. (ங-சி)

### பிளாஸ்ரிக்

றவரை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டார்.

நல்லூர் பிரதேச சபையால் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட மாகாண சபை முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளதாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாகாணங்களில் இயன்றளவு அந்தச் சட்டம் பின்பற்றப்படுவதனால் தென்பகுதியிலிருந்து அவற்றை எடுத்து வந்து வடக்கில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.

வடக்கில் அந்தச் சட்டம் உரிய முறையில் பின்பற்றப்படாமை அல்லது நடைமுறைப்படுத்தப் படாமையே இதற்கு காரணம். விரைவில் உக்கிப் போகும் தன்மையுள்ள பொலித்தீன்களுக்கு மாத்திரமே பாவனை அனுமதியுள்ளது. இந்த நடைமுறையை வடக்கில் இறுக்கமாகக் கடைப்பிடிப்பது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடவுள்ளேன். சூழல் மாசடைதலுக்கும் பொலித்தீன் காரணமாக உள்ளதனால் அனைவரும் அதனை தவிர்த்து சிமெந்து பை போன்ற இலகுவில் உக்கிப் போகும் வகையிலான பைகளைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலமாக இங்கு உள்ளூர் கைத்தொழிலும் வளர்ச்சியடையும்.

பொது இடங்களில், நிகழ்வுகளில் பிளாஸ்ரிக்காலான பூமாலைகள் அதிகம் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. இயன்றளவு அதனைத் தவிர்த்து இயற்கையான பூமாலைகளைப் பயன்படுத்துங்கள் - என்றார். (ஐ-4)

### பொதுமக்களின்

ணுவத் தினருக்கு நிரந்தர முகாம்கள், விடுதிகள், யோக்கட் தொழிற் சாலைகள், கோல்ப் விளையாட்டு மைதானம், பல்வேறு வசதிகளைக் கொண்ட தியேட்டர் அவர்களுக்குத் தேவையான விவசாய உற்பத்தி என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் உயர்பாதுகாப்பு வலயத்தைச் சுற்றி நிரந்தர முட்கம்பி வேலிகள் கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. இதனுள் உள்ளடங்கும் மண் அணையை இடித்தழிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜனவரி மாதம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது மண் அணையினுள் உள்ளடங்கும் வீடுகள் இடித்தழிக்கப்பட்டன. இதனை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

தற்காலிகமாக அப் போது கைவிடப்பட்டி ருந்த வீடுகளை அழிக் கும் நடவடிக்கை கடந்த மூன்று தினங்களாக மீளவும் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கனரக இயந்திரங்கள், புல்டோசர் மூலம் அந்தப் பகுதியிலுள்ள பற்றைகள் அகற்றப்பட்டு அதன் பின்னர் அங்குள்ள வீடுகள், இடிந்த கட்டடங்கள் என்பன இடிக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினமும், நேற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேரில் சென்று இதனை அவதானித்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மயிலிட்டிப் பிரதேசம் விரைவில் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய, பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார். அதன் பின்னரும் இராணுவத்தினர் வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-5)

### கூட்டமைப்பின

ழினத்துக்கெதிரான அடக்குமுறைச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியன குறித்து மாநாட்டில் பங்கேற்க வரும் அந்நாட்டு அரச தலைவர்களுக்கு ஆவணங்க ளைக் கையளிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த முடிவு சம்பந்தமாக அரசின் நிலைப்பாடு என்னவென்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவிடம் 'உதயன்' வினவியது. இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "கூட்டமைப்பின் முடிவு குறித்து அரசு அலட்டிக்கொள்ளாது" என்று குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"நாட்டிற்குத் தீமை விளைவிக்கக் கூடிய செயல்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது. அவர்களின் கொள்கை என்னவென்பது அரசுக்குத் தெரியும். எனவே, இதுதொடர்பில் நாம் அலட் டிக்கொள்ள மாட்டோம். எதிர்பார்த்த தைப் போன்று மாநாட்டை சாதகமாக நடத்திமுடிப்போம்" என்றும் அமைச்சர் கூறினார்.

### துயிலும்

கோருவதற்கு யாருக்கும் உரிமையில்லை.

இதனையும் மீறி யாராவது மாவீரர் துயிலும் இல்லங்களை அமைக்க முயன்றாலோ அல்லது கோரிக்கை விடுத்தாலோ அவர்கள் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் ஏனையோருக்கு தவறாக வழி நடத்தப்பட முயன்றனர் என்றே கருதப்படுவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வைப் போலவே இவர்களுக்கும் புனர்வாழ்வை வழங்க வேண்டி ஏற்படும். - என்றார். (ங-5)

### கடும்

ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அதே வேளை, ஈரானுடன் இலங்கை நெருக்கமான இராஜதந்திர உறவுகளை பேணி வருகிறது. அமெரிக்காவின் தடைகளை அடுத்து ஈரானிடம் இருந்து நேரடியாக மசகு எண்ணெய் வாங்குவதை இலங்கை நிறுத்தியுள்ளது. எனினும், அமெரிக்கா வின் தடையை மீறி, மூன்றாவது தரப்பு ஊடாக ஈரானிய மசகு எண்ணெயை இலங்கை வாங்குவதாக அமெரிக்காவுக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதைய டுத்தே, அமெரிக்கா இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ங-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரப்பந்து யாழ்.செயலகமும், கரவெட்டியும் இறுதிக்கு

யாழ்ப்பாணம்.ஒக்.28

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக அணிகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் "அரச அதிபர் கிண்ணத்துக்கான" கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்துக்கு கரவெட்டி பிரதேச செயலக அணியும், யாழ்.மாவட்டச் செயலக அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில்(ஸ்ரான்லி) மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்றன.



முதல் அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதியது.

இதில் முதல் சுற்றில் கரவெட்டி பிரதேச செயலக அணியினர் தமது அபாரமான விளையாட்டை வெளிப்படுத்தி 15:03 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டனர். ஆனால் இரண்டாம் சுற்றில் புதிய நுட்ப முறையுடன் களம் இறங்கிய மருதங்கேணி அணியினர் மளமளவென தமது அணிக்காகப் புள்ளிகளைக் குவித்தனர்.

அதன் பின்னர் தமது புள்ளிகளை உயர்த்த கரவெட்டி பிரதேச அணியினர் போராடியபோதும் இரண்டாவது சுற்றை மருதங்கேணி அணியினர் 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தமவசமாக்கினர். இதனால் மூன்றாவதும் இறுதியானதுமான சுற்று மிக விறுவிறுப்பாக அமைந்தது. இதன்போது இரு அணிகளும் மாறிமாறிப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன. இதனால் வெற்றியாளர் பக்கம் சாயும் என முடிவெடுக்க முடியாத நிலை இறுதிவரை நீடித்தது.

இறுதியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி, மருதங்கேணி அணியை 15:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தெரிவானது.

அடுத்த அரையிறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது.

இதில் முதல் சுற்றில் தனது முழுத் திறனையும் வெளிப்படுத்திய கோப்பாய் பிரதேச செயலக அணி 15:06 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ். மாவட்ட செயலக அணியை வீழ்த்தி முன்னிலை வகித்தது.

ஆனால் இரண்டாம் சுற்றில் தனது ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்த யாழ்.மாவட்ட செயலக அணியினர் புள்ளிகளை இடைவெளியின்றி அதிகரித்துச் சென்றனர். தொடர்ச்சியாக யாழ்.செயலக அணியின் புள்ளிக் குவிப்பால் கோப்பாய் பிரதேச செயலக அணியினர் அதிர்ந்து போயினர். இதனால் இரண்டாம் சுற்றை நிறைவில் மாவட்ட செயலக அணி 15:01 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இலகுவாகக் கைப்பற்றியது.

இதனால் இறுதிச் சுற்று இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது. இதனால் இரு அணிகளின் ஆட்டத்திலும் நிதானம் தென்பட்டது.

இரு அணி வீரர்களும் தமது தரப்பு தவறுகளைக் குறைத்து எதிரணியின் தாக்குதல்களை சமாளித்து தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இரு அணிகளின் புள்ளி வித்தியாசமும் நெருக்கமான நிலையில் வேறுபட்டுக் கொண்டிருந்தது. இறுதியில் மாவட்ட செயலக அணி 16:14 என்ற புள்ளி வித்தியாசத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியைத் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ஙு-422)

## கம்பர்மலை யங்கம்பன்ஸ் வீழ்த்தியது றேஞ்சர்ஸை

யாழ்ப்பாணம்.ஒக்.28

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி பெற்றுள்ளது.



இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ஙு-23)



உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணித் தலைவருக்கு நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட இராணுவ அதிகாரி வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (ஙு-23)

## சென்.யூட்ஸ் வாகை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் எவ்.ஏ. கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.யூட்ஸ் அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முல்லைத்தீவு சென். யூட்ஸ் விளையாட்டுக்கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் யுனிபைட்டைத் தோற்கடித்தது. (ஙு-23)

## பல்கலை கரம் சுற்றுப்போட்டி இறுதியாட்டங்கள் நாளை

வலி.வடக்கு.ஒக்.28

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் அணியும் இணைந்து பல்கலைக் கழக பழைய மாணவி திருமதி பானுரேகா முரளிதரனின் அனுசரணையுடன் நடத்தி வரும் கரம் ஆண்கள் அணிக்கான சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளன.

பி.ப.3 மணிக்கு மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகமும், புனித பரியோவான் கல்லூரியும், மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள



இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகமும், ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவரும் யாழ்.பல்கலைக்கழக கரம் அணியின் முன்னாள் தலைவருமான வைத்திய கலாநிதி சி.சுவதாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஙு-86)


## 'யாழ்ப்பாணச்சமர்' உதைபந்து; வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.28

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச்சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம், இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.



**மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியைத் தோற்கடித்தது.**

இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியைத் தோற்கடித்தது. (ஙு-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.28

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம்-

பி.ப.3.30 மணி

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க.

பி.ப.4.30 மணி

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் வதிர் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம். (ஙு-23)

◆ ◆ ◆

வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்-

அல் இக்பால் விளையாட்டுக்கழகம் எதிர் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம்.(ஙு-23)

◆ ◆ ◆

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச்சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்-

பி.ப.3.30 மணி

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30 மணி

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம். (ஙு-23)

◆ ◆ ◆


யாழ்ப்பாணம்,ஒக்.28


நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி [illegible]ப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஙு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பெண் திட்டி விட்டார்

வெளிநாட்டுப் பெண் தன்னை அநாகரிமாக திட்டியதாக இந்திய அணி முன்னாள் வீரர் காம்ப்ளி பொலிசில் புகார் செய்துள்ளார்.
இந்திய அணி முன்னாள் வீரரான வினோத் காம்ப்ளி(வயது 41) மும்பையின் பந்த்ரா பகுதியில் வசிக்கிறார். வாகன தரிப்பிடத்தில் ஏற்பட்ட பிரச்சினையில் அருகில் வசிக்கும் வெளிநாட்டுப் பெண்ணுடன் அவருக்கு சண்டை ஏற்பட்டுள்ளது.
இதில் அந்தப் பெண் காம்ப்ளியை அநாகரிமாகத் திட்டியதாக தெரிகிறது. இதனால் காம்ப்ளி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.
இது குறித்து காம்ப்ளி கூறுகையில், வாகனம் நிறுத்துவது தொடர்பாக எனக்கும், அந்தப் பெண்ணுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.இதில் அவர் மிகவும் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தினார். கறுப்பு இந்தியனே எனவும் என்னை திட்டினார் என்று தெரிவித்துள்ளார். (த)






# தென் ஆப்ரிக்கா அபார வெற்றி

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.
ஐக்கிய அரபு எமிரேட்சில் பாகிஸ்தான், தென் ஆப்ரிக்க அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடின.அபுதாபியில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 1:0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது டெஸ்ட் டுபாயில் நடந்தது. முதல் இன்னிங்சிலில் பாகிஸ்தான் 99 ஓட்டங்களும், தென் னாபிரிக்கா 517 ஓட்டங்களும் எடுத்தன. மூன்றாம் நாள் முடிவில், இரண்டாவது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 4 இலக்கு இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அணித்தலைவர் மிஸ்பா 42 ஓட்டங்களுடனும், ஆசாத் ஷபிக் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதனையடுத்து நேற்று நடந்த நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த மிஸ்பா, ஆசாத் ஷபிக் ஜோடி பொறுப்பாக ஆடியது. தென் ஆப்ரிக்க பந்துவீச்சை எளிதாக சமாளித்த மிஸ்பா டெஸ்ட் போட்டியில் 21 ஆவது அரைச் சதம் அடித்தார். மறுமுனையில் அபாரமாக ஆடிய ஆசாத் ஷபிக், டெஸ்ட் அரங்கில் தனது 3 ஆவது சதத்தை பதிவு செய்தார். ஐந்தாவது இலக்கு இணைப்பாக 197 ஓட்டங்கள் சேர்த்த போது மிஸ்பா 88 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய ஷபிக் 130 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 326 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுதோல்வி அடைந்தது. தென்னாபிரிக்கா சார்பில் இம்ரான் தாஹிர், டுமினி தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென் ஆப்ரிக்க அணி 1-1 என சமன் செய்தது. ஆட்டநாயகன் விருதை தென் ஆப்ரிக்க அணியின் அணித்தலைவர் ஸ்மித் வென்றார். தொடர் நாயகன் விருது தென் ஆப்ரிக்காவின் டிவில்லியர்ஸுக்கு வழங்கப்பட்டது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சார்ஜாவில் நடக்கிறது. (த)

## பந்தை நாங்கள் சேதமாக்கவில்லை

பாகிஸ்தான்- தென்னாபிரிக்கா அணிகளுக்கி டையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி டுபாயில் நடை பெற்றது. இதன்போது தென்னாபிரிக்க வீரர் டுபெலிசிஸ் பந்தை சேதப்படுத்தியது தொலைக்காட்சியில் தெரிந்தது.
இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணிக்கு விதிப்படி 5 ஓட்டங் கள் அபராதமாக நடுவர்கள் விதித்தனர். அந்த 5 ஓட்டங்கள் பாகிஸ்தானுக்கு போனஸாக வழங்கப்பட்டன.
ஆனால் நாங்கள் பந்தை சேதப்படுத்தவில்லை என்றும், நாங்கள் ஏமாற்றவில்லை என்றும் தென்னாபிரிக்க வீரர்டி வில்லியர்ஸ் கூறியுள்ளார். இதே வேளை, பாகிஸ்தா னுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 92 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த)




# இலங்கை தொடரிலிருந்து பிரண்டன் மக்கலம் ஓய்வு




இலங்கைக்கெதிராக அடுத்த மாதம் தொடங்கும் தொடரில் நியூஸிலாந்து அணி யில் பிரண்டன் மக்கலம், ரோஸ் டெய்லர் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் நவம்வர் 10ஆம் திகதி இலங்கை செல்லும் நியூசிலாந்து அணி 3 ஒரு நாள், 2 20/20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.
இதற்கான நியூஸிலாந்து அணி நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டது. இதில், அணித்தலைவர் பிரண்டன் மெக்கலம், ரோஸ் டெய்ர்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.
இவர்களுக்குப் பதிலாக, லூக் ரோஞ்சி, வேகப்பந்துவீச்சாளர் பட்லர் சேர்க்கப்பட் டுள்ளனர்.
இது குறித்து நியூஸிலாந்து அணி தெரி.வாளர் புரூஸ் எட்கர் கூறுகையில், எதிர்வரும் டிசம்பரில் எங்கள் சொந்த மண்ணில் நடக்கும் டெஸ்ட் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியை சந்திக்கி றோம். இதற்கு தயாராகும் வகையில் மெக்கலம், டெய்லருக்கு ஓய்வு தேவைப் படுகிறது.
இதனால்தான் இலங்கை அணிக்கெதிரான தொடரில் இருவரும் பங்கேற்க வில்லை என்றார்.
அணி விவரம்: வில்லியம்சன் (அணித் தலைவர்), கோரி ஆண்டர்சன், பட்லர், தேவ்சிச், [illegible], மெக்லின கன், நாதன் மெக்கலம், கைல் மில்ஸ், மில்னி, காலின் முன்ரோ, நீசம், ரோஞ்சி, ரூதர்போர்ட். (த)

# ஐ.பி.எல். போட்டிகளில் புனே வாரியர்ஸ் நீக்கம்

ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து புனே வாரியர்ஸ் அணி நீக்கப் பட்டதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.
சென்னையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் அடுத்த ஐ.பி.எல். தொடருக்காக புனே வாரியர்ஸ் அணி செலுத்த வேண்டிய உத்தரவாத தொகை 510 கோடி ரூபாவை சஹாரா குழு மம் செலுத்தாதது குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து புனே வாரியர்ஸ் அணியை நீக்குவது என முடிவு செய்யப்பட் டுள்ளது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28/10/2013

# சச்சினின் 199 ஆவது போட்டிக்கு முன்னாள் வீரர்கள் அழைப்பு



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக டெண்டுல்கர் தற்போது டெஸ்ட் போட்டியில் மட்டும் விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஒருநாள் போட்டியில் ஓய்வு பெற்றார்.

198 டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ள டெண்டுல்கர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறுவதாக சமீபத்தில் அறிவித்தார். மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான தொடருடன் அவரது 24 ஆண்டு கால கிரிக்கெட் சகாப்தம் முடிகிறது. அடுத்த மாதம் (நவம்பர்) 18ஆம் திகதியுடன் அவரது தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்.

டெண்டுல்கரின் 199ஆவது டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்திலும் (நவம்பர் 6-10), 200ஆவது டெஸ்ட் மும்பை வான்கடே மைதானத்திலும் (14-18) நடக்கிறது.

199ஆவது டெஸ்ட் போட்டியின் போது டெண்டுல்கருக்கு மிகப் பெரிய கௌரவத்தை கொடுக்க மேற்கு வங்காள கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது. அந்த போட்டிக்கான ரிக்கெட்டில் டெண்டுல்கரின் உருவப்படம் பொறிக்கப்படுகிறது.

டெண்டுல்கரை கௌரவிக்கும் விதமாக முன்னாள் பிரபல வீரர்கள் விவியன் ரிச்சர்ட் மேற்திந்தியத்தீவகள்), வோர்ன் மெக்ராத் (ஆஸ்திரேலியா) ஆகியோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து மேற்கு வங்காள கிரிக்கெட் சங்க துணைத் தலைவர் சித்ராக் மித்ரா கூறியதாவது:

ரிச்சர்ட்ஸ், வோர்ன், மெக்ராத் உள்பட முன்னாள் வீரர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை யாரும் இன்னும் வருவதை உறுதி செய்ய வில்லை. சிலர் கொல்கத்தா மைதானத்துக்கு வந்து சச்சினை நேரில் கௌரவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மிகவும் சிறப்பு வாய்ந்த இந்தப் போட்டியை நடத்த பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் 70 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அமரலாம். கொல்கத்தாவில் டெண்டுல்கர் சதம் அடிப்பார் என்ற ஆவலில் உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கார்ப் பந்தயத்தில் ஜேர்மனி வீரர் சம்பியன் கிண்ணத்தை வென்றார்



2011-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடத்தப்பட்டு வரும் இரண்டு போட்டிகளிலும் செபஸ்டியன் வெட்டலே வெற்றி பெற்று இருந்தார். இந்நிலையில் நேற்று நடந்த இப்போட்டியிலும் ரெட் புல் அணி சார்பாக கலந்துகொண்ட ஜெர்மனியின் இளம் வீரர் செபஸ்தியன் வெட்டல் அதிக புள்ளிகள் பெற்று இந்தியன் கிராண்ட் பிரீ சம்பியன்ஸ் கோப்பையை தொடர்ந்து மூன்றாவது முறையாக தட்டி சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் அவர் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தியுள்ளார். இரண்டாவது இடத்தை மெர்சிடிஸ் அணியை சேர்ந்த ரோஸ்பெர்க்கும், மூன்றாவது இடத்தை லோடஸ் அணியை சேர்ந்த குரோஸ் ஜீனும் பெற்றனர்.

தொடர்ந்து 4 உலக சம்பியன் கிண்ணங்களை அவர் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு இச்சாதனையை ஜுவான் மேனுவல் பேங்கியோவும், மைக்கேல் சூமேக்கரும் செய்துள்ளனர்.

**பிறிண்டிங்**

போட்டோ கொப்பி இருபக்கம் 2/=
டிஜிற்றல் கலர் பிறிண்ட் 10/= முதல் அனைத்து பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் சிறந்த முறையில் செய்திட
கங்கை பிறிண்டேர்ஸ்
கே.கே.எஸ் றோட், (யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
தொடர்பு -0776184567
(கல்வி மேம்பாட்டு செயற்திட்ட சேவை)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மென்பனி தூவும்''''**

**கனடா தேசத்தில்**

**படிக்க மாதம் மூன்று இலட்சம் வரை உழைக்க அரிய வாய்ப்பு**

3 வருட விசா, 7பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம் (31.10.2013)
இற்கு முன் தொடர்புகொள்ளவும்.

★ மேற்படி விசா தொடர்பான சில உண்மைப் பதிவுகள்
- 6பேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். இரண்டு பேர் விசா நிராகரிக்கப்பட்டுள்ளனர்.
- உரிய திகதியில் விசா வெற்றியளிக்காத காரணத்தினால் 5 பேர் இதில் இருந்து பின் வாங்கி உள்ளனர்.
- இது தங்களது கல்வித் தகைமைக்கு ஏற்ற வாறு சட்ட வரம்பிற்கு உட்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு நியாயமான காலம் தேவைப்படும்.

இவ் விளக்கம் கௌரவ இயக்குனர் சபைக்கட்டளைப்படி பிரசுரமாகிறது

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090



# மும்பை அணியில் சச்சின்

இந்த ஆண்டுக்கான ரஞ்சி கிரிக்கெட் போட்டி பல்வேறு நகரங்களில் நேற்று தொடங்கியது. ஏ பிரிவில் முதலாவது ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை அணி, அரியானாவை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் லாக்லியில் நேற்று ஆரம்பமாகி 30ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்த ஆட்டத்தில் மும்பை அணிக்காக சச்சின் டெண்டுல்கர் களம் இறங்கினார். மேற்கிந் தியத்தீவுகளுக்கு எதிரான தனது 200வது டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து விடைபெறும் டெண்டுல்கர் விளையாடும் கடைசி முதல் தர போட்டி இதுவாகும். அரியானா அணி இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் அஜய் ஜடேஜா தலைமையில் களம் இறங்கியது.

மேலும் டில்லியில் நேற்று தொடங்கிய பி பிரிவு ஆட்டத்தில் எல். பாலாஜி தலைமையிலான தமிழக அணி, சர்வீசஸ் அணியை சந்திக்கிறது.(400)

# 20/20 முதலாவது போட்டியில் பாகிஸ்தான் இந்தியா மோதல்

T20 ™
ICC WORLD TWENTY20
Bangladesh 2014

20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த வரு டம் பங்காளதேஷில் நடை பெறும் என ஏற்கனவே ஐ.சி.சி. அறிவித்தது. இந்நிலையில் இன்று அதிகாரபூர்வமான போட்டி அட்டவணையை அறிவித்துள்ளது. அதன்படி மார்ச் 16 ஆம் திகதி போட்டி தொடங்கி ஏப்ரல் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ள. மார்ச் 16 ஆம் திகதி தகுதிச் சுற்று போட்டி நடக்கிறது. மார்ச் 21 ஆம் திகதி லீக் சுற்று ஆரம்பிக்கிறது. ஏப்ரல் 3 ஆம் திகதி மற்றும் 4ஆம் திகதி அரை இறுதிப் போட்டியும் , ஏப்.6ஆம் திகதி இறுதிப் போட்டியும் நடக்கிறது.

போட்டியில் பங்குபெறும் அணிகள் குழு-1, குழு-2 என பிரிக்கப்படுகிறது. குழு-1 இல் உள்ள அணிகள் மற்ற அணிகளுடன் ஒருமுறை மோத வேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணி அரை இறுதிக்கு முன்னேறும். அரை இறுதியில் குழு-1-இல் முதல் இடம் பெற்ற அணி, குழு-2 இல் இரண்டாவது இடம் பெற்ற அணியுடனும், குழு-2 இல் இரண்டாம் இடம் பெற்ற அணி, குழு2இல் முதல் இடம் பெற்ற அணியுடனும் மோதும். இதில் வெற்றி பெற்ற அணிகள் இறுதிப்போட்டியில் மோதும்.

குழு-2இல் இந்திய அணி இடம்பெற்றுள்ளது. அதே பிரிவில் பாகிஸ்தான், ஆஸ்திரேலியா,மேற்கிந்தியத் தீவுகள் என்பன உள்ளன, தகுதிச் சுற்றில் ஏ பிரிவில் முதல் இடம் பெறும் அணியும் இடம் பெற்றுள்ளது. மார்ச் 21 ஆம் திகதி இந்தியா தனது முதல் போட்டியில் பரம எதிரியான பாகிஸ்தானை எதிர் கொள்கிறது. மார்ச் 23 ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகள்,எதிர் கொள்கின்றது 28 ஆம் திகதி தகுதிச்சுற்றில் ஏ பிரிவில் முதல் இடம் பெறும் அணியுடனும் மோதுகின்றது. (400)

**ENGLISH PERSONAL CLASS**

மாணவர்கள், தொழில் புரிவோர்களுக்கானது
அனைத்துத் திறன்களிலும் தேவைக்கு ஏற்ப பயிற்சிகள் வடிவமைக்கப்படும்.
அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்
தொடர்புகளுக்கு:-077 9309740

FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
**FRENCH CLASSES**
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(8-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am.
No. 23, Palaly Road, ஆரியகுளம், (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.09.13 Mon at 4.30pm.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்கு உண்டு.
4 ½ ரக்ரர் 18, 000/=
தொடர்பு : கண்ணா
077 6766499, 0777 590792
(39520)
(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.